8074
Q1:38
3960
31/3

உ

ஸ்ரீ மகாகணபதி துணை.

KOVILOOR
MADALAYAM
மடாலயம்

# பஞ்சநத மான்மியம்

&

# ஐப்பேஸ மான்மியம்.

என்கிற

## திருவையாற்றுப் புராணம்.

இஃது தஞ்சை சமஸ்தான வித்வான் திருவையாறு ஸ்ரீ சாமாசாஸ்திரியவர்களால் வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு ஷை யார் குமாரர் ஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரிகளால் பிரசுரிக்கப்பட்டது.

**Second Edition**

பிர்மானந்த பிரஸ், திருவையாறு.

All Right Reserved

விலை] 1937 [அணா 8

1862/4
1862/4

TIRUPPOOVANA MADAM.
31/3

உ

ஸ்ரீ மகாகணபதி துணை.

# பஞ்சநத மான்மியம்

&

# ஜப்யேஸ மான்மியம்.

என்கிற

## திருவையாற்றுப் புராணம்.

இஃது தஞ்சை சமஸ்தான வித்வான் திருவையாறு ஸ்ரீ சாமாசாஸ்திரியவர்களால் வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு ஷை யார் குமாரர் ஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரிகளால் பிரசுரிக்கப்பட்டது.

**Second Edition**

பிர்மானந்த பிரஸ், திருவையாறு.

All Right Reserved

1937

விலை] [அணா 8

# அறிவிப்பு.

இப்புஸ்தகத்தையோ அல்லது அதின் எந்த பாகத்தையோ என்னன்னியில் யாருக்கும் எடுத்து பிரசுரிக்க உரிமை யில்லை மீறி நடப்பவர்கள் சட்டப் படி நடவடிக்கைக்குள்ளாவார்கள் என்பதை அறியவும்.

சா. சுப்பிரமணிய சாஸ்திரிகள்,

திருவையாறு.

31/3

# முகவுரை.

பெறுதற்கரிய மானிட ஜென்மம் படைத்த பலரும் சித்த சுத்தியும் ஆன்மசுத்தியும் அடைந்து முத்திபெற ஸாதனமா யுள்ளவைகளில் க்ஷேத்திரங்களும் தீர்த்தங்களுமாகும். அப் பெருமைவாய்ந்த க்ஷேத்திரங்களில் திருவையாறும் தீர்த்தங் களில் காவேரிநதியும் தலைசிறந்தவை. இது புராணப் பிரசித்தமானது. சமய குறவர்களால் பாடல்பெற்ற ஸ்தலம். இந்தஸ்தலபுராணத்தை புராண கிரந்தங்களி லிருந்து தஞ்சாவூர் அரண்மனை வித்வான் காலஞ்சென்ற எனதுதகப்பனுர் பிர்ம்மஸ்ரீ சாமா சாஸ்திரிகளவர்கள் சென்ற பார்த்திப வருஷம் கார்த்திகை மாதத்தில் தமிழில் வசனரூபமாகவெளியிட்டனர். அதை நான் இப்பொழுது மருமுறை வெளியிட்டிருக்கிறேன். அதில் ஏதேனும் குற்றம் குறைகள் இருந்தால் அதை மன்னித்து இன்நூலை ஆத ரிக்வேணுமாய் சஜ்ஜனங்களை கேட்டுக் கொள்ளுகிறேன்.

*ஜோதிஷர், சா. சுப்பிரமணிய சாஸ்திரியார்,*

*தஞ்சை அரண்மனை வித்வான்,*

திருவையாறு.



உ

# பாயிரம்

## ஆதிவிநாயகர் வணக்கம்.

பூமேவு திருமகளுங்கலைமகளும் மகிழ்ந்துறையும் புகனழயாற்றுப்
பாமேவு திருத்தளிவீற்றிருந் தருளியன்பினொடு பணிவோர்கட்குத்
தாமேவுசொற்பொருளு முதுக்குறைவு மளவாத சுகமு நல்கு
மாமேவு மதிவேணி யாதிவிநாயகனிரு தாள் வணக்கஞ்செய்வாம்.

## பஞ்சநதீசுவரர் வணக்கம்.

திருவளருங்கடற் புவியோர்துரி சறுக்குங்காவிரி சூழ்திருவையாற்றில்
அரும்மறை சொல்லறம் வளர்த்த நாயகி யோடமர்ந்துயிர் களளவில்போக
மருவவினி தருளிப்பின் வலச்செவியிற் றாரகமா மனுவுரைத்துக்
கருதரியமுத்தி யுறவருள் செம்பொற்சோதிகழல் கருத்துள்வைப்பாம்.

## தருமாம்பிகை வணக்கம்.

வரியிறைவண்டினங் கொழுதிப்பசும்பொற்றாதளைந்துயர் செவ்வழிப்பண்பாட
விரிதருமென்றுணர் நறவம்பொழிய மயிலகவுபொழின் மிளிரையாற்றிற்
பரிவுறு பல்லகிலாண்டத் துயிர்கடழைத் தோங்கமறை பரவி வாழ்த்தப்
புரிவொடுவரழறம் வளர்த்த நாயகிநூ புரச்சரணம் போற்றிவாழ்வாம்.

## ஓல் விநாயகர் வணக்கம்.

பைந்தருவா னிதிமணிமன் னிதியுலகத் திருந்துமுறை பசியா லிம்பர்
வந்தமரர் கனியேற்ப வுணவருதது மந்தணர்வாய் மறை முழக்கஞ்
சந்ததமும் பொலிதிருவையாற்றுயர்தென் வாயுலகு தழையமேவுஞ்
சுந்தர வண் டிமிரி தழி முடியோலக் கணபதிதா டொழுதல் செய்வாம்.

## சுப்பிரமணியர் வணக்கம்.

வெண்டரங்க மெறியவரி வளைக்குலஞ்சூ லுளைந்த லறிவிடுசுடர்ப்பூந்
தண்டரளத் தாவயங்கும் வரம்புயரும்தடம்பணைசூழ் தருமையாற்றிற்
கொண்டனிறத் தரிபிர மற் கரியபிராற் குபதேசக் குருவாய்த்தோன்றித்
தொண்டர்களுக் கினியவரந் தருகுமர வேளிருதா டுதித்து வாழ்வாம்.

## ஆட்கொண்டேசுரர் வணக்கம்.

மறையவர்கள் குலத்துதித்து நான்மறையா றங்கமெலா மகிழ்வினோதித்
தறைபுகழன் புடனடைந்த சுசரிதனுயந் திடவசிமுத் தலைச்சூலத்தாற்
பிறையெயிற்று மறலியுரங் கிழித்தருளி யையாற்றிற் பிறங்கு தென்வா
யுறைதருமாட் கொண்டபிரான் மலரடியை யனுதினமு முன்னி வாழ்வாம்.

## நந்திகேசுரர் வணக்கம்.

மன்னுபுக ழையாற்றி னருந்தவச்சி லாதமுனிமகவாய் வந்து
பன்னுமிக மாகமமெ லாமுலகந் தழைவெய்தப் பான்பாற்றேர்ந்து
மின்னுமெழிற் கயிலையில்விண் ணவர் மகுடமுடிதாழ வீற்றிருக்குங்
கொன்னுலவு நெடுஞ்சூற் படைதரித்த நந்திகழல்குறித்து வாழ்வாம்.

## சத்தமாதர்கள் வணக்கம்.

தஞ்சமெனத் தொழுதேத்து மிந்திரனுக் குயர்விசய ந்தன்னை நல்கும்
விஞ்சுபுகழபிராமி திகழுமகே ஸ்வரியழகு மிளிர்கௌ மாரி
மஞ்சுறுநா ராயணிவா ராகியிந்தி ராணி மகிழ்காளி யென்னும்
எஞ்சலிலாப் புகழ்மருவுசத்தமாதரை யுமன் போடேத்தி வாழ்வாம்.

## திருமகள் வணக்கம்.

பல்வளமும் பொலிந்தோங்கு திருவையாற் றருமறைகள் பரவமேவித்
தொல்வினையின் றொடராறுத்த கவுதமர்க்கும் வினைபொலிசு ராதிபர்க்கும்
மல்குபெருவாழ்வ ருளிப் போற்றுமடி யவர்வறுமை மாற்றிநாளுஞ்
செல்வமொடு பல்வாழு நல்குசெழுங் கமலையடி சென்னிசேர்ப்பாம்.

## அறுபத்துமூவர் வணக்கம்.

தந்தையடி சிதைத்துலகி னிந்தையற வரிபிரமர் தம்மாற் காணா
வெந்தையடி கண்டதிருச் சேய்ஞலூர்ப் பிள்ளையடி யிறைஞ்சியேத்தி
முந்தைமறை முடியமல னடி யெய்து மறுபத்து மூவராய
சுந்தரஞ்சேர் திருத்தொண்டரடிமலர்கண் முடியிலுறத் தொழுதல் செய்வாம்.

உ

# புராண வரலாறு.

நெடியகடல்சூழ்ந்த பெரியவுலகத்தில், திருத்தமாகிய பலதளிர்களும் மலர்களும் நெருங்கிச்செங்கதிர்வெப்பு றுமனி ழலையுடையதும், அந்தரநாட்டமரரும் புகழுமழகினையுடையதும், முடங்கியவளையை யுடைய சிங்கத்தோடு கரியயானையும் முதிர்ந்தவலிமையையுடைய புலியோடு மானும், விரிந்த சிறகையுடைய கருடனோடு பாம்பும், பகைகடிந்தென்று நட்புற்றிருக்கின்றமையால் தாருகாவனரிஷிகளாலேவிய பாம்பையும் சந்திரனையும் பகையறக்கொண்ட பரமசிவன் செஞ்சடைக் காட்டையொப்பதும், தவத்தோர்கள் கோபத்தால் விரைவி

ஞசமாகும் வண்ணஞ் சபிக்கவும், அவர்களாலிகழவும், பகைவராலலேக்சவும், பவளம் போன்ற விதழையுடைய விலக்குமி வசிக்கின்ற மார்பிற்றுளபமாலேயணிந்த திருமாலால் வேரோடும்பறித்ததுமான கற்பகவனமும் தனக்கொப்பில்லாதனும், அசோகம், பலா நாவல் குருந்து அரசு மருது கரவீரம் பாடலம் மாவயம் வடம் மகிழ் தெங்கு கொன்றை சோதிசுர புன்னே வாழை கரந்தை நரந்தம் கல்வியாளர் போன்றுமணந்து தண்ணென்றசந்தனம் யாவருக்கும் பயன்படுகின்ற செல்வர்போன்ற தளிர்த்துப் பழுத்தமர, உலோபர்களேப் போன்ற உடல் முழுதங்கருக்கு மட்டையையுடைய பனே முதலான விருக்ஷங்களேயுடையதுமான நைமிசாரணியத்தில், மரவுரிதரித்தவரும், தெய்வத்தன்மையுள்ள விபூதியோடு ருத்திராக்ஷம் புனேந்த மேனியாரும், மறைமுதலான கலேயுணர்ச்சியுடையரும், சென்ம வியாதியை நாசம்செய்கின்ற பஞ்சாக்ஷரமியைந்த யுள்ளத்தை யுடையருமான அத்திரி ததீசி காத்தியாநர், சுனப்புச்சர், அகஸ்தியர், சுகர், மாதேவர், கண்ணுவர் கருக்கர், பிருங்கி, சதாநந்தர் மார்க்கண்டர், பிருகு, போதாயனர், ஆபத்தம்பர், இலகிதர், சுதீக்கணர், சாண்டில்லியர், பாரத்துவாசர், புலகர், சந்திரசூடர், புச்சகர், புலத்தியர், சாபாலி, கவுதமர், சனற்குமாரர், நாரதர், சம்பு, மாணி, மாண்டவியர், அரபத்தர், காசிபர், விசுவாமித்திரர், கலேச்சிருங்கர், கற்கி, கூசுமாண்டர், மாதேவர், குசுகு, பார்க்கவர், சனந்தர், ஆசுவிலாயனர், தால்பியர், கிருதர், சங்கர், அகமருடணர், பராசரர், சநாதர், திருதர், சனகர், வசிட்டர், பிரசண்டர், துருவாசர், பருப்பதர், சிலாதர், தத்தாத்திரேயர், சத்தி, தவுமியர், சுமந்து, பப்புரு வாமதேவர், சரபங்கர், வச்சர், உபமன்னியர், கண்டு அருதகர், சவுனகர், ஏவலர், சுனர், அசிதர், விந்து, பாணினி, விபண்டகர், காலவர், அங்கிரசர், சதாதபர், சுனச்சேபர், சருச்சார், இரைப்பியர், வசு, திரணவிந்து, முற்கலர், கபிலர், அட்டவக்கிரர், காணர், சுனகர், உரோமசர், பகவர், கவுண்டின்னியர், பயிலவர், உக்கிரவீரியர், தூமபானர், திரணதூமாக்கினி, செமதக்கினி, முதலான முனிவர்கள் கூடிச் செய்தயாகமுடிவில் சத்துவ குணம் போர்த்தென்ன வெண்பூதிதயங்கியமேனியும், பவளக்கொத்தெனத் திரண்டு நீண்டசேவணியும், கோத்தணிந்த திருவக்கமாலிகையும், பரிசுத்தமாகிய வைந்தெழுத்தை யெப்பொழுதுந் தியானிக்கின்ற சிந்தையுமுடைய சூதமாமுனிவர் வந்தார், வந்த

வரை நைமிசாரணியவாசிகளாகிய அத்திரிமுனி முதலான
வர்கள் கண்டு இளங்கன்றானது தன்தாய்வரவு கண்டெதிரோ
டுந்தன்மை போல் விரைந்தெதிர்கொண்டு சிந்தையுண் மகிழ்
ந்து வந்தனை புரிந்து முகமலர்ந்து அன்பினாலருக்கிய பாத்தி
யமுதலாக முறைப்படி செய்கடன் புரிந்து இனியவாசனத்
திருத்திச் சந்திரனைத் தாரகைக் கூட்டஞ் சூழ்ந்தாற்போற்
சூழ விருந்து ஐயனே' நின்வரவால் இச்சென்ம மெமக்
குப் புனிதமாகியது. இத்தினநற்றினமாகியது என்று முக
மன் கூறி மறைமுழுதுணர்ந்த வியாச முனிவரிடத்து மயக்க
மறயாவு நன்குணர்ந்தோய்! ரோமவரிடணன் காதலனே!
இறையவனே! யாங்களுய்யும்வண்ணம் பதினெண்புராணங்க
ளுளொன்றான பிர்ம்மகைவர்த்தத்திலுள்ள ஸ்ரீ மத் பஞ்சநத
மான்மியத்தைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்றார்கள்.
அப்போது நைமிசாரணியவாசிகளாகியமுனிவர்களை நோக்கிக்
குறுநகைகொண்டு மலர் முகம் விளக்கிச் சடைமுடி துளக்கி
நன்று நன்றென்று வேட்டவர்மலங்களை வாட்டி வெம்பவத்தை
வீட்டி முத்திகொடுக்கின்ற ஸ்ரீ மத் பஞ்சநத மான்மியத்தை
ஆதிகாலத்தில் சூரியவம்சத்திற் பிறந்த தேவவர்ம ராசனானவன், பிராம்மணோத்தமரும் சிவபக்த சிரேஷ்டருமான சும
ந்துமகரிஷியை நோக்கி மகாசிலாக்கியகுணமுள்ள முனிசிரே
ஷ்டரே! அறுபத்தாறுகோடி தீர்த்த மகத்துவத்துடன்
காவேரிநதியின் பெருமையையும், விருத்தாசலேஸ்வரர் பெரு
மையையும், மாயூரநாதர் பெருமையையும், தேவரீர் திருவாய்
மலர்ந்தருளக் கேட்டானந்தமடைந்தேன். இப்பொழுது ஸ்ரீ
மத் பஞ்சநத மான்மியத்தைக்கேட்க மிகுந்த விருப்பமுள்ள
வனாக இருக்கின்றேனென்று சொல்ல அரசனை நோக்கி
அரசனே! அரசகளுக்குரிய உலக விவகாரத்தை விட்டு உலக
த்திலுள்ள சகல ஜீவகோடிகளுங் கேட்டு ஆனந்தமடைந்து
கடைத்தேறும்படியான ஸ்ரீமத் பஞ்சநத மான்மியத்தை நீ
கேட்க விருப்பமுற்றமையால் உன்னைப்பார்க்கிலும் உத்தம
குணத்தையுடையவர்களொருவரும் இவ்வுலகத்திலில்லை. இந்
தப்பஞ்சநதமாஹாத்மியசிரவண படனாதிகளால் யாவரு
முத்கிருஷ்ட பதவியை அடைகிறார்கள். அந்த ஸ்தலத்தின்
பெருமையைப் பூர்வ புண்யமில்லாதவர்களறியமாட்டார்கள்.
பரமசிவனானவர் பிரிவின்றி எக்காலமும் அங்கு வசிக்கின்றார்
என்றும், அன்றியுமந்தஸ்தலத்தின் பெருமையை ஆதிகாலத்
தில் பார்வதிதேவியார் பரமசிவனை நோக்கித் தேவதேவா
மஹாதேவா பிராணநாயகா பஞ்சநத ஸ்தலத்தின் மான்மிய

த்தை எனக்குச்சொல்லியருளவேண்டுமென்று கேட்க அப்பொழுது பரமசிவன் பார்வதிதேவியை நோக்கிப் பெண்ணே பூர்வத்தில் காவேரிதீரத்தில் வாசஞ்செய்தவரும், பிராமணோத்தமரும் வருணாசிரம தருமத்தை விடாதவரும் வேதவேதாங்கபாரங்கதரும் திரிகால சிவபூஜா துரந்தரரும் திரிபுண்டராங்கித திருமேனியையுடையவரும் உருத்திராக்ஷமாலிகா பரணரும் எக்காலமும் பஞ்சாக்ஷர மந்திரஞ் சபிக்கின்ற நாவையுடையவருமான நாதசன்மாவை அவர் பனையாளாகிய அனவத்தியாதேவி என்பவள் நமஸ்கரித்தெழுந்து நின்று ஸ்வாமி உலகத்தில் தெரிசித்தளவில் முத்தியையும் ஸ்நானத்தளவில் பாபவிமோசனத்தையும் கொடுக்கத்தக்க க்ஷேத்திரங்களையும், தீர்த்தங்களையும் தங்கள் கிருபைக்கிடமாகிய எனக் நத்திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்றுகேட்க நாதசன்மாவானவர் தன்மனையாளாகிய அனவத்தியாதேவியைப் பார்த்துப் பெண்கள்நாயகமே மரணத்தால்முத்திகொடுக்கின்ற காசி, மேல்கடலோரத்திலுள்ள திருகோகரணம், சோமநாதம், விருபாக்ஷம், திருக்கேதாரம், மல்லிகார்ச்சுனம், திருவேகம்பம், திருக்காளத்தி விருத்தாசலம் அருணாசலம் ரிஷபாசலம் சீர்காழி, திருவிரிஞ்சை வைத்தீஸ்வரன்கோவில், திருவெண்காடு, திருவாரூர், வேதாரணியம், கவுரிமாயூரம், திருவிடைபருதூர், கும்பகோணம்' ஸ்வாமிமலை, திருவானைக்கா திரிசிராமலை, மதுரை, இராமேஸ்வரம், முதலாக மற்றுள்ள ஸ்தலங்களைப் பலகால் தெரிசித்தடையும் பயனை யொருக்கால் தெரிசித்தளவில் கொடுக்கத்தக்க திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம், என்கிற சப்தக்ஷேத்திரங்களுள் முதன்மையாயுள்ள திருவையாற்றின் மான்மியத்தை யுனக்குச்சொல்கிறேனென்று நாதசன்மா அனவத்தியாதேவிக்குச் சொல்லியவாறு உனக்குச்சொல்லுகிறேனென்றுபரமசிவனானவர் பார்வதிதேவியாருக்குச் சொல்லியருளினார். அவ்வண்ணமே உனக்குச்சொல்லுகிறேன் நீசிரத்தையாகக்கேட்கக்கடவாயென்றும் சுமந்திரிஷி யானவர் தேவவர்ம மகாராஜாவுக்குச் சொல்லியருளினார். அதை இப்பொழுது உங்களுக்குச்சொல்லுகிறேனென்று சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினார்.

புராண வரலாறு முற்றிற்று.

## 1-வது துஷ்பிரவர்த்தி முத்தி அடைந்த அத்தியாயம்

வர்ணாச்சிரம தருமத்தைவிட்டவனும் எப்பொழுதும் பிறருக்குக்கெடுதிவிளைப்பவனுமாகிய துஷ்பிரவர்த்தி யென்னு மோர் பிராமணனிருந்தான். அவன் அதிரூபலாவணியமுள்ள தன்தாயை தன்பிதாவில்லாத வேர்ர்காள் அதிமோகமயக்கத் தாற் புணர்ந்தான். அச்சமயத்தில் தன்பிதாவானவர் வந்தார். வந்தவரை அம்மகாபாதகன் கண்டு காமமயக்கத்தாற் பழி பாவங்கட்கஞ்சாமற் கோடரியால் வெட்டி அவர்உயிரைப் போக்கி முன்போலவே தன் தாயைப்புணர்ந்தான். உபநயந ஸம்ஸ்காரம் பண்ணிவைத்ததாற் குருவும், அன்னதானம், அபயதானம், வித்தியாதானம், ஜெனனம், முதலான காரணத் தாற் பிதாவும், தவசீலம் ஒழுக்கம், அதிதிபூஜை, சிவபூசை க்ஷேத்திர தீர்த்தாடனம், வேதமோதல் முதலான காரணத் தால் பிராம்மணோத்தமருமான தன்பிதாவைக் கொலைசெய்த நிமித்தம் பிரம்ஹத்தியும், யாவரும்மாதுருபூஜை செய்யவேண் டுமென்று வேதத்தில் விதித்திருக்க அதைவிட்டுத் தன்தா யைக்கற்பழித்துப் புணர்ந்ததால் மகாபாவமும் அவனைப் பற்றி க்கொள்ள அதனாற் சித்தப் பிரமையுண்டாகித் தன்தேசம், தன்கிரகம், சுற்றத்தார் முதலானவர்களையும் விட்டு, அநேகதே தசம் மலை காடு, முதலானதுகளிற்றிரிந்து அவசமுய்க் கருநிற மடைந்து பசி, தாகத்துடன் அலைந்து அனேககாலம் சென்ற பின், திருவையாற்றில்காவேரிநதிக்கரையையடைந்து சிலகா லம்சென்றபின், அனேகஜனங்கள் மாகமாசத்தில் ஒருநாள் சூரியோதயத்திற்குமுன் கூட்டமாக ஸ்நானஞ்செய்ய வந்தார்கள். அவர்களைத்துரத்திக்கொண்டு அந்தமகாபாதகன் பின் சென்றான். அந்தக்காலத்தில் புண்ணிய நதியாகிய காவேரியில் ஸ்நானஞ் செய்துகொண்டிருந்த ஓர் பிராம்ம ணோத்தமர் தன்னிரண்டு கைகளாற் சலத்தை முகந்து அவன்மேல்வீச அவனைப்பற்றியிருந்த பிரம்மகத்தியானது அவனைவிட்டு நீங்கித் திவ்விய சரீரத்தையும் கலக்கமில்லாத அறிவையுமுடையவனாகி இங்கு நாம் வரவேண்டிய காரணம் யாதென்று ஆலோசித்து நிற்குங்காலத்தில் பூர்வ புண்ணியத் தாற் காவேரி ஜலமானது இம்மாகமாசத்திலுன் சரீரத்திற் பட்டமையாலுன்னைப் பற்றிருந்த பிர்ம்மஹத்தி நீங்கியது, உன்னாற் செய்யப்பட்ட மாதுர்கமன முதலான கொடிய

பாவங்களுக்குக் கும்பீபாகமுதலான அசக்ய நரகங்களில அநேக கற்பகாலங் கிடந்து நீ வாதனை அடையவேண்டியது. அப்பாவங்களை அனுபவியாமலிருக்கவேண்டினால்உன் மரணபரியந்தம் பஞ்சநதத்தில் வசித்துப்புண்ய தீர்த்தமாகிய காவேரியில் தினந்தோறும் திரிகாலஸ்நானஞ்செய்து பரமசிவதரிசனம் பண்ணிக் குருபதேசத்தாற் பஞ்சாக்ஷர ஜபம் தினமொன்றுக்குப் பதினாயிரஞ்சபித்து நூறு பிரதக்ஷணமும் ஏகாதசருத்ர ஜபமும் ஏகவாரபோசனமும் வர்ணாச்சிரம தர்மாசரணமும் உறுதியாகச் செய்வாயேல் உன்பாவப் பிராயச்சித்தமாகும். இல்லாவிடில் அநேக கற்பகாலம் நரகவாதனை யடைவாயென்று ஆகாயத்தில் அசரீரி உண்டாயிற்று அவ்வசரீரைக்கேட்டு தன் மரணபரியந்தம் அவ்வாறே திருவையாற்றில் வசித்துக் காவேரி ஸ்நானமுதலானதும் செய்து மரணமடைந்து, இந்திரலோகத்தைப் பெற்றுப் பின்பு பூர்வ புண்ணியப் பிரபாவத்தால் நூறுசனனம் பிராமணனாகப் பிறந்து கடைசியில் சந்நியாசம் பெற்று இந்திரிய நிக்கிரகஞ்செய்து விரக்த்தனாகப் பிரவாமுத்தியடைந்தான். துஷ்டபிரவர்த்தி மிகக்கொடிய பாவங்களைச்செய்தமையால் நூறுதரம் பிறந்து முக்தி யடையவேடியதாயிற்று. புண்ணியாத்மாக்கள் ஒரேசன்மத்தில் முத்தியடைவது சத்தியம்.

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## 2-வது சிவப்பிரியர் சாரூப சாமீபமடைந்த அத்தியாயம்.

காவேரி தீரத்திற் பிறந்தவர்களும், அறுபத்துநாலுகலைக்கியானங்களை யறிந்தவர்களும், நாலுவேதம் ஆறங்கம், மீமாஞ்சை, நியாயசாஸ்த்திரம், பதினெண்புராணம், தர்மசாஸ்திரம் முதலானவைகளை ஐயந்திரிபறவுணர்ந்தவர்களும், காமக்குரோத லோப மதமாச்சரிய மென்னும் அறுவகைக் குற்றங்களை நீக்கினவர்களுமாகிய சிவப்பிரியரென்றும், சுதர்மாவென்றும் இரண்டு பிராமணோத்தமர்களிருந்தார்கள். அவ்விருவரில் சிவப்பிரியர் திருவையாற்றில் காவேரியில் ஐந்து வருஷம் ஸ்நானம் செய்து மகாமகத்திற் சூரியோதயகாலத்தில் நியமவிதிப்படி விசேட ஸ்நான தானஜப ஹோம தர்ப்பணாதிகளு

டன் மகாதபசு செய்ததுமன்றிக் கங்கையையுஞ் சந்திரனையுந் தரித்த சடையையுடையவரும் நீலகண்டத்தையுந் திருநேத்திரத்தையுமுடையவரும் உமைகலந்த வாமபாகத்தையுடையவரும் பக்தசம்ரக்ஷகருமாகிய பரமசிவனை அருச்சனைசெய்தும் சிவாலயத்திற்றிருவிளக்கிட்டும் ஏகாதசருத்திர ஜபத்துடன் நூறு பிரதக்ஷணமும் தாரகமந்திரமாகிய பிரணவத்துடன் முப்பதினாயிரம் பஞ்சாக்ஷர ஜபமும் சாபால உபநிஷதத்திற் சொல்லிய விதிப்படி விபூதியுத்தூளனத்துடன் திரிபுண்டரமு உருத்திராக்ஷம்கோத்த உபவீதமும் உருத்திராக்ஷமாலிகையுமுடையவராய்ச் சிவபணி செய்தும், பஞ்சனதர்ப்பிரீதியாக அறுவகைச்சுவையுடன்பிராமணபோஜனமும்செய்துவந்தார். சுதர்மாவானவர் வேதத்திற்சொல்லியவிதிப்படி சோமயாகமுதல் அநேக யாகங்கள் செய்து, யாகமுடிவில் பிராமணருக்கு அளவில்லாத சொர்ணதானத்துடன் அன்னதானமுஞ்செய்து, தன்னாச்சிரமத்தில் வசித்தார். இவ்வாறு நெடுங்காலம் நடத்தி அவ்விருவர்களும் ஏககாலத்தில் மரணமடைந்தார்கள். அப்பொழுது இந்திரனானவன் தன் தூதரைநோக்கி அநேக தர்மங்களைச் செய்த புண்ணியான்மாக்களாகிய சிவப்பிரியர், சுதர்மாவென்பவரிருவரையும் என்னுடன் ஏகாசனத்தில் வீற்றிருக்க அழைத்துவாருங்களென்று உத்திரவுகொடுத்தான். அப்பொழுது தேவதூதர்கள் நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டுத் தேவமாதர்களால் விளங்குகின்ற விமானத்துடன்பூமியில்வந்து அவ்விருவர்களையும் அழைத்துக்கொண்டுபோந் தருணத்தில் கைலாசபதியாகிய பரமசிவனானவர் நந்தியம்பெருமானை யழைத்து நீ இப்பொழுதே சிவகணங்களுடன் சென்று இந்திரனுலகத்திற்குச் செல்கின்ற சிவப்பிரியரென்னும் சிவபக்தனை நம்மிடத்திற்கு அழைத்துவாவென்று கட்டளையிட்டருளினார். அவ்வாறே நந்திகேசுவரர் சிவகணங்களுடன் சென்று இந்திரலோகத்திற்கேகுஞ்சிவப்பிரியர் சுதர்மா என்பவரிருவரிற் சிவப்பிரியரை மாத்திரம் அழைத்துக்கொண்டுவந்து திருவையாற்றிற் செம்பொற்சோதியாமருங்குவிடுத்தனர். உடனேபரமபதியானவர் சிவப்பிரியருக்கு சாரூப்பியமளித்தருகில் வைத்தனர். பின்பு தேவதூதர்கள் சுதர்மாவொருவரை மாத்திரமழைத்துக்கொண்டுபோயமராவதிக்கிறைவனாகிய இந்திரன்முன் விடுத்தனர். சசிமணாளனாகிய சுரர்குலாதிபனே! தேவரீருத்திரவின்படி சிவப்பிரியர் சுதர்மாவிருவரையும் அழைத்துவருமார்க்கமத்தியில் நந்திகேசுவரர் சிவகணங்களுடன்வந்து பலாத்காரமாகச் சிவப்பிரியரைமாத்திரம் அழைத்துக்கொண்டு போய்விட்டாரென்று சொன்னார்கள்.

அதைக்கேட்ட விந்திரனுடனேவச்சிராயுததாரனாக ஐராவதத்தின்மேலாரோகணித்துப் பஞ்சநதத்தையடைந்துசிவகணத்தின் மத்தியில் வேத்திரபாணியாக வெழுந்தருளியிருந்த நந்திதேவரைத்தரிசித்துச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து வாய்பொத்திக் கைகட்டிநின்றான். நின்றவிந்திரனை நந்திதேவர் பார்த்து இந்திரனே! சுகமாவென்று வினவி இப்பொழுதிங்கு நீ வந்தகாரியமென்ன? அசுரர்களாலேதாவதிடுக்கணுண்டாமென்றுகேட்டார். இந்திரன், சுவாமி சிலாதமுனிவர்புத்திரனே! எப்பொழுதுஞ் சிவபூஜாதுரந்தரனாகிய அடியேனுக் கசுரரால் யாதொரு தொந்தரவுமில்லை. ஆதிகாலத்திற்பரமசிவனெனக்குப்பட்டாபிஷேகஞ்செய்து, புண்ணியகருமத்திற்றன்னுலகபதவியையளித்துவாவென்று கொடுத்த வுத்திரவின்படியே சிவப்பிரியர்சுதர்மாவிருவரையும் தூதர்களென்னுலகத்திற்கழைத்துவருமார்க்கத்திற்றுங்கள்சிவகணத்துடன்வந்து, சிவப்பிரியரைமாத்திரமழைத்துவந்த, காரணந்தெரிந்துகொள்ள வந்தேனென்றான். நந்திகேசுவரரிந்திரனைப்பார்த்து இந்திரனே! திருவையாற்றில் வசித்துச்செம்பொற்சோதியரைத்தியானித்துத் தெரிசித்தவர்களுக்கு மீண்டுமண்ணுலகத்திற் பிறக்குமுன்பதவிமுதற்பிரமவிஷ்ணுக்கள் பதவியுமருக்கமல்ல அன்றியுமவர்களுக்குக்கருப்பவாசம், நரகம், மகாபாதகம், பலகாரணத்தாற் கொஞ்சம் கொஞ்சமாகச்சேரும்பாதகம்ஒருவனை அபாத்திரனாகச்செய்யும்பாதகம் மலபாதகம்பிரகீர்ணபாதகமுதலானதும் கிடையாதாகையாலிந்தச்சிவப்பிரியரைந்து வருஷகாலம் புண்ணியநதியாகிய காவேரியில் ஸ்நானஞ்செய்ததோடு மாகஸ்நானமும், சிவகைங்கர்யமுஞ்செய்தாற் சிவலோகத்திற் சிவரூபத்துடன் சிவசமீபவாசமடைந்தனர். சுதர்மாவானவர், சிவகைங்கரியமின்றிக் கேவலங்கர்மத்தைமாத்திர மனுஷ்டித்துவந்தவராகையா லதற்குப் பிரயோசனமான விண்ணுலகமாகிய சுவர்க்கலோகவாசங் கிடைத்தது. நீ இனிமேலவரவர்கள் செய்யுங்கருமத்தைத் தெரிந்து நடத்துவதோடு இதை எமன்முதலானவர்கட்குந் தெரிவித்து அரசுசெய்யக்கடவாயென்று கட்டளையிட்டருளினார். இந்திரனானவன் மகாலிங்கதரிசனத்தோடு நந்திகேசுவரரைவணங்கி விடைபெற்றுக்கொண்டு தன்னுலகமாகியவிந்திரலோகத்தையடைந்து சுதர்மாவோடாசனத்தில் வீற்றிருந்தான்.

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

## 3-வது சுரதமகாராஜன் புத்திரனடைந்த அத்தியாயம்.

அஸ்த்தினாபுரியிலே சந்திரவம்சத்திலே பிறந்தவரும் நான்குவருணாச்சிரம ரக்ஷகரும், சத்தியசந்தரும், யாகசீலரும், சதாதாமசிந்தையுடையவருமாகிய சுரதமகாராஜனென்பவர் நெடுங்காலமரசுசெய்துவந்தார். அவர் தனக்குப்பின் அரசுசெய்வதற்குப்பிள்ளையில்லாமல் அசுவமேதத்தோடு புத்திரகாமேஷ்டியாகமுஞ் செய்துஞ் சந்ததியில்லாததினால் மிகுந்த துக்கமுடையவராய்க் கங்காதீரமடைந்து அவ்விடத்திற் காயக்கிலேசஞ்செய்து மனோலயத்தோடு பரமதருமமான தவசுசெய்துகொண்டிருக்கும் நாரதர் முதலான மகரிஷிகளைக்கண்டு நமஸ்கரித்தெழுந்துநின்று, சுவாமி முனிசிரேஷ்டர்களே! நான் அசுவமேதத்தோடு புத்திரகாமேஷ்டி யாகமுஞ் செய்தும் புத்திரனில்லாதவனானேன். இதைத்திருவுளங்கொண்டு எனக்கு புத்திரனுண்டாவதற்குக் காரணமும் நான்பூர்வஞ்செய்தபாவமுஞ் சொல்லியருளவேண்டுமென இரந்துநின்றார். கங்காதீரவாசிகளாகிய முனிவர்கள் அரசனைநோக்கி, அரசனே! நீ பூர்வத்திற் கன்றையும் பசுவையும் தனியாகும்படி பிரித்துவிட்ட காரணத்தாலிந்தச் சன்மத்திற் பிள்ளையில்லாதவனாய், அதற்குப்பிராயச்சித்தமாகக் கைலாய தரிசனஞ்செய்வாயேற் புத்திரனுண்டாவானென்றார்கள். சுரதராஜன் தன்னூருக்குவந்து மந்திரிவசம் ராச்சியத்தை யொப்பிவித்துத்தான அசுவாரூடனாகக் கைலாயதெரிசனஞ் செய்வதற்குப்போனார். அவர்போனபிறகு அவருக்குச் சத்துருக்களான அனேக அரசர்கள்வந்து பட்டணத்தை வளைத்து முற்றிகையிட்டார்கள். அதைக்கண்டமந்திரி சுரதராஜனையழைத்துவரும்படித் தூதர்களையனுப்பினான் அத்தூதர்கள் காற்றிலுமதிக வேகமுள்ள, குதிரைகளின்மேலேறி நெடுந்தூரஞ்சென்று, அரசனைக் கண்டு நடந்தசங்கதிகளைத் தெரிவித்தார்கள் அரசன் சற்று நேரம் ஆலோசித்து க்ஷத்திரியர்களுக்கு இராச்சியபாலனஞ் செய்தால்தான் பரமதர்மமென்றெண்ணித் தன்பட்டணமாகிய ஹஸ்தினாபுரியையடைந்து சத்துருக்களாகிய அரசர்களோடு ஐந்துநாள யுத்தம்பண்ணியுஞ் செயிக்கமுடியாமற் பின்னோர் பாணத்தையெடுத்து, அகோரமந்திரத்தைச்செபித்து, வில்லிற் பூட்டிப் பிரயோகஞ்செய்தார். அவ்வஸ்திரமானது அக்கினிச் சுவாலாமாலைகளைக் கக்கிக்கொண்டுபோய்ச், சத்துருக்களை நாசமாகுவண்ணந்தகித்துவிட்டது. அதன்பின்னரசன், அனேக வருஷகாலமரசாக்ஷி செய்துகொண்டிருந்தும், புத்திரனில்லா

மையால் மிகுந்தவிசனத்துடன் திக்குவிசயம்பண்ணப்போகிற
வர் போற்றீர்த்தயாத்திரையை மனதிலுத்தேசித்து, அநேக
தீர்த்தயாத்திரைசெய்து கடைசியாகக் காவேரிநதியையடைந்து
அந்நதியிருகரையிலுமுள்ள திவ்யக்ஷேத்திரங்களைத்தெரிசித்து
க்கொண்டு, ஜீவன் முத்திக்ஷேத்திரமாகிய திருவையாற்றை
யடைந்தார்.

அடைந்தவரந்த க்ஷேத்திரதீர்த்தமாகிய பஞ்சநத காவேரி
யிற்சங்கற்ப பூர்வமாக ஸ்நானஞ்செய்து அநேகதானங்களுடன்
க்ஷேத்திர சிரார்த்தமும் செய்து, சிவதரிசனஞ்செய்யத்திருக்
கோயிலினுழைந்து, அங்குபரமபிரகாசமாக விளங்கிக்கொண்
டிருக்கும், செம்பொற்சோதியாரைக்கண்டு, பிரதக்ஷணநமஸ்க்
காரத்துடன் அருச்சனைசெய்தபின்; அவ்விடத்திற்சந்நியாசம்
பெற்று இந்திரியநிக்கிரகயோகத்துடன் ஜடாபஸ்ம ருத்ராக்ஷ
தாரியாகச் செம்பொற்சோதியாரைத் தியானித்துக்கொண்டு
நின்ற தூர்வாசமகரிஷியைக்கண்டு, நமஸ்க்கரித்தெழுந்துநின்
றார். நின்ற அரசனைத் தூர்வாசமகரிஷியானவர்பார்த்து இராச
னே உம்முடைய நாட்டிலும் நகரத்திலுமுள்ள ஜனங்களோடு
நீரும் சுகமோவென்றனர். அதைக்கேட்ட சுரதமகாராஜா தூர்
வாசமகரிஷியைநோக்கி, சுவாமி! தேவரீருடைய அநுக்கிறகத்
தால் அநேககாலமிராச்சியபரிபாலனஞ்செய்துவந்து அவ்வாறே
எனக்குப்பிறகு பரிபாலனஞ்செய்யப புத்திரனில்லாததுக்கத்
தாற் கங்காநதியையடைந்து அத்திரவாசிகளாகிய நாரதர்முனி
முதலான, மகரிஷிகளைக்கண்டு அடியேன் குறையை விண்ணப்
பஞ்செய்துகொண்டேன். அவர்கள் நீ பூர்வத்தில் கன்றையுந்
தாயையும் பிரித்ததோஷத்தாற் புத்திரனில்லாதவனானதற்கு
பிராயச்சித்தமாகக் கைலாயதரிசனம் செய்வாயேற் புத்திரனை
யடைவாயென்றார்கள்.

அதைக்கேட்டபிறகென்பட்டணமாகிய அவ்திருபுரியை
யடைந்து இராஜ்யத்தை மந்திரிவசத்திலொப்பிவித்து நான்
கைலாச யாத்திரை செய்யப்புறப்பட்டேன். அத்தருணத்தி
லென் சத்துருக்களனேகர் கோட்டையை வளைத்து முற்றுகை
யிட்டதை மந்திரிமார்களனுப்பிய தூதர்களாலெடுத்தூரம்
போன நான்அறிந்து திரும்பியஸ்திருபுரியையடைந்து சத்துரு
க்களைச் செயித்தரசாக்ஷி செய்து வரும் காலத்தில் புத்திரனில
லாத துக்கத்தாற் றிக்விஜயம் செய்யப் புறப்படுகிறவனைப்
போற் தீர்த்தயாத்திரையை மனதிலுத்தேசித் தநேகதீர்த்த

யாத்திரை பண்ணிக் கடைசியாக காவேரிநதிக்கரையையடைந்து அந்நதியினிருகரையிலுள்ள க்ஷேத்திரங்களைத் தெரிசனஞ்செய்து இப்பொழுதிந்த க்ஷேத்திரமடைந்தேனென்றான். அதைக்கேட்ட துர்வாசமுனிவர் அரசனே! உன் பாவநிவர்த்தியின் பொருட்டுக் கைலாச தரிசனஞ் செய்யவேண்டியது ஆவசியமானதாற் கைலாசத்தை யிந்த க்ஷேத்திரத்தில் வரவழைக்கிறேனென்று பரமபதியாகிய சிவபெருமானை தியானித்து தினமொன்றுக்கு முப்பதினாயிரம் வீதம் நாற்பது நாட் பஞ்சாக்ஷர ஜபம் செபித்து கடைசியிற் பரமசிவனை உமைபாகனே! ருத்திரனே! சங்கரனே! பிரமவிஷ்ணு தேவேந்திராதிகளாற் பூஜிக்கப்பட்டவனே! சூலபாணியே! அடியார்களடையும் பாதபங்கயனே! பிர்மஞானிகளையுடையாத்மசொரூபனே ஸ்வானுபூதிப் பிரசித்தனே சர்வசாக்ஷியனே விசுவாதீதனே மகரிஷியுத்தமனே முத்தொழின் முதல்வனே சிவஞானத்தாற் சம்சார வாதைகளை நீக்கி மோக்ஷானந்தத்தை யளிப்பவனே! வேத வேதாந்த வுபநிடத்தன் முறைப்பட்டவனே! அகண்ட பரிபூரண சச்சிதானந்த பரப்பிர்மமே சந்திரசூடனே, பஞ்சநதீசனே என்றுசோஸ்திரம் பண்ணினார் அப்பொழுது பரமசிவன் அம்பாள் விக்கினேசுவரர் குமாரர் சமேதராக நந்திதேவர் முதலான சிவகணங்களுடன் சர்ப்பாபரண வலங்கிதருயும் கசிகை பரியந்தம் வீபூதி உத்தூளனமும் அதன்மேல் உருத்திராக்ஷ மாலிகை பூண்டவராயும், ஒருகையில் பிர்மகபாலமும், ஒருகையில் பிநாகமென்னும் வில்லும் ஒருகையிற் சூலமும், ஒருகையில் மழுவாயுதமும் தரித்து கைலயங்கிரியையொத்த ரிஷப வாகனரூடராய்ப் பிரசன்னராகித் துர்வாசரருகில் வந்தார், வந்தவரைச் சங்கராவதாரமாகிய துர்வாச மகரிஷியானவர் கண்டு ஆனந்தமடைந்தெழுந்து பிரதக்ஷண நமஸ்காரம் பண்ண பரமசிவனவர் பக்தசிகாமணியாகிய துர்வாசரே! உம்முடைய ஸ்தோத்திரத்தாலும் தபசாலும் பிரசன்னரானேம் உம்முடையமனத்தில் நினைத்ததைகொடுக்கிறோம். அதனைச்சொல்லுமென்றார். அந்தத்திருவாக்கைக் கேட்டுத்துர்வாசர் சுவாமி தயாமூர்த்தியே! சமஸ்தயோகிபருக்குமுத்திகொடுக்கின்ற தேவரீர் தெரிசனத்தால் கிருதார்த்தனானேன், ஆனாலும் தேவரீரிடத்தில் யாசிக்கின்றேன், மிகுந்த தருமமுள்ளவனும் புண்ணியகீர்த்திப் பிரதாபத்தை யுடையவனாகிய சுரத மகாராஜன் புத்திரனிமித்தமென்னைச் சரணமடைந்தான். அவனுக்குப் பூர்வத்தில் வந்த பாப விமோசனமாகக் கைலாசதெரிசனத்தாற் புத்திரப்பிராப்தி நிச்சயிக்கப்பட்டது. இவனே கைலாசம் போவதற்கசக்தனாகி யிருக்கிறான். அவனுக்குக் கைலாசத்தை யிந்த க்ஷேத்திரத்தில் வரவழைக்கின்றே

னென்று பிரதிக்கினை செய்து விட்டேன். ஆகையாலிவ்வரசனுக்குக் கைலாச தெரிசனத்தோடு புத்திரப்பேறு மளித்தருளவேண்டுமென்றார். பரமசிவன் நந்திகேஸ்வரரைப்பார்த்து நந்தியே! நீ அதி சீக்கிரமாகச் சென்று கைலாசபர்வதத்தை இவ்விடம் கொண்டுவாவென் றுத்திரவுகொடுத்தருளினார். அவ்வண்ணமே நந்திகேஸ்வரர் சென்று கைலாசத்தைக் கொண்டுவந்து ஆலயத்திற்கிருமருங்கிநிறுவிப் பரமசிவனுக்கு விண்ணப்பம் செய்தார். உடனே பரமபதியானவர் தூர்வாச முனிவரை யழைத்து தூர்வாசமுனிவரே! நம்முடையவாலயத்தினிருபக்கத்திலுங் கைலாச பர்வதமானது ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. அவைகளில் நான் சிவலிங்கசொரூபமாக வெழுந்தருளியிருக்கின்றோம் புத்திரனில்லாதவர்கள் பக்தி சிரத்தையாக அவ்விரண்டிடத்திலுநம்மைத் தெரிசிப்பார்களானால் புத்திரனையடைவது நிச்சயம். அன்றியுமிந்த க்ஷேத்திரத்தில் வாசம் பண்ணப்பட்ட சகல ஜீவஜந்துக்களும் கைலாச வாசிகளேயென்று சொல்லியதோடு அரசனுக்கு தெரிசனம் செய்யுமென்று சொல்லி, மகாலிங்கத்தில் மறைந்தருளினார். தூர்வாசர் அரசனை அழைத்து வந்து வடகைலாசந் தென்கைலாயமிரண்டிலுஞ் ஜோதிசொரூபமாகப் பிரகாசிக்கின்ற கருணாநிதியாகிய பரமபதியைக்காட்டினார். அரசன் கண்டுமனதிலானந்தமடைந்து பரமசிவனைத் தாவர, சங்கம, சொரூபனே, விஷ்ணுவின் கண்ணிலங்கிய பாதனே! பிரமன் சிரபங்கனே! சிவசொரூபனே, ஆலகால விஷபோசனனே! வேதவேதாந்த ஆகமங்களாலறியப்படாதவனே! நாமரூபமற்றவனே! எல்லாவற்றிற்கு முதன்மையானவனே! நிர்த்தோஷ குண ரூபனே திரிபுராந்தகனே! கைலாசகிரிக்குப்பூஷணமாயுள்ளவனே, பஞ்சனதீசனே, ஜப்பேசனே என்று ஸ்தோத்திரம் பண்ணினார் பரமசிவன் அத்தோத்திரத்திற்கு மனமுருகி இலிங்கத்தின்மேற் சோமாஸ்கந்த மூர்த்தியாகத்தோன்றிச் சுபதமகாராஜனே எனதனுக்கிரகத்தாற்றீர்க்காயுளுள்ளவனுஞ் சிவகைங்கரியப்பிரியனும் வேதவேதாங்கபாரங்கதனுமான வோர் புத்திரனைச் சீக்கிரத்திலடைவாயென்று திருவாய்மலர்ந்தருளி மகாலிங்கத்திலுள்ளே மறைந்தருளினார். அரசன் ஆனந்தமடைந்து தூர்வாசமுனிவரை நமஸ்கரித்து ஷாட்குண்ய பரிபூரணரே தேவரீரனுக்கிரகத்தாற் கைலாய தரிசனத்துடன் பரமசிவதெரிசனமும் பெற்றேன். இனி இவ்வுலகத்திலடையும் பலனொன்றுமில்லை. அடியேனுக்கு விடைதந்தருளவேண்டுமென்றார். அவ்வண்ணமே தூர்வாசமுனிவருத்திரவு கொடுக்கப் பின்பு அரசன்

சதுரங்கசேனையுடன் தன்னகரம் போய்ச்சேர்ந்து அரசாக்ஷி
யைக்கைக்கொண்டு நான்குவருணத்தாரும் தத்தமக்குரிய
வொழுக்கத்தினின்று தவறாது அரசாக்ஷி செய்து வந்தார்,
இவ்வண்ணம் நிகழும் காலத்தில் அவ்வரசன் மனையாள் கர்ப்ப
வதியானாள் அப்பொழுது அரசன் பும்சவன சீமந்த முதலிய
கருமங்கள் செய்தான் பூரணமான பத்தாவது மாசத்தில்
அவன் மனைவி இலக்னபலன், சந்திரபலன் முதலான சுப
முகூர்த்தத்தில் நல்ல புத்திரனைப பெற்றாள். உடனே அர
சன் அளவில்லாத தனம், தான்யம், வஸ்திரம், ஆபரணம்,
கோ, பூ முதலிய தானங்கள் மனப்பிரீதியுடன் வைதிகப் பிரா
மணோத்தமருக்குக் கொடுத்து அக்குழந்தைக்குச் சிவதத்த
னென்று பெயரிட்டு அதன் பின் சாதகர்ம அன்னப்பிராசனம்
கர்ணவேதை என்கிற ஆண்டுநிறைவு சவுளம் உபநயன முதலிய
கிரியைகளை குறைவற நடத்தி வேதவேதாங்கம் தனுர் வேதம்
ஆயுள்வேதம், யானையேற்றம், குதிரையேற்றம், இரதாரோக
ணம் அஸ்வப்பரிக்ஷை ரத்தனபரீட்சை, பரதசாஸ்திரம், இரா
ஜநீதி முதலிய அறுபத்து நான்கு கலைஞானமும், பதினான்கு
வித்தையும் கற்பித்து ஸ்வராஜ்ய பட்டாபிஷேகமும் செய்வி
த்து சிலகாலமானபின் இராஜ்யத்தில் புத்திரனை வைத்து
விட்டுச் சிலசேனையுடன் திருவையாற்றையடைந்து காவேரி
நதியில் ஸ்நானஞ்செய்து பரமசிவனெழுந்தருளிய ஆலயத்
திற்வந்து தெரிசனம் செய்து அனேக திரவ்யத்துடன்
நூறுகிராமங்களை தானஞ்செய்தான். அதன் பின் வைகாசி
மாசத்திற் பூர்வ பக்ஷத்திற் துவஜாரோகணமுதல் ரதோச்ச
வஞ்செய்து உத்சவத்தின் மத்தியகாலத்தில் பக்தி பூர்வ
மகாஷ்டரசத்துடன் பிராமண போசனம் செய்வித்துப்
பத்தாம்நாள் துவசாவரோகணஞ்செய்து, தன்னகரம் போய்ச்
சேர்ந்தான். சிலகாலஞ் சென்றபின் சிவபக்தி சிகாமணி
யாகிய சுரத மகாராஜன் பரமகருணா நிதியாகிய பரம
சிவன் திருவடியில் கலந்தனன். சுரதமகாராஜன் சிவலோக
மடைந்த பின் புத்திரனான சிவதத்த மகாராஜன் அர
சாக்ஷி செய்து வரும காலத்திற் றன் குலகுருவாகிய
தௌமிய மகரிஷியினிடத்திற் பஞ்சநதீஸ்வரர் அனுக்கிரகத்
தால் தான் பிறந்ததைக்கேட்டுப் பஞ்சநதக்ஷேத்திரம் வந்து
பங்குனி மாசம் சுக்லபக்ஷத்திற்காரோகணமுதல் ரதோச்ச
வம் வரையில் செய்து முடித்து திருப்பத் தன்னகரத்தை
யடைந்து, தன் பிள்ளையாகிய சங்கர மகாராஜனுக்குப் பட்டா
பிஷேகம் செய்துவைத்துச் சிவலோகத்தையடைந்தான்.

அதன்பின் சங்கர மகாராஜன் திருவையாற்றைபடைந்து, சித்திரை மாசசுக்லபட்சத்தில் ரதோச்வம் செய்துவைத்து தன்னகரையடைந்தான்.

மூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

## 4-வது சுசரிதன் எமபயம் நீங்கி முக்தி அடைந்த அத்தியாயம்,

கௌதமீதீரதேசத்திற் சுதவாசியென்னும் பிராமணன் சுசிலையென்னுமனையாளோடு ஒழுக்கம் ஆசாரம் முதலியவைகளிற் குறைபாடின்றி இல்லரநடத்திவந்தனர். அவர் செய்த நற்றவப்பேருக மனையாளோராண் குழந்தையைப் பெற்றனள். அக்குழந்தைக்கு சுரிசதனென்று நாமமிட்டு வளர்த்து வருங்காலத்தில் அத்தேயத்தில் மிகுந்த பஞ்சகாலம் நேரிட்டது. அப்பஞ்சத்தில் மிகு வருத்தமடைந்து அவ்வூறைவிட்டுத் தன் மனையாளையும் புத்திரனையுமழைத்துக்கொண்டு அநேக தேசங்களைக் கடந்து வரும்போது மார்க்கமத்தியிற் சுதவசியென்னும் பிராமணன் மரணமடைந்தார். உடனே அவர் மனையாள் சுசீலை யென்பவளும் அனுமரணமடைந்தாள் சுசரிதன் தாய் தந்தையிருவருக்குஞ் செய்ய வேண்டிய கிரியைகளை முடித்து விட்டு மிகுந்த துக்கமுடையவனாய் நாடு நகரங்களெல்லாம் கடந்து சிவாலயங்களாலலங்கரிக்கப்பட்ட விருகரையுடைய காவேரி நதியை அடைந்து அங்கங்குள்ள சிவாலயங்களையெல்லாம் தெரிசித்துக் கடையில் திருப்பழணம் வந்து காவேரிஸ்னனம் செய்து நித்திய கருமங்களை முடித்து அங்குள்ள பிராமணர் வில்லத்திலயமேற்றுக்கொண்டு வழிநடைச்சிரமத்தா லோர்விருக்ஷத்தினடியில் மிகுந்த துக்கமுடையவனாய் நித்திரைசெய்தான், அப்பொழுது கோரரூபமும் வக்கிரதந்தங்களையுமுடைய வோர் புருஷன் கனவிற்றேன்றி இன்றைக்கைந்தாநாள் நீ மரணத்தையடைவாயென்று சொன்னதைக்கேட்டெழுந்து மரண பயத்தால் மெய்மறந்து அவசனைப் புலம்பிக்கொண்டு காவேரி

யினேரமாக நடந்து திருவையாற்றை அடைந்து அங்குள்ள
காவேரியில் ஸ்நானம் செய்து வர்ணாச்சிரம தர்மத்தை முடித்
துக்கொண்டு வருகையில் சிவாலயத்தின் தெற்கு வாயலிலிருந்
த கிருபாநோக்கத்துடையவரும் தன் பிரமகாந்தியால் மூன்று
லகங்களை விளக்கவைத்தவரும் ஜீவகோடிகளுடைய பயத்தை
நீக்குபவரும் வேதவேதாங்கத்தின் அதிசயத்தை யையந்திரி
பறஉணர்ந்தவரும் விபூதிதரித்த திருமேனியரும் நெற்றியிற்
றிரிபுண்டரத்தை யுடையவரும் உருத்திராக்ஷமாலிகாபரணரும்
சடாமகுடத்தையுடையவரும் காமம் வெகுளிமயக்கமென்னு
முக்குற்றம் நீங்கினவரும் பஞ்சேந்திரிய நிக்கிரகரும் ஜகத்குரு
வும்சிவப்பிரசாதத்தையுடையவருமான வசிஷ்டமகாமுனிவரை
க்கண்டு கண்ணீர் பெருகவிட்டுக் கோவென்றலறி அடியேனை ர
க்ஷித்தருளவேண்டுமென்று திருவடியில் விழுந்தான். உடனே
யோகத்திலிருந்த மனதைத்திருப்பிக் காலில்விழுந்தவனை யிர
ண்டுகையாலுந்தூக்கி நீ யாவன்? எவ்விடத்திலிருந்து வருகின்
றாய் உன்பெயர் யாது? நீ எவற்றால் பயமடைந்தாய்? அந்தப்
பயத்தைப் பரமசிவபிரசாதத்தால் போக்குகிறோம். நீ அஞ்
சாது யாவற்றையும் சொல்வாயென்று வசிஷ்ட மகாமுனிவர்
உரைக்கச் சுசரிதன் தைரியமடைந்து சுவாமி முனிசிரேஷ்ட
ரே யான் கௌதமீதீரதேசத்திலிருந்த சுதபசியின் புத்திரன்
அத்தேசத்தில்நேர்ந்தபஞ்சகாலத்தை நீக்கவேண்டிஎன் தாய்
தந்தை யிருவருடன் யானும் வந்தேன். மார்க்கமத்தியில் என்
தாய்தந்தை யிருவருமரணமடைந்தார்கள். அதன்பின் நான்
வெகுதேசங்களைக் கடந்து திருப்பழனத்தையடைந்து அங்
குள்ள பிராமணர்களில் லந்தோறுமையமேற்றுண்டு நெடுந்தூ
ரஞ்சுற்றி வந்த இளைப்பாலோர் மரத்தினடியில் நித்திரை
செய்தேன். அப்பொழுது கோர ரூபத்தையுடைய வோர்
புருஷனென் கனவிற்றோன்றி இன்றைக்கு ஐந்தாநாள் நீ மரண
த்தை யடைவாயென்று சொன்னதைக்கேட்டுப் பயந்தெழு
ந்துவந்து தேவரீரை சரணமடைந்தேனடியேனை ரக்ஷித்தருள
வேண்டுமென்றான். வசிஷ்டமுனிவர் ஞானதிருஷ்டியாலவன்
கருமத்தைத் தெரிந்து சுசரிதனே நீ பூர்வசென்மத்திற் குரு
முன்னிலையாற் தெரிந்துகொள்ளாமனீசற்ற கல்விப் பலத்தால்
வேதாந்தம் உபநிடத முதலிய சாஸ்திரங்களைத் தெரிந்தமை
யால் ரௌரவம் கும்பீபாக முதலிய கொடிய நரகங்களில் மாணி
டவருஷத்தினூறுவருஷமதிகவாதையடைந்து பின் கர்மசேட
த்தால் கழுதையாகப்பத்து ஜென்மமும், நாடாகப்பத்து ஜென்ம

மும், அடைந்து பிறகு ஒருஜென்மம் கழுகு, ஒருசென்மம் கர்கம், ஒரு சென்மம் நீசன், ஒருசென்மம் சங்காஜாதி, ஒரு சென்மம் சூத்திரன், ஒரு சென்மம் வைசியன், ஒருசென்மம் க்ஷத்திரியனாகப்பிறந்து இந்தசென்மம் பிராமணனாகப் பிறந்தாய் இதுமுதல் பன்னிரண்டு சென்மம் பிராம்மணனாகப் பிறந்து சென்ற சென்மங்களிலடைந்த அற்பாயுள்போல் இந்த ஜென்மத்திலும் இனிவருஞ்சென்மங்களிலு மற்பாயுளை யடைவாயென்று சொன்னார். சுசரிதன் ஐயாமகரிஷியே தங்களைப் பார்க்கிலும் என்னை இரக்ஷிக்க வேறொருவரையுங்காணேன். இப்போது நானடைந்த பயத்தைப் போக்கி யடியேனை இரக்ஷித்தருளவேண்டுமென முனிவர் உன்னை ரக்ஷிக்கிறேன் பயப்படாதே எமனை ஜெயிக்கும் மந்திரத்தை யுனக்குபதேசிக்கிறேன். இன்றுமுதல் காவேரியாற்றில் காலேஸ்நானமும் பகற் காலமுழுவதும் இந்தக்ஷேத்திரத்திலுள்ள சிவாலயத்தை மௌனமாகப் பிரதக்ஷணமும் இராத்திரி அஸ்தமனமுதல் உதயபரியந்தம் பஞ்சாக்ஷர செபமும் மௌனமாக ருத்திரபாராயணமுஞ் செய்தால் எமன் உன்னிடத்தில் வரமாட்டான் ஒருகால் வந்தாலும் பஞ்சநதீசுவரர் அவனைச் சம்மாரஞ்செய்வார் நானுமிகுத்தானே இருக்கிறேன். நீ கொஞ்சமாயினும் பயமடையாதே யென்று சொல்லித்தன்னாசிரமத்தையடைந்தார்.

சுசரிதன் வசிஷ்டமகாமுனிவர் சொல்லியவாறு ஸ்நான ஜெப முதலானதுஞ்செய்து நான்கு நாட்சென்று ஐந்தாநாள் மத்தியானம் ஸ்நானம் செய்து திருக்கோயிலுக்குவர உத்தேசித்துப் புறப்படுகையில் காவேரியின் தென்கரையைப் பார்த்தான் அங்குஎருமைக்கடாவிலேறிஅபமிருத்துவு காலமிருத்துவு, சுரமுதலானரோகங்களுடனும், கறுத்தபெருத்த, கோரதந்தங்களையுடையகிங்கரனுடனும், அடிகட்டு-பிடி, யென்று பயங்கரமானவார்த்தைகளைச் சொல்லிக்கொண்டுவந்தஎமதருமராஜனைக்கண்டு, பயந்து அந்தோ! நானென்செய்வேனென்று கதறிக்கொண்டு வசிஷ்டமகரிஷியினாச்சிரமத்தைநோக்கியோடினான். அந்தச்சப்ததைக் கேட்டவசிஷ்ட முனிவர் ஆச்சிரமத்தை விட்டு வெளியில் வந்து எமன் வந்துவிட்டான்போலுமென்று தன்மனதினினைத்து சுசரிதபிரமசாரியை ரக்ஷிக்க வேண்டுமென்று காவேரியை நோக்கிப் போகையில் மத்தியிற்சுசரிதனைக்கண்டு நீயலறிக்கொண்டு வருகின்ற காரணமென்னவென்று கேட்கச் சுசரிதன் சுவாமி காவேரிதென்கரையில எருமைக்கடாவின் மேலேறித் தன்சேனைகளுடன் எமன் வருகிறதைக்கண்டு பயந்து தேவரீரிடத்தில் வருகிறேனென்று

சொல்ல, வசிஷ்டமுனிவர் தன்னிருகையாலுஞ் சுசரிதனைத் தடவிக்கொடுத்துப் பயப் படாதேயென்று சொல்லியவனுடன் தெற்குவாயலில் வந்து பஞ்சாக்ஷர செபஞ்செய்யென்று சொல்லித்தானுஞ் சிவத்தியானத்துடன் பஞ்சாக்ஷர மந்திரஞ் செபித்துத் தெற்கு வாயலில் வந்தார். அக்காலையில் எமன் கடாவாகனருடனாகத் தெற்கு வாயலுக்கருகில் வரும்போது வசிஷ்ட முனிவர் நம்மைக் கேவலமாகவெண்ணி யிவனைப்பிடிப்பான் போனுமிருக்கிறதென்று நிச்சயஞ்செய்து பரமசிவனை உமைபாகனே மாயாதீதனே அப்பிரமேயனே மூவருக்கு முன்னேனே சூலாயுதபாணியனே அன்பர்களுடைய துன்பங்களையரிக்கப்பட்டவனே அடியவருக்கபயமளிப்பவனே, சத்திய மார்க்கத்தை நிலைநிறுத்தப்பட்டவனே சத்திய ஞானநந்தனே என்றுஸ்தோத்திரம் பண்ணினர். அப்பொழுது பரமசிவன் நந்திகேஸ்வரரையழைத்து நந்தியே எமனிடத்தில் பயந்துவசிஷ்ட முனிவர் மாணுக்கனான சுசரிதனை இரக்ஷிக்கும்பொருட்டு எமனை நீ சம்மாரஞ்செய்வாயென்று ஆக்ஞாபிக்க, நந்திதேவர் கையில் சூலாயுதம் கொண்டு சுசரிதன் காணும்படி முன்னாகவந்து சூலாயுதத்தைப் பூமியிலூன்றியதன்மேற் கையைவைத்துக்கொண்டு நின்றார். அக்காலையில் எமன் மகிஷாருடனாகத் தன் சேனையுடன்வந்து நந்திதேவரையுந்திரணமாகவெண்ணிக் கையிலிருந்த பாசத்தைச் சுசரிதன் கழுத்திற்போட்டுத் தண்டாயுதத்தால் அடித்திழுக்க நந்திதேவர் எமனைப்பார்த்து, அடா எமனே! பரமசிவனுத்திரவாலிச் சுசரிதனை இரக்ஷிக்க நான் வந்திருக்க, அதை நீ சற்றுமெண்ணுமற் கையிலிருக்கப்பட்ட தெண்டாயுதத்தாலடித்துப் பாசத்தைக் கழுத்தில் வீசியிழுக்கின்றதை நிறுத்தி உன்னுலகத்தை நீயடைவாயென்று சொல்ல, அவ்வார்த்தையைச் சற்றுங் கவனியாமலிருந்ததை நந்திதேவர் தெரிந்து ஊழித் தீயையொத்த கோபத்துடன் கையிலிருந்த சூலத்தால் அவன் மார்பில் குத்தி பூமியிற் சாய்த்தார், எமன் மரணமடைந்தான். பெரியோரிடத்திற் பகைத்தாற், பிறங்கல் கல்லிய கோலொப்பான், என்ற பழமொழிக்கு சான்றாயினன். அதன் பின் சுசரிதன் மரணமடைந்த எமனைக் கண்டு பரமசிவனைநோக்கி, இந்திரன் முதலான தேவர்களால் தெரிசிக்கபட்ட பாதபங்கயனே விஷ்ணுமுதலான தேவர்களாலுஞ் செயிக்கமுடியாத திரிபுரசம்மாரனே உலகத்தை தகித்துக்கொண்டு வந்த ஆலகாலத்தையுண்டவனே புலியதனை யுடையாக உடையவனே சர்ப்பாபரணத்தை யணிந்த மெய்யனே என்

மேல்வைத்த கருணை நோக்கத்தாற் காலசங்காரனே பஞ்ச
தீசனே! யென்றுஸ்தோத்திரம் பண்ணப் பரமசிவன் தெற்கு
வாயலின் மேல்பாகத்திலெழுந்தருளி தன்னைத்துதி செய்த
சுசரிதனைப் பார்த்து சுசரிதனே யுனக்குப் பிராணதானஞ்
செய்தவசிஷ்ட மகரிஷியைப் பிதாவாகவும் ஞானசாரியனாகவு
நீ யெப்பொழுதுந்தியானி, எம்மாற்கோபிக்கப்பட்டாலாச்சாரி
யார் பார் ஆசாரியாராற் கோபிக்கப்பட்டா லெம்மால் தீர்த்த
லரிது நற்குலத்தில் பிறந்தகன்னிகையை விவாகஞ்செய்து கொ
ண்டு கிரகஸ்தாச்சிரமத்தை யடைந்து தருமதனைச் செய்தே
வப் பிரீதியாகிய பிரமசரியாச்சிரமத்தோடு தியானத்தையும்
பிதிர் பிரீதியாகிய புத்திரனையுமடைந்து மூன்று கடனையுந்
தீர்த்தவுடன்உன்மனதை மோக்ஷத்திற்செலுத்தினல்லதார்த்
தமான எமது சொரூபத்தை யடைந்துபின் பெம்மைபடை
வாயென்று சொல்லி; வசிஷ்ட மகரிஷியை நோக்கி வசிஷ்ட
முனிவரே யிந்தச் சுசரிதனை உனது புத்திரனைப்போல் எப்
பொழும் பாலனஞ்செய்து நற்குலத்திற் பிறந்தவோர் கன்னி
கையை விவாகஞ்செய்வியுமென்று சொல்லி மரணமடைந்து பூமி
யிற் கிடந்த யெமனருகிற் சென்று தமது கிருபாநோக்கத்தாற்
பார்த்து ஜீவிக்கும்படி செய்தார். நித்திரை தெளிந்தெழுந்
தவன் போல்லமெல்லஎழுந்து பரமசிவனே மகாதேவனே, அநி
த்தியமாய் அசுத்தமாய் அனேக துக்கசொரூபமாய், ஆச்சரி
யகரமாயுள்ள பிரபஞ்சத்திர்மாணத்திற்கு காரண பூதமாயும்,
அனாதியாயும் வாக்குமனதிற் கெட்டாதாயுமுள்ள அவித்தை
யென்று சொல்லபட்ட மாயையாகிய நிர்த்தகிக்குச் சூத்திர
தாரியனே விஷ்ணுமுதலான தேவர்கள் அசக்கியர் களாக
வும், பிரமாவின் வரத்தாற் கருவமடைந்தவர்களாகவும், ஆகா
யசாரியாயுள்ள திரிபுரத்தில் வசிக்கப் பட்டவர்களாயுமுள்ள
அனேக கோடி அசுரர்களைச் சங்கரித்து ஜெயகீர்த்திமங்களத்
தாற் கோபிதமுள்ள மகாத்மியத்தை யுடையவனே சகலதேவ
ர்களாலும் சுரர்களாலும் தூக்கப்பட்ட மந்தாகிரி யென்னும்
மத்தாற்கலக்குண்ட க்ஷீராப்தியிலுண்டான ஊழித்தீக்குச்ச
மானமான ஆலகால விஷச்சுவாலையால்தகிக்கப்பட்ட விஷ்ணு,
பிர்மா, இந்திரன்முதலானதேமர்களுக்கு அபய பிரதானங்கொ
டுக்கப்பட்ட கர கமலத்தில் அவ்விஷயத்தைக் கருநெல்லிப்
பிரமாணமாக எடுத்துட்கொண்ட கறுத்த கண்டனே, திரணை
த்தையும, வாயுவையும், சருகையும், ஜலத்தையுய், புசித்துக்
கொண்டு தவம் பண்ணப்பட்ட சனகாதி முனிவர்களுடைய
மனதையுங் கலக்கும் புஷ்பாபரணத்தை தரித்த மன்மதனு

டைய வழகு பொருந்திய சரீரத்தை நாசஞ்செய்த அக்னிக் கண்ணை நெற்றியிலுடையவனே அதிகபயங்கரமானதும், பனிரண்டு மணிகளைக் தரித்த கழுத்தையுடையதும், விருத்தபருவதங் கந்தமான பருவதமுதலான பருவதங்களுக்குச் சமானமுமான மகிஷத்தின்மேல் ஆரோகணித்துத் தண்டாயுதத்தை கையிற்றரித்துச் சித்திர குப்தன், அபத்ருத்து, காலமிருத்து, சுர முதலான சேனைகளுடன் வந்த யமனைச்கண்டு பயந்த மிருகண்டுபுத்திரனுன மார்க்கண்டேயருக்குப் பிராணதானஞ் செய்தவனே யாகராஜனே சகல வேதகர்மா, ஸ்மிருதிகர்மா விவைகளுக்கு அத்தியக்ஷனுயிருக்கப்பட்டவனே சச்சிதானந்த விக்கிரகனே அவமதித்த தக்ஷன் யாகநாசஞ் செய்தவனே அவன்சிரச்சேதனே பிருகுமகரிஷியினுடையமீசையைக் கொய்தவனே பரியாசஞ்செய்த சூரியனுடைய பற்களை யுதிர்த்தவனே சரஸ்வதியின் மூக்கை அறுத்தவனே இலக்குமிநாயகனுகிய விஷ்ணுவின் கண்ணுலருச்சிக்கப்பட்ட திருப்பாதனே பகாசுரனுடைய கண்ணைக்கெடுத்தவனே அந்தகாசுரனுக்காந்தகனே விருபாக்ஷனே பிநாகபாணியேயானைத்தோற்போர்வையனே சிரமாலையுடையவனே பஞ்சநதீசனே யென்று ஸ்தோத்திரஞ் செய்து சுவாமி எளியேன் செய்தபிழை பொறுத்தருளவேண்டுமென்றுன் பரமபதியானவர் காலனே உன் பிழைகளையனைத்தும்பொறுத்தோம் எமது உத்திரவு மாறுபட்டவர்களெவரோ அவர்களுக்குக் கெடுதியுண்டாகுமாதலால் இதுமுதல்நி பாபிகளை விசாரித்து தெண்டனை செய்வாய் பாபநாசமாயுள்ள வெமது க்ஷேத்திரமாகிய விந்தப் பஞ்சநதத்தில் வசிப்பவர்கள் உன்னுலகத்திற்கு வரப்பட்டவர்களல்ல, இந்த பஞ்சநதக்ஷேத்திரத்தில் மார்கழி மாதத் திருவாதிரை நக்ஷத்திரத்திலும், மகரசங்கராந்தியிலும், மாசி மாத மகநக்ஷத்திரத்திலும் பங்குனி மாத உத்திரநக்ஷத்திரத்திலும் சித்திரை மாசஞ் சித்திரை நக்ஷத்திரத்திலும் வைகாசி மாசம் விசாநக்ஷத்திரத்திலும், சூரிய சந்திரகிரகணம் அமாவசை பவுர்ணமி விதீயபாதம் அர்தமேதாதய மகாஉதயம், பனிரண்டு மாத சங்கராந்தி ஏகாதசி முதலிய மற்றுமுள்ள புண்ணியகாலங்கலங்களிலுமருணேதயத்திற்குமுன் காவேரியில் ஸ்நானமும் அநேக தானங்களுஞ் செய்து லிங்க ரூபமாயுள்ள வெம்மைத்தெரிசித்தவர்களுக்குக் கெர்ப்பவாசங்கிடையாது. இந்த க்ஷேத்திரத்திற் புண்ணியமெவ்வாறு அதிகபடுகிறதோ அது போல் பாபமும் விர்த்தியாகும். எமதாலயத்திற்கருகிலும் காவேரியிலு மல மூத்திர விஸர்சனம் செய்யக்கூடாது. செய்

பவர்களுக்கு நரகங்காணியாகும் இரதோச்சவத்தில் எம்மை தெரிசனஞ்செய்பவர்களுக்கும் துலாமாதமுப்பது நாளுமருணோதயத்திற்குமுன் காவேரிஸ்நானம் செய்பவர்களுக்கு பௌர்ணமியிலும் கார்த்திகைமாசத்திலும் தீபதானஞ்செய்தவர்களுக்கும் மாதுர்சிரார்த்தம் பிதிர்சிரார்த்தஞ்செய்தவர்களுக்குக்கும் நரகவாதனை கிடையாது கணப்பொழுதேனு மிந்தக்ஷேத்திரத்தில் வசித்தவர்கள் உன்னுலகம் வாமாட்டார்களாதலால தனை யெப்பொழுதுஞ்சிந்தித்துன்னுலகத்தை யடைவாயென்று விடைகொடுத்திலிங்கத்தின் மறைந்தருளினர். அதைக்கேட்ட எமன் தன் உலக மடைந்தான். அதன்பின் வசிஷ்ட முனிவர் மாணுக்கனான சுசரிதனை யழைத்துக்கொண்டு தன்னாசிரமத்திற்சென்று சிலகாலஞ்சென்றபின் நற்குலத்திற் பிறந்தவோர் பெண்ணை சுசரிதனுக்கு விவாகஞ்செய்வித்து கௌதமீதீர தேசத்திற்கனுப்பினர். சுசரிதன் தன்தேயத்திற்குப் போய் மனையாளுடன் கூடிவாழ்ந்து ஓர் புத்திரனைப் பெற்றவனுக்கு உபாயனத்தோடுவேதாப்பியாஸமுஞ்செய்வித்து அவனைக்கிரகத்தில் வைத்துத் தான் பஞ்சநதமடைந்து சிலகாலமங்குவசித்து பின் விதேகமுக்தியடைந்தான்.

4 வது அத்தியாயம் முற்றிற்று.

## 5-வது இலக்குமிதேவி வரலாறு

## உரைத்த அத்தியாயம்.

அனவத்யாதேவியானவள் தன் நாயகனாகிய நாதசன்மாவை நமஸ்கரித்தெழுந்துநின்று சுவாமி பஞ்சநதக்ஷேத்திராலயத்திற் சிவபெருமானுக்குஉத்ரபாகத்தில் இலக்குமி சந்நிதானமிருப்பதற்குக் காரணம் சொல்லியருளவேண்டும் என்று வினவ நாதசன்மா பெண்ணே! இந்த க்ஷேத்திரத்தில் முக்தியடையவேண்டுமென்று அநேக மகரிஷிகளும், சந்நியாசிகளும், கிரகஸ்த்தர்களும், பிரமசாரிகளும தவம் செய்து கொண்டு அனேக வருஷகாலமாக இருந்தார்கள். அக்காலத்தில் பஞ்சகாலம் உண்டாயிற்று. கௌதமரிஷியானவர் சகல ஜனங்களும் அன்னதாரித்திரமடையா திருக்கும்பொருட்டு பரமசிவனை சரணமடைந்து ஆனந்த சொரூபனே! சுயம்பிரகாசனே! சித்ரூபனே

அவித்யாதீதனே! மூன்றவஸ்தைக்கும் சாக்ஷியானவனே காயத்திரிபிரணவம்பிவைகளின் தார்ப்பரியப்பூதராயுள்ளபஞ்சநதீசனே என்றுதுதிபண்ணினார் பரமசிவன் தன்னாலயத்திற்குஉத்ரபாகத்திலிலக்ஷ்மியை ஸ்தாபித்து அந்த லக்ஷ்மிதேவியைப் பார்த்து பஞ்சநதத்தில் வசிப்பவர்களுக்கு அன்ன தான பானுதிவஸ்துக்களை குறைவின்றி கொடுத்து வரவேண்டுமென்றுசொல்லி கௌதமரிஷிக்குப் பிரத்யக்ஷமாகி கௌதமரே! எனது ஆலயத்தின் உத்திரபாகத்திலுள்ள இலக்ஷ்மிதேவியை நீர் ஆராதனை செய்வதோடு மற்ற ரிஷிகளையும்ஆராதனம்செய்யும்படி செய்யுமென்று சொல்லி மகாலிங்கத்தில் மறைந்தருளினார். அதன்பின் கௌதமரிஷியானவர் சோடசோபசாரங்களாலும் வஸ்திராபரண கெந்த புஷ்ப தூபதீப நைவேத்தியத்துடன் தினந்தோறும் பூசித்து வந்தார். பிறகு அமராவதி பட்டணத்தில் அரசாக்ஷி செய்கின்ற இந்திரன் அசுர உபத்திரவத்தை சகிக்கமுடியாமல் தன்குல குருவாகிய வியாழ பகவானை நோக்கி சுவாமி! அசுரர் வாதை எப்பொழுது நீங்கும் என அதற்கு வியாழபகவான் சுரர்குல தீபனே நீ பஞ்சநத க்ஷேத்திர மடைந்து காவேரிநதியில் ஸ்நானம் செய்து பரமசிவனை தெரிசித்து அவருக்கு உத்தரபாகத்திலிருக்கும் கௌதம ரிஷியால் ஆராதிக்கப்பட்ட இலக்ஷ்மிதேவியைபக்தி சிரத்தையாக பூசித்தால் அசுரவாதை யினின்றும் நீங்குவாய் இதுசத்திய மென்று சொல்ல இந்திரன்உடனேபஞ்சநத க்ஷேத்திரமடைந்துகாவேரியில் ஸ்நானம் செய்து செப்பொற்சோதியாரை தரிசித்து துதி செய்து சுவாமி! என் சத்ருக்களை நாசம்செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அப்பொழுது பரமசிவன் பிரசன்னமாகி இந்திரனே! எமதனுக்கிரகத்தால் அசுரர்கள்நாசமடைவார்கள். இந்த ஆலயத்தில் எமது சொரூபமாகவுள்ள இலக்ஷ்மிதேவியை ஆராதனை செய்யாவிடில் அபஜெயமும் செல்வநாசமும் உண்டாகும் உலகத்தில் தைரியமில்லா அரசர்கள் யுத்தகாலத்தில் ஜெயமடைய மாட்டார்களாகையால் தைரிய மவசியம் வேண்டியது. தைரியமில்லாத நீ ஐஸ்வரிய இச்சையைமாத்திரம் உடையவனாகையால் இலக்ஷ்மிதேவியை பூஜை செய்வாய் பராக்கிரமத்தை விரும்பினவன் விஷ்ணுவையும் தத்துவஞானத்தை விரும்பினவன்பரமசிவனையும்ரோகமில்லாதிருக்க விரும்பினவன் சூரியனையும், அழகை விரும்பினவன் மன்மதனையும் பூஜை செய்யவேண்டியது. கர்மசாஸ்திர விதியாகையால் செல்வத்தில் இச்சையுடைய நீ சிதேவியை பூஜை செய்யவேண்டியது. அன்றியும் இவ்விடத்தில் சப்தமாதர்களை

பிரதிஷ்டை செய்து பூஜை செய்வாய். உன்னால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சப்த மாதர்களை பூசிப்பவர்கள் நமஸ்கரிப்பவர்கள் வியாதியாலும் தரித்திரத்தாலும் சத்துருக்களாலும் தீயகிரகங்களாலும் அரசர்களாலும் திருடர்களாலும் வாதையடைய மாட்டார்களென்று சொல்லி பரமசிவன் மகாலிங்கத்தில் மறைந்தருளினார். அதன் பின்பு இந்திரன் இலக்குமிதேவியாலயத்திற்கு வந்து ஸ்ரீதேவி சந்நிதியிற் பூஜைக்காக விசுவகர்மாவினால கூபம் ஒன்று வெட்டுவித்து அதிலுண்டாகிய ஜலத்தில் தேவாமிருதத்தை கலந்து நிரப்பி அந்த அமுத ஜலத்தால் அபிஷேகஞ்செய்து வஸ்திரம் ஆபரணம் சந்தனம் குங்குமம் புஷ்பம் இவைகளால் அலங்கரித்து மதுரமுள்ள அன்னங்கள தாம்பூலம் முதலிய நிவேதனங்களும் செய்து பக்தியாற் சகலலோகஜனனி க்ஷீராப்தி புத்திரி விஷ்ணு மார்பிடங்கொண்ட நளினாக்ஷி சமஸ்த தனவித்யாசொரூபிணி அடியவர்களிச்சைப்படி "யாவற்றையும் அளிப்பவளே! நீயென் பொக்கிஷத்தை விட்டொருநாளும் நீங்காதிருக்கவேண்டும் என்று துதிக்க இலக்குமிதேவி பிரசன்னமாகி இந்திரனே! என்னுடைய பிரசாதத்தால் நீ விரும்பிய யாவற்றையுமடைவாய் என்று சொல்லி மறைந்தாள். பின்னர் இந்திரன் விஸ்வகர்மாவால் நிருதிமூலையிற் சப்த மாதர்களை பிரதிஷ்டை செய்வித்து பிரகஸ்பதி பகவானால் ஆவாகனமும் சுப முகூர்த்தத்திற் பூஜை நைவேத்தியாதிகளும் செய்து துதித்தவுடன் சப்தமாதர்கள் பிரசன்னமாகி இந்திரனே! யுத்தத்திலுனக்கு வெற்றிதருகின்றோம் நீ இப்பொழுதே தேவலோகம் சென்று அசுரர்களை யுத்தத்திற்கு அழையென்று சொல்லி மறைந்தருளினார்கள். அதன்பின இந்திரன் தேவலோகமடைந்து முப்பத்துமுக்கோடி தேவர்களைச்சகாயமாக வைத்துக் கொண்டு அசுரர்களை யுத்தத்திற்கு அழைத்தான் அசுரர்கள் மிகுந்த கோபம் கொண்டு பட்டணத்தில் ஒருவருமின்றி யுத்தத்திற்கு வந்தார்கள். அப்பொழுது பரமசிவ பிரசாதத்தாலும் இலக்குமிதேவியனுக்கிரகத்தாலும் சப்தமாதர்கள் சகாயத்தாலும் அசுரர்களை வென்று தன் பட்டணத்தில் அரசாக்ஷிசெய்திருந்தான் ஆதலால் இலக்குமிதேவியைபூசித்து அந்த ஆலயத்தில இருக்கபபட்ட தீர்த்தத்தில் ஸ்நானம்செய்பவர்கள் வறுமையின்றி புத்திரனை யடைவார்கள். சப்தமாதர்களை தெரிசித்தவர்கள் சத்துருபய முதலான கொடிய துன்பங்கள் அடையமாட்டார்கள்.

5-வது அத்தியாயம் முற்றிற்று.

A. No. 8074
G 91:38



# 6-வது கௌதமர் வரமடைந்த

## அத்தியாயம்,

பூர்வத்திற் கௌதமரிஷியானவர் பஞ்சநதஸ்தலத்தில் திரிகாலஸ்நானஞ்செய்து, சிவார்ச்சனை தினமொன்றுக்குப் பதினாயிரம் பஞ்சாக்ஷரஜபம் ருத்திரஜபஞ்சிவாலயப்பிரதெக்ஷிணஞ் சோமவாரவிரதம் கிருத்திகாசோமவாரத்தில் விசேஷமாகபிஷேகத்துடன் நிவேத்தியந்தீபமாலைமுதலான பணிவிடைகள்செய்து ஆகாரமின்றி வாயுபக்ஷணஞ்செய்துகொண்டு, இந்திரியநிக்ரகத்துடன் பஞ்சாக்கினிமத்தியிலொருவருஷகாலந் தவசுசெய்து வந்தார். இவ்வண்ணநிகழுநாளிற் பஞ்சநதீஸ்வரர் விபூதிருத்திராக்ஷதாரியாய் நாகாபரணம், சிரமாலை, இவைகளைத்தரித்து விக்னேசுவரர் குமாரர் அம்பாள் சமேதராய் ரிஷபாரூடராய் நந்திமுதலான கணங்கள் புடைசூழ்ந்து தோத்திரம் செய்யக் காக்ஷி தந்தார். கௌதமர் பரமசிவனை தரிசித்து சுயம்பிரகாசனும் தன்னைப்பார்க்கிலும் வேறொன்று இல்லாதவனும், சிற்சித்திசடசத்திற்கு காரணமானவனும், அத்துவிதசொரூபனும், தன்சத்து ஜடமாயும் ஜெகத்துசத்து தானாயுமுள்ளவனும் சூரியன் சந்திரன் அக்கினியும்மூவர்களையுந் தன்காந்தியால் விளங்கப் பண்ணுகிறவனும், சர்வசாக்ஷியாயுள்ளவனும், ஆனந்தசொரூபனுமான வுன்னைப்பிரத்தியக்ஷமாகப் பார்த்தேன் அடியேனை ரட்சித்தருளவேண்டுமென்று நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ்செய்தார். அப்பொழுது பரமபதியானவர்கௌதமரே! உம்முடையதவசாலும் ஸ்தோத்திரத்தாலுமானந்தமடைந்தோம். உமக்குவேண்டிய வரங்களைப் பெற்றுக்கொள்ளலாமென்றார். கௌதமர் வைராக்யமுள்ளவர்களு மாச்சரிய மில்லாதவர்களுமான யோககிகளாலுங் காண்பதற்கரிய தேவரைக்கண்டவெனக்கு வேறென்னவிச்சையிருக்கின்றது என்றுசொல்லப்பரமசிவன் மிகுந்த ஆனந்தமடைந்து, மனயிஷ்டத்தைச்சொல்லுமென்றார். அதைக்கேட்ட கௌதமர்சுவாமி! எனக்குத்தேவரீருடைய திருவடியைவிட்டு நீங்காத பக்தியும் சமஸ்த விஷயங்களில் வைராக்யமும் உண்டாகவும். என் ஆசிரமமாகிய அன்னவதார ஸ்தலத்தில் அதிதிபூசை பண்ணக் குறைவின்றி வயல்களில் விளைகின்ற நெல்லெல்லாம் அரிசியாக விளையவும், மலமூத்திராதி விசர்க்கஞ்செய்ய இந்தப் பஞ்சநதத்திலுள்ள மண்ணெல்லாம் சிவலிங்க சொரூபமாகத் தோன்றுவதாலும், காவேரியிற் செய்தால் மகாபாதகமென்று சாஸ்திரங்க

சொல்லா முறையிடுவதாலும் அச்சமாயிருப்பதனாற் சோற்றுத் துறையில் யான் வசித்துத் தினமொருதரம் வந்து, உங்கள் தெரிசனஞ் செய்துகொண்டுபோகவும் வரந்தரவேண்டு மென்றார். பரமசிவன் நீர் கேட்டவாறே தந்தோமென்று சொல்லிமறைந்தருளினார். கௌதமர் காவேரிஸ்நானத்தோடு சிவதரிசனஞ் செய்து, திருச்சோற்றித்துறையையடைந்து, அவ்விடத்தில் விளைகின்ற நெல்லெல்லாம் அரிசியாகவிளையப் பஞ்சகாலத்தில் வருந்திய நான்கு வருணத்தாருக்கும் குறைவின்றி அன்னதானஞ் செய்தலோடு அவரவர்கள் சுபாசுபங்கட்குஞ் சொர்ணதானமுஞ் செய்துவந்தார். இவ்வண்ணம் பன்னிரண்டு வருஷகாலம் குறைவின்றிக் கௌதமர் நடத்திய அன்னதானத்திற் புசித்துப், பஞ்சகாலநீங்கித் தங்கள் தங்களூருக்குத் திரும்பின பிராமணர்களில் சில அயோக்கிரர்கள் கௌதமரடைந்த வரத்திற் பொறாமை கொண்டு, கௌதமர் கோவதை செய்தாரென்று பொய் நிந்தை சொன்னார்கள். அதைகேட்ட கௌதமர் அதிக கோபங் கொண்டு பொய் நிந்தை சொல்லிய நீங்கள் வேதங் கெட்டு சாதிகெட்டு, சூத்திரசம்ப்ர தாயத்தையடைந்து பாபக் கடலை தாண்ட வழிதெரியாமல் மயக்குற்று திரிகின்றனர்.

6-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## 7-வது சதாநந்தர் தவசித்தியடைந்த அத்தியாயம்.

பூர்வத்தில் சதாநந்த முனிவர் தன் தந்தயாகிய கௌதமரிஷியை நோக்கி ஐயா! உலகத்திலனேக க்ஷேத்திரங்களிலிருக்கின்றனவே அவைகளில் எந்த க்ஷேத்திரத்திற் காலதாமதமின்றி புண்ணியவிருத்தியோடு பஞ்சாக்ஷர சித்திகிடைக்குமதனை யடியேனுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்கத் தவசித்திகரமாவுள்ள க்ஷேத்திரஞ் ஜப்பியேசுவரம் எல்லாநதிகளிலு முத்தமநதி காவேரி; அந்தஸ்தலத்தில் வாசமாத்திரத்தாள் மறுஜனன மில்லாது முத்திகிடைக்கின்றது. பரமசிவன் மரணகாலத்தில் வலது செவியிற் தாரகமந்திரமாகிய பிரணவத்துடன் பஞ்சாக்ஷர மந்திரத்தையும் உபதேசிக்கின்றார். அந்தஸ்தலத்தில் தனுர்மாதம் ஆருத்திராநக்ஷத்திரத்திலு மறறமாச பருவங்களிலுஞ் சங்கராந்தி முதலிய புண்ணியகாலங்களிலும் ஜப்பியேசுவராகிய பரமசிவனை

தெரிசித்தால் கைலாயமடைவது நிச்சயம். ஆகையால் நீ அந்த ஸ்தலத்தையடைந்து தவசுசெய்வாயென்று உத்திரவுதந்தார். சதாநந்தர் திருவையாற்றையடைந்து, காவேரிஸ்நானஞ்செய்து நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு பரமசிவனைதெரிசனஞ் செய்து, அநுஷ்டானுதி காலங்களுஞ் சிவதெரிசன காலங்கள் நீங்கலாக மற்றக்காலத்தில் காவேரியின்வடகரையில் இடதுகாலே கீழேயூன்றிக் கைகளை ஆகாயத்தில் தூக்கி, நாவிற் பஞ்சாக்ஷர மந்திரத்தை யுச்சரித்து ஒருவருஷகாலம்வரையிலும் தவம் செய்தார். அக்காலேயிற்பரமசிவன் இந்திரனைப்போல வேடம் பூண்டு வெள்ளையானை மேலாரோகணித்துச் சதாநந்தரிஷியின ருகில் வந்தார் சதானந்தர் எதிர்கொண்டு வணங்கி ஆசனம் அர்க்யபாத்தியம் ஆசமநீய முதலான உபசாரங்கள் செய்தார். இந்திரவேடங் கொண்டபரமசிவன் கௌதமகநந்தரே!நீர் இச்சித் தவரங்களை கேளும்தருகின்றோம் என்றார். சதானந்தர் நகைத்து இந்திரனே! தேவோத்தமரான மகாதேவனிடத்தில் பக்தியால் முக்தி யடைய விரும்பிய நான் அநித்தியமாகிய உன்பதவியை விருப்பவில்லை இஃதன்றிப் பிர்மா விஷ்ணுவையும் ஒருபொரு ளாக எண்ணவில்லை, எக்காலத்திலும் எனதுள்ளங் குடிகொ ண்ட பரமசிவன் இழிந்த எப்பிரவி தரினுமதில் விருப்பமு டையனென்றார். அதைக்கேட்டு இந்திரன் வேடங்கொண்ட பரமசிவனுள்ளத்தில் ஆனந்தம் அடைந்து வெளியில் கோபங் கொண்டவர் போல் சதானந்தரே! திரிலோகாதிபதியாகவும் சகல தேவர்களாலும் வணங்கப்பட்டவனாகவுமுள்ள நான் உன க்கு என்உலகத்தில் அமிர்தபானம் பஞ்சதரு நிழலில் வீற்றி ருத்தல், கிருதாசி, மேனகை, ரம்பை, ஊர்வசி, திலோத்தமை முதலான தேவமாதர்களால் போகம் கிடைத்தல் முதலியவை களை கொடுக்க வந்திருக்க, அதைவிட்டு பூதப்பிரேத பிசாச கணங்கள் சூழ மயானத்தில் வசிப்பவனும், திகம்பரனும் உன் மத்தனும், நிர்குணனுமான பரமசிவனை மூடனாகிய நீ தியானிக் கின்றாய். அவனை விட்டு இனிமேலாகிலும்என்னைத் தியானி என் று சொன்ன செவிசுடும் வார்த்தைகளைக்கேட்டு அதிகோபத் துடன் தேவர்களில்அதமான இந்திரனே! சிவபக்த சிரேஷ்ட னை அளகாபுரிக்கு இறைவனுக்கு எண்ணிறைந்த செல்வத்தை க்கொடுத்தவரும் க்ஷீராப்தியில் மந்திரபருவதத்தை மத்தாக நாட்டி அமிர்தமதனம் பண்ணும் காலத்தில் அதிலிருந்துண்டா கிய ஆலகாலவிஷத்தை அமிர்தம்போல் உண்ட திருநீலகண்ட ரும் தக்ஷப்பிரஜாபதி யாகம் செய்த காலத்தில் வீரபத்திரால அதை நாசம் செய்தவரும் விந்திய பருவதத்தை பூமியிலழுத்தி

இல்வலன் வாதாபியை கொன்று சமுத்திரத்தை குடங்கையில் அடக்கி யாசமனம் பண்ணிய கும்பமுனிக்கு அநுக்கிரகம்பண்ணினவரும் அற்பாயுளை அடைந்து எமனாற் பீடிக்காப்பட்ட மார்கண்டேயருக்கு சிரஞ்சீவி கொடுத்து காலனை சம்பாரம் செய்தவரும் திரிபுராதிகளால் வருந்திய மூவுலகத்தையுங் காத்து திரிபுர சம்காரம் செய்தவரும் சிவாவென்று ஒருதரம் நாவினால் உச்சரிப்பவர்களுக்கு சகல சம்பத்தையும் அளிப்பவருமான பரம கருணாநிதி, உன்னால் கேவலனென்றும் நிந்திக்க தக்கவரோ? அப்பரமசிவன் நிர்குணரென்றும நிர்தேகி என்றும் நாமரூபமற்றவரென்றும், மற்ற விஷ்ணுவாதி தேவர்கள் சகுணரென்றும், உன்வார்த்தையால் அறிந்தேன். அசுரர்களின்றும் உன்னை ரக்ஷித்துக்கொள்ள சக்தி யில்லாத நீ எனக்கென்ன வரம் அளிக்கப்போகிறாய் நீஇங்கு வந்ததை அசுரர்கள் அறிந்த உன்மனையாளைக் கவர்ந்து கொண்டு போய்விடுவார்களாதலால இந்தக்ஷணமே இவ்வுலகம் விட்டு உன் உலகம் சேரென்றுசொல்லி யந்தோ! சிவநிந்தை செய்யப்பட்டவர்கள் நாவையறப்பவர்களுக்கு இருபத்தொரு தலைமுறை சிவலோகமும, சிவநிந்தை செய்யப்பட்ட விடத்திலிருப்பவர்களுக்கு நரகமும் காணியாகுமே என்று இருகரத்தாலும் செவிகளைப்பொத்தி அவ்விடம விட்டகன்றார். இந்திரவேடம் பூண்டுவந்த கருணாநிதியாகிய பரமசிவன் இந்திரன் ரூபத்தை விடுத்து, மான், மழுத, மருகமிகளை கைகளிலும் சந்திரன், கெங்கை, ஊமத்தைமலர் இவைகளைசிரசிலும், நாகாபரணத்தை மெய்யிலுந்தரித்து, உமாசமேதராய் ரிஷபவாகனத்தின் மேல் சதாநந்தர் முன்பு தோன்றினார். சதாநந்தர்,மிகுந்தவருத்தத்துடன் சிரசிற்கைகூப்பி நின்றுந்தேசம் காலம், திக்கு பேதத்தா பேதத்தையடையாத பரமபதியே! அக்ஞானிகளால் அறியப்படாதவரே சர்வசாக்ஷியென்றுஞ் சுத்தனென்று மாயையாற் கட்டுப்பட்டவனைப்போல் நடிக்கின்றவனே என்றும் தன்வித்தையால் அவித்தையை நசிக்கச்செய்கின்றவனே யென்றும், சின்மயமாகிய தன்னிடத்தின் மாயை கற்பிதமென்றும், அவித்தைகாரியமாகிய பிரபஞ்சத்தை வித்தையால் நாசஞ்செய்யப்பட்டவனே யென்றும், சலகத்திற்கு மிருப்பமான தனக்கு நாசமில்லாதவனேயென்றும், வேதவேதாந்தங்களால் முறையிடப்பட்டவனே! சுவாமி பரமசிவா! தேவரீர் கிருபாகடாக்ஷத்தாற் சம்சாரமாகிய பெருங்கடலினின்று மடியேனைக் கரையேற்றி யென் ஜெனனவிதையை இனிமுளைக்காது செய்தருளவேண்டுமென்றடியற்றமரம்போற் பூமியில்விழுந்தார், விழுந்வரை பரமபதியானவர் இருகரங்களாலுந் தூக்கிச்

சதாநந்தரே! உம்முடைய தவசாலுந் தோத்திரத்தாலுமானந்தமடைந்தோம். வேண்டியவரங்களைத் தருவோமென்றார். சதாநந்தர்சுவாமி! எப்போதுந்தேவரீர் பாதபங்கயத்திலெனசிந்தை இருந்தாலும் தேவரீர் சொரூபத்தியானத்தின்றிவேறோர் தியானமில்லாமையும் தங்கள் நாமசங்கீர்த்தனத்தில் விசுவாசமும், தங்கள்கதாசிரவணத்திலென்னறிவு பிறழாதிருந்தாலும், தங்கள் மூர்த்திபேதத்தைத் தெரிசிப்பதில் எனகண்ணிருத்தலும் துர்ச்சனர்சேர்க்கையின்றியிருத்தலும் உள்ளிந்திரிய வெளியிந்திரிய நிக்ரகம், வைராக்கியம் நித்திய கர்மானுஷ்டானம் வேதாத்யயனம் காமக்குரோதாதிநீங்கல் முதலான சர்க்குணங்களையுடைய பெரியோரிடத்திற் சேர்க்கையுந் தந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கப் பரமபதியானவர் சதாநந்தரே! நீர் வேண்டியவாறே யாந்தந்தோமென்று சொல்லிப்பிரமகத்தி முதலான கொடியபாவங்களையெல்லா நாசஞ்செய்யப்பட்ட இந்தப்பஞ்சநதக்ஷேத்திரத்தில் நீர்எப்பொழுதும் வசியும் இந்தஸ்தலத்திலிருக்கப்பட்டவருடைய யோகக்ஷேமத்தை யாம்வகிக்கின்றோம். புண்ணியகாலங்களில் காவேரிஸ்நானஞ்செய்து எம்மை தரிசிக்கின்றவர்களுக்கு சிவலோகங்கிடைப்பதுநிச்சயம் இந்தஸ்தலத்தில் ஜனித்த சகலஜீவராசிகளுமெம்முடைய சொரூபமேயன்றி வேறல்ல மரணகாலத்திற் தாரகமந்திரமாகியபிரணவத்துடன் பஞ்சாக்ஷரமந்திரத்தை வலதுசெவியிலுபதேசிக்கின்றோம்.

இந்தஸ்தலத்திற்சிவராத்திரி புண்ணியகாலத்தில் யாராயினும் உபவாசங்கள்கண் விழிப்புசிவாலயப்பிரதக்ஷணம் பஞ்சாக்ஷர ஜெபத்துடன் ருத்ரஜெபம் முதலியவைகளைச் செய்து இரவைப்போக்கியருணோதயத்திற் காவேரியில் ஸ்நானஞ்செய்து அநுஷ்டானமுதலிய நித்தியகருமத்தை முடித்து நம்மை தெரிசித்துச் சிவராத்திரி விருதாங்கமாகப் பிராமணபோசனமுஞ்சொர்னதானமுஞ் செய்பவர்களுக்கு மாதாவின் கெர்ப்பவாசங்கிடையாது. ஜீவர்கள் கடைத்தேறும்பொருட்டு எமதாராதனைக்கு வேண்டிய சாமக்கிரியைகளை யளித்தாற் சிவலோகங்காணியாகும். இதற்குச்சான்றாக வோர்கதை சொல்கின்றோம். பூர்வத்தில் மகாபாதகனாகக் காஞ்சிதேயத்திற்பிறந்து அநேக வேசியாதர்களுக்கு நாயகனாயிருந்த துற்போதனென்னு மோர் பிராமணனிருந்தான். அவனந்தத்தேயத்துள்ள பிராமணரைப் பொய்வழக்குப் பொய்சாக்ஷிகளால் வருத்தப்படுத்தியவர்கள் திரவியத்தைக் கிரகித்து, அதைவேசியருக்குப் உபயோகப்படுத்திக் கொண்டுவந்தான். அச்சங்கதியை யவ்வூரிலுள்ள அரசனறிந்து,

நேயத்தைவிட்டு நீக்கினான். அதன் அத்தூர்ப்போதனைத்தன் பின் அத்தூர்ப்போதன் அனேக தேசங்களிற் சஞ்சரித்து அங்கங்குதிருடி யவ்வூரிலுள்ளவர்களாலவமான மடைந்து பின் திருவையாற்றைஅடைந்தான். அவனடைந்தவன்று சிவராத்திரி யாகையாற் பகற்காலமுழுதும் போசனமில்லாமல் இரவு போ சனவபேக்ஷையாற்சிவாலயத்திற்றிரிந்துகொண்டிருக்கும்போது சிவாம்சமடைந்த தூர்வாசகர் அவனைக்கண்டு ஞானதிருஷ்டி யால் மகாபாதகனென்றறிந்து மருகனழைத்து பிராமணத்த மனே! நீ அனேகபாதகங்கள் செய்திருக்கிறாய்உன்னைப்பிடித்து க்கொண்டு போவதற்கு எமதூதர்களுன் னருகில் வந்திருக் கிறார்கள். அவர்களைப்பாரென்று அவன்கண்ணுக்குத் தெரியும் படி யநுக்கிரகபண்ணினார். அத்தூர்ப்போதன் எமதூதர் களைக்கண்டுபயந்து சுவாமி யடியேனை ரக்ஷித்தருள வேண்டு மென்று தூர்வாசர் பாதத்தில் வீழ்ந்தான். தூர்வாசமகரிஷி யானவர் பயப்படாதேயென்று சொல்லியவனைக் காவேரியில் மூழ்கும்படிசெய்து, பாபநாசஞ்செய்யும் பஞ்சாக்ஷர மந்திரத்தை யுபதேசித்துத் தன்னருகிலிருந்து ஜெபிக்கும்படி யிருத்தினார். அவ்வாறே மகரிஷியினருகிலிருந்து மந்திரஜெபம் செய்தான். இரவுநீங்கினவுடன் தூர்வாசர்தூர்ப்போதனைப்பார்த்துப் போ தனே! உனக்கு நூறுவயதென்று கற்பிதமாயிருந்த ஆயுள் பாவத்தான சித்துப்போயிருந்தது. இப்பொழுது ஈஸ்வரதெரி சனத்தாலும், பஞ்சாக்ஷர மந்திர மகிமையாலும், காவேரி ஸ்நா னபுண்ணியத்தாலு, பென்னைத்தெரிசித்த பலத்தினாலும் பூர்ணா யுளுண்டாயிற்று. இதைக்கண்ட எமதூதர்கள் ஓடிப்போய் விட்டார்கள் என்னுடன் ஸ்நாநத்திற்கு வாவென்றவனையழை த்துக்கொண்டுபோய்க் காவேரிஸ்நானமுஞ் சிவ தரிசனமுஞ் செய்துவைத்துத், தன்னாச்சிரமஞ்சென்று, பாரணைமுடித்துத் தன்னுச்சிஷ்டத்தை யவனுண்ணும்படிசெய்து உன்மரண பரியந்தம் பஞ்சநதத்தில் வசிக்கக்கடவாயென்று உத்தரவுபண் ணினார் அவ்வாறே தூர்ப்போதன் பஞ்சநதத்தில்வசித்து மரண மடைந்தான். அவனை நந்தியினாற் சிவலோகத்துக்கழைப்பித்து, ச்சாரூப்பியமளித்துச் சிவகணங்களுக்கதிபதியாக்கிப் பிருங் கிரிஷி கணநாதரென்றும் பெயர்தந்தனம். ஆகையாற்சதாநந்த ரே! நீர் இந்தப் பஞ்சநதத்திற்றானே, வசியுமென்று மகாலிங்க தில்மறைந்தருளினார். அதன்பின் சதாநந்தர் ஜீவன்முத்தியை யடைந்து, தன்னந்தராத்மாவில் மாயாகற்பிதமான ஜகமனைத் தும் பொய்யென்றுகண்டு, பிரமஞானியானார்.

7-வது அத்தியாயம் முற்றிற்று.

## 8-வது ஜப்பியேசுவரமென்று பெயர் வந்ததற்கு காரணமுரைத்த அத்தியாயம்

அனவத்தியாதேவியாவள் தன்காதலனாகிய நாதசன்மாவைவணங்கிநின்று, சுவாமிபஞ்சநதத்திற்கு ஜெப்பி யேச்சுரமென்று பெயர்வந்தகாரணஞ் சொல்லியருளவேண்டுமென்று கேட்க நாதசன்மா பெண்ணே! பூர்வத்திலோருக்கிரிபருவதச் சாரலிற்றவஞ்செய்த கோரதபசி சிவத்தியானத்துடன், தினமொன்றுக்குப் பதினாயிரம் பஞ்சாக்ஷரமந்திரஞ் செபித்து, மந்திரசித்தியாகாமல் இமயமலைச் சாரலைவிட்டு, சிவக்ஷேத்திரங்களையடைந்து, ஒவ்வொரு க்ஷேத்திரத்திலும் நூறு நூறு வருஷமிருந்து தவஞ்செய்து மந்திரசித்தியாகாமல் மிகுந்ததுக்கத்துடன் மந்தரபருவதஞ் சென்று, அவ்விடத்தினூறுவருஷமிருந்து, ஜெபஞ்செய்து சித்தியாகாமல் அதிசோகத்துடன் பரமசிவனை நோக்கித் துக்கமடையுங்காலத்திற் கோரதவசியே காவேரியினுத்திரபாகத்திற் புண்ணியக்ஷேத்திரமாயும், பாபநாசமாயுஞ்சித்திக்ஷேத்திரமாயுமுள்ள திருவையாற்றையடைந்து அந்தக்ஷேத்திரத்திலிருக்கின்றவாலயத்தில் மூலஸ்தானத்திற்கு மேற்கில் ஆதிவிநாயகருக்குஞ் சப்தமாதர்களுக்கும் மத்தியபாகத்திலிருந்து, தவசுசெய்தால் மந்திரசித்தியாகுமென்று ஆகாயத்திலோரசரீரியுண்டாயிற்று. அந்தஅசரீரிக் கோர்நமஸ்காரஞ் செய்துமந்தரபருவதத்தைவிட்டுத்திருவையாற்றையடைந்து காவேரிஸ்நானஞ்செய்து ஆலயத்தினுள்வந்து சிவதெரிசனஞ்செய்துகௌதமர்முதலான மகரிஷிகளையுந் தெரிசித்து, அங்கெழுந்தருளிய தூர்வாசமகரிஷியைக்கண்டு, நமஸ்கரித்து எழுந்து பயபக்தி விசுவாசத்துடனின்று, ஐயாமகரிஷியே! மறுபிறவியைபோக்கத்தக்க சிவப்பிரசாத மெவ்விதமுண்டாகுமென்று கேட்க அதற்கு அத்திரி மகரிஷியினந்தனராகிய, தூர்வாசர் கோர தவசியே! கற்பொடிகளை ஆகாரஞ் செய்துகொண்டுபரமசிவனாற்சொல்லப்பட்ட இடத்திலிருந்துதவசுசெய்தாற் சீக்கிரத்தில்மந்திரசித்தியடையலா மென்றார். கோரதவசியவ்விடஞ் சென்று,கற்பொடிகளை ஆகாரஞ்செய்துகொண்டாறுமாதகாலந் தவசுசெய்கையில் பரமசிவன் பிரசன்னமாகிக்கோரதவசியே! உன்னுடைய அரியதவத்தாலானந்தமடைந்தோம் உனக்கிஷ்டமான வரத்தைக்கேட்பாயாகவெனக்கோரதவசி பரமகருணாநிதியே! தேவரிடத்தில்பத்தியுந்தேவரீர்பிரசாதமுமடியேனுக்கு வேண்டுமென்றார். பரமபதியானவர் நீ விரும்பியவாறேதந்தனம், எமதம்சமாகிய தூர்வாசரிடத்திலெப்பொழுதும் விசுவாச

முள்ளவனாக விருவென்று சொல்லிமறைந்தருளினார். கோர தவசிஜெபசித்தியடைந்தமையாற் ஜெப்பியேச்சுரமென்று பெயருண்டாயிற்று.

8-வது அத்தியாயம் முற்றிற்று.

## 9-வது பஞ்சதமென்று பெயர்வந்தற்கு காரணமுறைத்த அத்தியாயம்.

அனவத்தியாதேவி நாதசென்மாவைவணங்கி நின்று சுவாமி! ஜெப்பியேச்சுரத்துக்குப் பஞ்சநதமென்று பெயர்வந்த காரணமுறைத்தருளவேண்டுமென்றுகேட்க, நாதசன்மா பெண்ணே! கோரதவசியானவர் கற்பொடிகளையுண்டு, தவஞ்செய்த காரணத்தாற்சிலாத முனிவரென்ற பெரையும் பரமசிவனால் வேண்டியவரத்தையும் பெற்றுத்தூர்வாசமுனிவரிடத்திற் சென்று, தான் பரம்பதியால் அனுக்கிரகம்பெற்றதைச் சொன்னார். தூர்வாசர்சிலாதமுனிவரையாலிங்கனஞ்செய்து, கோரதவசியே பவித்திரமாயும், பாபநாசமாயுந்தூர்ச்செர்பபனதோஷஹரமாயும், அசுவமேதமுதலான யாகங்களாலுண்டாகும் புண்ணியபலத்தையும், நான்குவேதாத்யயனபலத்தையும், கங்கைமுதலாக அறுபத்தாறுகோடி தீர்த்த ஸ்நானபலத்தையும், கொடுப்பதாயுமுள்ள இந்தக்ஷேத்திரல் வாசஞ்செய்து ஜெப்பியேச்சுரமென்கின்ற நாமசங்கீர்த்தனஞ்செய்தால்பரமபதியானவர்பாவத்தைப் போக்கிநித்தியாநந்தத்தை யளிப்பார், ஆதலாலிந்தக்ஷேத்திரத்தில்தானே வசிப்பாயென்று சொல்ல அவரைப்பார்த்துக் கோர தவசி சுவாமி! பாபநாசஞ் செய்துநரகத்தைப்போக்கி, முத்தியளிப்பாரென்றீரே! பாபமெது? நரகம்எவ்வாறுளது, அவைகளை அடியனுக்கு தெரிவித் தருளவேண்டுமென்றார். தூர்வாசமகரிஷி பிர்மகத்தி, சுராபானம், பிராமணதிரவ்யம் கவர்தல் மாதுர் கமனம் செய்யப் பட்டவர்களுடன் சேர்தல் இவைமகாபாதகம் தாயையொத்த மாதர்களுடன் புணர்தல், தன் பெண், உடன் பிறந்தவள், புத்திரன் மனையாள், இவர்களுடன் புணர்தல் இராஜ வம்சத்தாருக்கும் வைசிய வம்சத்தாருக்கும்

துன்பம் விளைத்தல், யாகத்திற்குக் கெடுதிசெய்தல், விழுப்பு
மாதர் கெர்ப்பமாதரைப் புணாதல், ஆத்திரேயகோத்திரத்திற்
பிறந்த பிராமணனைக் கொலைசெய்தல், பிர்மவிஷ்ணு ருத்திர
மூர்த்தி விக்கிரகங்களை உடைத்தல், இவைகள் அதி பாதகம்,
பயிர்விளை பூமியை அபகரித்தல், சிரியதகப்பன் மனைவியாள்,
அம்மான் மனைவியாள், இராஜன்மனையாள் மாதாமகர்பாரியை
இவர்களைப்புனர்தல் பிறர்மனையாளிடத்தில் அவர்கள் நாயகன்
போல வேடம்பூண்டு புனர்தல் இவர்கள் பிர்ாசங்கிகபாவம்
வேதத்தைவிடுதல் மாதவின்தங்கை, பிதாவின்தங்கை, அத்
தைமகள் இவர்களைப்புனர்தல் நெற்றியிற்றிரிபுண்டரமும் சரீ
ரதில் விபூதியும் தாளனமும் இல்லா திருத்தல், அன்னிய புண்
டரங்களிலாசைபபடுதல், சங்குசக்கரத்தாற் சூடுபடுதல் இவை
சமபாதகம், ரித்கவிங் அத்தியாபயன், சோத்திரியப்பிரா
மணன், சினேகன் இவர்கள் மனையாளைப்புனர்தல், தன்மனை
யாளுடன் சேராதிருத்தல், தன்மனையாளுக்குப பாங்கியார்
சகோத்ரமதிாதர் பிரர்மணகன்னிகை, நரலாமாச்சிரமமடைந்த
மாதர், தன்னைபடைக்கலமடைந்தமாதர் இவர்களைப்புனர்கல்
துர்க்காதிதேவதைகள் விக்ரகங்களைப் பேர்த்தல், யாவரையும்
நிந்தித்தல், பாசண்டமதத்தருடன் சேர்தல், இவைகள் முக்
கியோபபாதகம் கிராமத்தில் தீயிடுதல், அசத்தியம் சொல்
லல், கோட்சொல்லல், குருவுக்குத் துன்பம் விளைத்தல்,
வேதத்தை மறத்தல், தாய், தந்தை, தங்கை, மனையாளைத்தள்
ளுதல், உண்ணக்கூடாத பதார்த்தங்களை உண்ணல், பிறர்
பொருள்கவர்தல், பரதாரகமனஞ் செய்தல், குலகோத்திர
வீனனுக்குயாகஞ்செய்துவைத்தல், திரவிடங்கள் கொடுத்து
வேதங்கற்றல், திரவியம் வாகிங்க்கொண்டு வேதம்சொல்வி
வைத்தல், வேதத்தில்சொல்லிய கருமங்களை விடுத்தல், யாவ
ராலுநிந்திக்கப்பட்டவனுக்குக் கருமஞ்செய்துவைத்தல், விரு
க்ஷங்களை வெட்டிவிற்றுச் சீவனஞ்செய்தல், ஆபிசார யாகஞ்
செய்தல், தனக்குமாத்திரம் அன்னம்சமைக்கச்செய்தல், பிரம
சரியவாச்சிரமத்தை விடுத்தல், சோமயாகமுதலிய யாகங்களை
விடுத்தல் பஞ்சமாகாவெக்கியத்தை விடுத்தல், புத்திரவுற்
பத்தி செய்யாதிருத்தல், நாஸ்திக சாஸ்திரங்களைக் கற்லல்
கெட்டநடவடிக்கையிலிருத்தல், மத்திபயானஞ்செய்யும் மாத
ருடன் சேர்தல், இவைகள் கௌணபாதகம். பிராமணர்களுக்கு
ரோகமுண்டாகும்படி செய்தல், கஞ்சா, கள்முதலானவைகளை
அருந்தல், உலகத்தாருக்கு மாறுபடநடத்தல், மிருகத்துடன்

புனர்தல், பூமியில் இந்திரியத்தைவிடுதல், ஏகாதசி, இருபருவங்கள், விதிபாதம், நாயிற்றுக்கிழமை, சிரார்த்ததினம், மாசப்பிறப்பு, இவைகளில் புனர்தல் இவைகள் சாதிப்பிரம்சகரபாதகம். கிராமக்கலகஞ்செய்தல், ஆரணியத்தை யழித்தல், மிருகங்களை வாதைப்படுத்துதல் பொதுத் திரவியத்தை நாசஞ்செய்தல் இவைகள் சங்கீர்ணகரண பாதகம். சாதியீனர்களிடத்திற் திரவியம், அன்னம் வாங்குதல், யாவரையும் நிந்தித்தல் சீவனஞ்செய்தல், வியாபாரஞ் செய்தல், பொய்சொல்லல், சூந்திரனுக்கு யாகஞ்செய்துவைத்தல் இவைகள் அபாத்திரிகரணபாதகம். பக்ஷிமிருகங்களுக்குக ண்ணி வலை இடுதல், சூதாடுதல், கள்ளுடன் அன்னங்கலந்துண்ணல், இவைகள் மலாவக பாதகம். சுருதி, ஸ்மிருதி, புராணம், இதிகாசம் இவைகளிற்சொல்லிய சந்தியாவந்தனத்தைக் குறித்தகாலனத்திற்செய்யாமல் அகாலத்திற்செய்தல், ஔபாசனம், வைசுவதேவம், பிரமவெகக்கியம, அதிதிபூஜை, தேவார்ச்சனை முதலான பஞ்சமகாவெக்கியத்தை விடுத்தல், சிவ விஷ்ணு நாம சங்கீர்த்தனம் செய்யாதிருத்தல், மேற்சொல்லியவைகள் நீங்கலாக மற்றப்பாவங்களைச்செய்தல், இவைகள் பிரகிர்ணபாதகம. தெண்டனைக்குரியவர்களை விடுத்தல், தெண்டனைக்குரியரல்லாதவனைத்தண்டித்தல் பிராம்ணக்கிராமத்தி லிறைவாங்கல், யுத்தத்திற் புறங்காட்டிப் பயந்தோடல், அரசாகளுக்குரிய விசேஷமகாபாதகம்; குறைபடிக் கல்லால் விற்றல், வைசியருக்குரியபாதகம். மாம்சங்கள் விற்றல், பிராமணமாதரைப்புனர்தல், காராபசுப் பாலுண்ணல் சூத்திரர்க்குரிய பாதகம். நீசனைச்சேர்தல், நாயகனுடைய பணிவிடைக்காரனைப் புனர்தல், கெர்ப்பக் கெடுதிசெய்தல், நாயகனுக்குக் கெடுதிவிளைத்தல், மருமகன் குலகுரு இவர்களைப்புணர்தல் மாமன் மாமியை நிந்தித்து எதிர்த்துப் பெசுதல், கொழுந்தன்மார்களை யலக்ஷியஞ்செய்தல், மாதர்களுக்குரியபாதகம் இப்பாவங்கட்குப் பிராயச்சித்தமாகப்ப்யாநகம், தாளகம், தாாளகம், உக்கிரமம், பயோத்தரம் சந்திராகுவம், மகாசந்திராமிதம், பதுமம், பதுமவதி, மாயாவிதம், பீஷணம், விகராளம், வச்சிரதீச்சநகம், வச்சிரகோணம், சுதீர்க்கம், வர்த்துலம் இரும்புவாய்களையுடைய காகங்கள்கொத்தல், கிருமிபோசனம், சத்தபௌமம், அஷ்டபௌமம், ரௌரவம், இந்திரியபானம், சிலேஷ்டமகிணறு, நானுசந்திதாகனம், தப்தசந்தம்சஸிம்சை, பித்தவாய்க்கால் நாய்மாம்சபக்ஷணம், புண்ணுமம, வன்னிக்சுவாலாப்பிரவேசம், கும்பீபாகம், தாமிசுரம், சல்மலீவிருக்ஷம், நெரும்பாறு, அசி

பத்திரவனம், இக்கெந்திரம், செக்கு, அமேத்தியமடு, முதலான
நரகங்களில் முதலாவதாகிய மகாபாதகத்துக்கு நூறு கற்ப
காலமும், இரண்டாவதாகிய அதிபாதகத்திற்குத் தொண்
ணூறுகற்பமும், மூன்றாவதாகிய பிரசாங்கியபாவத்திற்கு எண்
பதுகற்பமும், நான்காவதாகிய சமபாவத்திற்கு எழுபதுகற்ப
மும், ஐந்தாவதாகிய முக்கியபாதகத்திற்கு அறுபதுகற்பமும்,
ஆறாவதாகிய கௌணேபபாதகத்திற்கு ஐம்பது கற்பமும்,
ஏழாவதாகிய சாதிப்பிரும்சகர பாதகத்திற்கு நாற்பதுகற்ப
மும், எட்டாவதாகி சங்கீர்ணகரணபாதத்திற்கு முப்பது கற்ப
மும், ஒன்பதாவதாகிய அபாத்திரீகரணபாதகத்திற்கு இருபது
கற்பமும், பத்தாவதாகிய மலாவக பாதகத்திற்கும் பதினொரு
வதாகியபிரகீர்ண பாதகத்திற்கும் பத்துக்கற்பமும்கிடந்து,
எமதூதர்களால் காச்சியவிரும்புச் சங்கிலிகளாற் கால் கை
களைக்கட்டி, உருண்டையாக்கி அக்கினிமடுவிற் போடப்படும்,
இருப்புலக்கை பிண்டிபாலம் தோமரமுதலான ஆயுதங்களால்
வாதைபட்டும், கொதித்த எண்ணெய்க்கொப்பரையிற்போடப்
படும், உருக்கிய தாம்பரத்தையு மீயத்தையும் வாயில்விட்டுக்,
கத்தியாற்சதையைக்கழித்து, அக்கினியில் வாட்டிச் சூரண
மாகக்கி மறுபடியுமுயிருண்டுபண்ணப்படும், புழுத்த மாம்சக்
கிணற்றிறள்ளுண்டும், கரும்பாலையிலுஞ், செக்கிலுமரைபட்டும்
உரலுலக்கையாலிடிபட்டும், கத்தியால் வெட்டுண்டும், வெட்டுக்
காயத்தில் உப்புச்சலத்தை வார்க்கப்பட்டும், நெருப்புமண
லிற் புரட்டப்படும், மலையுச்சியினின்றும் கீழேதள்ளப்பட்டும்,
இந்திரியம் பித்தநீர் கோழைமலம் இவைகளைப் போசநஞ்
செய்யப்பட்டும், பாவசேக்ஷத்திற்குப் பூமியிற் செனனத்து
க்கு அனுப்பப்படுவார்கள்,

பூமியில்வந்து கொடி, செடி, பக்ஷி, மிருகம், சண்டாளன்
சங்கரஜாதி, குண்டகோளகன், சற்சூத்திரன், வைசியன்,
க்ஷத்திரியன், பின்பு அங்கவீனதரித்திர பிராமணனாகவும்,
பின் உத்தமபிராமணனாகவும் பிறந்து, மோக்ஷத்தையடைகின்
றார்களென்று சொன்னார். அதைக்கேட்ட கோரதவசி ஐயா
முனிசிரேஷ்டரே! இந்தப்பாவங்கட்கு வேறு பிராயச்சித்த
முண்டோவில்லையோ அதைச்சொல்லவேண்டுமெனத் தூர்
வாசர் சிவக்ஷேத்திரங்களிற் பனிரெண்டு வருஷம் வசித்துப்
பிராயச்சித்தஞ் செய்துகொள்ளவேண்டும். இந்தப்பஞ்சந்த
க்ஷேத்திரத்தில் ஆறுவருஷம்வசித்துப் பிராயச்சித்தம் செய்து
கொண்டால் மகாபாதகமுதற் சகலபாவமும், நிவர்த்தியாகும்

பிராயச்சித்தமாவது, திரிகால காவேரிஸ்நாநம் நூற்றெட்டு விதிப்பிரதக்ஷணத்துடன் சன்னதியில் நூற்றெட்டு நமஸ்க்காரம், பிச்சையேற்றொருவேளையுண்ணல் இராப்பகல்சோம்பனித்திரையின்றித் தினமொன்றுக்குப் பதினாயிரம்பஞ்சாக்ஷர மந்திரஞ்செபித்தலாம். இவைசெய்யச் சக்தியில்லாதவர்கள் மரணபரியந்தம் இந்தக்ஷேத்திரத்தில் வசித்தல்வேண்டுமென்று சொல்லியருளினார்.

கோரதவசி ஐயா மகாமுனிவரே! புன்னுமநாகத்தின் விபரத்தை யின்னமொருதரம் அடியேனுக்கு விரித்துரைக்க வேண்டுமெனத், தூர்வாசர் அதுகிழுமேலு முருக்கிய தாம்பரச்சுவாலையையுடையது. புத்திரனில்லாதவர்கள் தேவவருஷத்தி னூறுவருஷமதிலிருந்து வாதையடையவேண்டியது. புத்திரனையடைந்தவர்களந்தப் புன்னுமநரகத்திற்குப் போவதில்லையென்றார் சிலாதமுனிவர் சுவாமி! தேவரீரனுக்கிரகத்தால் வேறோர்நரகத்தையும்நானடையமாட்டேன் புன்னுமநரகத்தை மாத்திர மடையாதிருக்க அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென, தூர்வாசர் சிலாத முனிவரே! நீர் புன்னுமநரகத்திற்குப் பயப்படுவீராகில் நற்குலத்திற்பிறந்த வோர் பெண்ணை விவாகஞ் செய்துகொண்டு கிரகஸ்தாச்சிரமத்தையடைந்து தர்மத்தைச் செய்யுமென்றார். சிலாதமுனிவர் தூர்வாசரைநோக்கி சுவாமி யெனக்குத்தாய்தந்தையராவினர் யாவருந்தேவரீரே, யாதலால் தாங்களே யெனக்கு விவாகஞ்செய்து வைக்கவேண்டுமெனத்! தூர்வாசருடனே புறப்பட்டு வசிஷ்டாச்சிரமத்தை யடைந்து வசிஷ்டமுனிவரே! உமது தங்கையை யெயது மாணுக்கனாகிய சிலாதமுனிவருக்கு விவாகஞ்செய்து தரல் வேண்டுமென அதற்கு வசிஷ்டமுனிவர் சம்மதித்து தன்தங்கையாகியசாருலக்ஷணையைக் கன்னிகாதானவிதிப்படி விவாகஞ்செய்துகொடுக்க தூர்வாசர் சிலாதமுனிவரையும் அவர்மனையாளையும் இல்லறநடத்தும்படி அனுக்கிரகித்துத் தன்னாச்சிரமஞ்சென்றார். பின்னர் சிலாதமுனிவர் மனையாளோடு இல்லறநடத்துநாளில் அவர் மனையாளாகிய சாருலக்ஷணை ஓர் ஆண்குழந்தையைப்பெற்றனள் அக்குழந்தைக்குச் சைலாதியென்று பெயரிட்டு, மூன்றுவது வயதிற் சௌளமும், ஏழாவது வயதிலுபநயனத்தோடு வேதாத்யயனமுதல் சாஸ்திராப்பியாசமுஞ் செய்துவைத்தார். அச்சைலாதி ஐப்பியேச்சுவரமடைந்து ஓர்காலைப் பூமியிலூன்றி இருகரங்களையும் ஆகாயத்தில் தூக்கிச் சூரியனை நோக்கி அத்திவிரும், சுயம்பிரகாசரும், பரிபூரணசச்சிதாநந்தசொரூபரும்,

முத்தொழில்முதல்வரும், சாக்கிரசொப்பன சுழுத்தியாகிய மூன்றவஸ்தைக்கும் சாக்ஷியாயுள்ளவருமான பரமசிவனைத் தியானித்து நெஞ்சத்துடனின்று தவஞ்செய்தார். அப்பொழுது பரமசிவன் ரிஷபாரூடராகப் பிரசன்னமாகிச் சிலாத முனிவர் வரப்புத்திரரேயென்று விளித்தார். அதைக்கேட்டுக் கண்களை விழித்துப்பார்த்து ஸ்தோத்தரத்துடன் நமஸ்கரித்தெழுந்துநிற்க, பரமசிவன் சைலாதியே உமக்கு வேண்டியவரங்களைக் கேட்பீராகவென்றார். சைலாதி சுவாமி! தேவரீருடைய சந்நிதானத்தைவிட்டெப்பொழுதும் நீங்காதிருக்கும் வரந்தந்தருள வேண்டுமெனப் பரமசிவன் ஆனந்தமடைந்து சூரியபுஷ்கரணி தீர்த்தம், கங்காதீர்த்தம் சந்திரகிரணத்திலுண்டான அமிர்தநதி, கௌரியம்மையின் ஸ்தனத்தினின்றுமுண்டான பாலாறு நந்திவாய் நுரைதீர்த்தமாகிய ஐந்துதீர்த்தகளால் அபிஷேகஞ்செய்வித்துத்தனக்குச் சமானமான சொரூபத்தைக்கொடுத்துக் கணங்களுக்காதிபத்தியஞ் செய்யும்படி நந்திகேசுவரனென்னு நாமமிட்டுத் தன்னையும் நந்திகேசுவரரையும் உமையானவள் வேறுபாடறிவதற்கு முகத்தை வானரரூபமாக அமைத்து இரத்தினவேந்திரங்கொடுத்து, நந்திகேசுவரரோடு அந்தர்த்தியானமானார். நந்திகேசுவரர் பட்டாபிஷேகத்துக்கு ஐந்துநதிகளுண்டானமையால் பஞ்சதமென்று பெயறுண்டாயிற். அவ்வைந்து நதிகளும் பின்வரப்பட்ட காவேரிநதியில் மறைந்துவிட்டனர்.

9-வது அத்தியாயம் முற்றிற்று.

## 10-வது காவேரி வரலாறுரைத்த அத்தியாயம்

பூர்வத்தில் அகஸ்த்தியமுனிவர் தன்மாணாக்கருடன் பரமசிவனைத் தெருசனஞ் செய்வதர்க்குத் திருவெண்காட்டிற் சிலகாலம் வசித்தார். அவர் அங்குவசிப்பதைக் சமுத்திரராஜன் கேள்வியுற்று, அவரிடம்வந்துநமஸ்க்கரித்தெழுந்துசுவாமி! தங்களைத் தெரிசித்து மிகுந்த சிலாக்கியமடைந்தேனென, அகஸ்தியமுனிவர் சமுத்திரராஜனைப்பார்த்து, உனக்கு நம்மாலாகவேண்டிய விஷயத்தைச்சொல்லாயென்றார், வருணராஜன்

ஐயா முநிசிரேஷ்டரே! உலகத்திலிருக்கின்ற கங்கைமுதலான
அனேக நதிகளுக்கு யான் நாயகனாகவிருந்தும், சிவப்பிர
சாதத்தாற் கவேராராஜரிஷிக்குப் புத்திரியாகப்பிறந்து, சைய
பருவதத்தில் வசிக்கின்றகாவேரியை விவாகம் செய்தகொள்ள
இச்சையுடையவனாகவிருக்கின்றேன். அது தங்களனுக்கிரகத்
தால் நிறைவேறுமென்றெண்ணி நானிவ்விடம் வந்தேனென்றான்.
கும்பமுநிவர் உன்னிச்சைப்படி செய்வோமென்று சொல்லிக்
காவேராராஜரிஷி ஆசிரமம் வந்தார். அவரைக்காவேர ராஜரிஷி
கண்டு, அனேக உபசாரத்துடன் அதிதிபூஜை செய்வித்து
தங்கள் வரவை தெரிவித்தருளவேண்டுமென அகஸ்தி முனி
வர் தங்கள் பெண்ணைச் சமுத்திர ராஜனுக்கு விவாகம் செய்
விக்க வந்தேன். அதைமறுக்காமல் செய்விக்கவேண்டுமென
காவேர ராஜரிஷி மனமிசைந்து தன்புத்திரியாகிய காவேரி
யை அழைத்துக்கொண்டு அகஸ்தியரோடு, பஞ்சநதக்ஷேத்திர
மடைந்துமூவரும் பஞ்சநதியிலும்முழ்கிச்சிவதரிசனம்செய்து
கொண்டு பிரயாணப்பட்டார்கள் அப்போது காவேரி அவ்
விடத்தை விட்டு வரசம்மதமில்லாதவளாக விருக்க அதைத்
தெரிந்த அகஸ்தியர் காவேரி ராஜன் இவ்விருவர்களும் காவே
யைக் கையைபிடித்திழுக்க காவேரி பரமசிவனை தியானித்தழு
தாள். அந்த சப்தத்தை கேட்டு பரமகருணாநிதியாகிய சிவ
பெருமான் பிரசன்னமாக அச்சிவபெருமானைக் காவேரி தரி
சித்து சுவாமி நான் அனாதை, உம்மையே சரணமடைந்த
வள் என்னை இருவரும் கையைபிடித்திழுக்கிறார்கள், நான்
போவதற்குமனமில்லாமல்நதிரூபமாக இவ்விடத்திலிருக்கஇச்
சிக்கிறேன் என்று சொன்னாள். பரமசிவன் காவேரியே நீ
அஞ்சாதே என்று சொல்லி அகஸ்தியரை நோக்கி அகஸ்தி
யரே காவேரியை அழைத்துக்கொண்டு போம் விஷயங்கள்
யாவும் தெரிந்தோம், உம்முடைய கோரிக்கையை நாம் நிறை
வேற்றுகின்றோம் பலாத்காரம் செய்ய வேண்டாம். என்று
சொல்லிக் காவேரியே ஒருவருக்குப் பெண் பிறப்பதால் மிகு
ந்ததுக்கமாகும். அந்தத்துக்கம் பெண்ணை விவாகம் செய்து
கொடுத்தால் நிவர்த்தியாகும். ஆகையால் விவாகம் செய்து
கொடுக்கவேண்டியது பிதாவின் கடமை நீயோ எவ்வனப்
பருவத்தை அடைந்திருக்கின்றாய், பிதுர்குலத்திற்கு பழிவார
மல் நீ எமது வார்த்தையைக் கேட்கவேண்டியது. சமுத்திர
ராஜன் ரத்னாகரனாகவும், கெங்கை முதலான நதிகளுக்கு
நாயகனாகவுள்ளவன். அந்தச் சம்மந்தம் சிலாக்யமுடையது
ஆகையால் உனக்குள்ள நூற்றெறு கலைகளில் நூறுகலையோடு

இந்தக்ஷேத்திரத்தில் இருக்கின்ற பஞ்சநதியையும் கலந்து பஞ் சநதத்தில் வசித்து ஒருகலையுடன் அகஸ்தியரோடு திருவெண் காட்டை யடைவாயென்று சொல்லி அகஸ்த்திய முனிவருக் கும் விடைகொடுத்து மறைந்தருளினர். அதன்பின் அகஸ்த் தியர் காவேரராஜன் இவ்விருவருடன் காவேரி யேகாம்சத்து டன் திருவெண்காட்டை அடைந்தாள்.

இந்த சங்கதியை சமுத்திர ராஜன் அறிந்து திருவெண்காட் டிற்கு வந்து நல்ல முகூர்த்தத்தில் சாஸ்த்திர விதிப்படி விவா கம்செய்து கொண்டு சுகமாக வாழ்ந்தான். காவேர ராஜரிஷி தனதிடமாகியசையபருவதத்திற்குப்போனர். சமுத்திரராஜன் அகஸ்த்திய முனிவரை வணங்கிச் சுவாமி தங்களனுக்கிரகத் தால் என் இச்சை நிறைவேறியது. இவ்வளவு காலதாமத மானது இன்னதென்று அடியேனுக்கு தெரிவித்தருளவேண் டுமென அகஸ்த்தியர் நடந்த சங்கதியைத்தெரிவித்து நூறு அம்சத்துடன் காவேரி பஞ்சநதத்தில் வசிப்பதையும சொன் ஞர் சமுத்திரராஜன் மறுபடியும் அகஸ்த்தியரை வணங்கிபஞ் சநதத்தில் காவேரியுடன் சேர்ந்திருப்பதற்கு உத்திரவு தந் தருளவேண்டுமென அகஸ்த்தியர் அவ்வண்ணமே விடைகொடு த்தார் சமுத்திர ராஜன் தேவரூபமாகப் பஞ்சநதத்தை அ டைந்து பரமசிவன் உத்திரவால் ஆலயத்தற்கு வாயுமூலையிர் குளரூபமாக இருந்து காவேரியுடன் கூடிவாழ்கின்றுன் கா வேரியானவள்பஞ்சநதியையும் தன்னுடன்கலந்துநூறும்சமத் துடன் திருவையாற்றில் வசிக்கின்றமையால் அந்தஸ்லத்திர் காவேரி ஸ்னனம் செய்பவர்கள் மோக்ஷமடைவது சத்தியம்.

10-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## 11-வது சிவதாசப்பிராமணன் முத்தி யடைந்த அத்தியாயம்.

முன்னொருகாலத்தில் மாகயோகியாகிய சிவதாசன் என்னுமோர் பிராமணன் தீர்த்த யாத்திரையுடன் சிவக்ஷேத்திரங்களை தெரிசித்து சித்தர்களாலும், தேவர்களாலும், ரிஷிகளாலும், பூசிக்கப்பட்டு யாவரு க்கும் ஆனந்தத்தை அளிக்கத்தக்க ஜீவன் முக்தி க்ஷேத்திரமாகிய பஞ் சநதத்தை யடைந்து காவேரிஸ்நானம் செய்து விபூதி ருத்திராக்ஷம்தரி

த்து நித்யகருமங்களைமுடித்துக்ஷேத்திரசிமார்த்தம் செய்து ஆலயத்தில் வந்து கணேசர், சுப்பிரமணியர், காலபைரவர், லக்ஷுமிதேவி, சத்த மாதர்கள், பரமசிவன், உமையம்மை முதலானவர்களை தரிசித்துக் கொண்டு ஐந்து வருஷகாலம் வரையில் ஜெப்பியேசுர மண்டபத்தில் இருந்து தினமொன்றுக்குப் பதினாயிரம் பஞ்சாக்ஷர மந்திரஞ் செபித் துக்கொண்டிருந்தார இருந்தவர் காசியில் மரணமடைந்தால் முத்தி கிடைக்குமென்றுவேதாகமங்கள் சொல்வதையறிந்து,காசிக்குப்போகப் புறப்பட்டு அனேககாடுமலைகளைக்கடந்து, விந்தமலைச்சாலிற் போகும் பொழுது யானைகளை விழுங்கும் ஏரண்டப்பக்ஷி சிவதாசப்பிராமணனை எடுத்துவிழுங்காலையில், சிவதாசன் பரமசிவா, சங்கரா, மஹாதேவா! என்னைரக்ஷித்தருளவேண்டுமென்றுதோத்திரம்பண்ணப்பரமசிவன்கிரு பைகூர்ந்துதான் இராஜவேடந்தரித்துத்தன்னுடையரிஷபத்தைஅசுவ மாகவமைத்து அதன்மேலாரோகணித்துக் கையிற்குந்தாயுதத்துடன் வந்து சிவதாசப் பிராமணனே பயப்படதே என்று சொல்லி யேரண்ட பக்ஷியைக் கழுத்தில் வெட்டித்தள்ளினார். பக்ஷியால் விழுங்குப்பட்ட வாதையை அடைந்த பிருமணன் மூர்ச்சையாகி கீழே வீழ்ந்தான் விழுந்தவனை இராஜவேடங்கொண்ட பரமசிவன் தடவிக்கொடுக்க அப்பிராமணன் மூர்ச்சை தெளிந்து ஆபத்துக்காலத்திர் பந்துவாக வந்த அரசனே உனக்கு சகல சம்பத்தும் உண்டாக கடவதென்று ஆசீர்வதித்து நான் பரமசிவனை தியானித்துக் கூப்பிடவந்த நீயாவா னென்று திரும்பவும் அவரைப்பார்க்க முன் ராஜனாக காணப்பட்டவ பரமசிவனாகத்தோன்ற அவரை துதிசெய்தார். அப்பொழுது பரமர் சிவன் சிவதாசனே! நீ ஆபத்துக்காலத்திலென்னை நினைத்தமையால் உன்னை ரக்ஷிக்கவந்தேன், நீ யெங்கேபோகின்றாயென்றார்

சிவதாசன் காசியில் மரணமடைந்தால் முத்தியென்று அவ்விடம் போகின்றேனெனப் பரமசிவன்கேட்டுத் துஷ்டமிருகங்களாலும், ஏர ண்டப் பக்ஷிகளாலுஞ் சங்கடமாகிய இந்தமார்க்கமாகக் காசிக்குப்போ வதுமிகவுமரிது காவேரியின் வடகரையிற்சிவ க்ஷேத்திரங்களெல்லாம் உத்தமமான பஞ்சநத க்ஷேத்திரத்தில் ஜெனனத்தாலும்மரணதாலும் கீர்த்தனத்தாலுந்தெரிசனத்தாலும், ஸ்மரணத்தாலும், வாசத்தாலும், பாவத்தை நீக்கி முத்திகொடுக்கின்றோம். ஆகையானீதிரும்பிப் பஞ்சநதத்தையடைந்து அவ்விடத்திற்றானே வாசஞ்செய் யென்று சொல்லிச் சிவதாசன். சுவாமி! ஏரண்டப்பக்ஷியால் வாதையடைந்து சக்தியில்லாதநானெவ்வாறு பஞ்சநதம் சேருவேனென்றான். பரம சிவன் அவ்விடத்திலிருந்த ஓர்மடுவில் சிவதாசப்பிராமணனை முழு கென்றுசொல்ல அவ்வண்ணமே யந்தமடுவிற் சிவதாசப்பிராமணன் மூழ்கிக் காவேரியின் மத்தியிலெழுந்தவர். எழுந்தவர் தெற்குவாய! லிற் பரமசிவனைக்கண்டு ஸ்தோத்திரஞ்செய்யப் பரமசிவன்சிவதாசா காசிக்குச்சமான மான பஞ்சநதக்ஷேத்திரமிதுதான். இந்தவிடத்தில் உன்மரணபரியந்தம் வசித்தால்முத்தி கொடுப்போமென்றுசொல்லி மறைந்தருளினார். சிவதாசன்மரணமளவும் பஞ்சநதத்திலிருந்து முத்தி யடைந்தான்.

11-வது அத்தியாயம் முற்றிற்று.

## 12-வது துர்த்தமன் முக்தி அடைந்த அத்தியாயம்.

பூர்வத்தில் தாய்தந்தைகளால்நன்னெறிக்கு வாராதவனும், எல்லாவுயிருக்கும் வஞ்சனைசெய்தவனும், சூதாடுகிறவனும், பொய்சொல்லுகிறவனும், நின்றநிலையில் மூத்திரம்பெய்கிறவனும், பிறரைக்கண்டு நாணமற்காட்டெருமைக்கடாவைப்போல்தாசிகளுடன் புணர்பவனும், காமாதுரனாகபாடுகிறவனும் கையிற்கத்திமுதலான ஆயுதமபிடித்தவனும், போசனத்தின் பிறகு வபனஞ்செய்துகொள்பவனும், சமயத்திற்குதக்க வேடந்தரித்துத்திருடுகிறவனும், வைதீகபிராமணன்போல் நல்டித்து, மோசஞ்செய்பவனும், வழிப்பறிசெய்கிறவனுமான துர்த்தமனென்னுமோர் பிராமணனிருந்தான் அவன் அனேக்பிராமணர்கள் கூட்டமாகக் கூடித்தங்களுக்குவேண்டிய திரவியங்களையெடுத்துக்கொண்டு பஞ்சநதத்தில் துலாக்காவேரிஸ்நாஞ்செய்யப்போவதைக்கண்டு விபூதிருத்திராக்ஷமுங் கையிற்பவுத்திரமும் மேலேயோகவேஷ்டியுக்தரித்துமந்திரஞ் செபிக்கின்றவன்போல் வாயின் முணுமுணென்று செபித்துக்கொண்டு பிராமணர்கள் கூட்டத்துடன் சேர்ந்துவந்தான் அவனை அவர்கள் நீயார்? எங்கிருந்துஎங்கே போகின்றாயென்றுகேட்க்க, துர்த்தமன் பிராமணோத்தமர்களே! நானோ தாய்தந்தை பந்துமுதலான வேருவருமில்லாதவன், அனாதை, மிகுந்ததுக்கத்தால் அனேகதேசசஞ்சாரஞ்செதுவருகையில் மகாயோகியொருவர் எனக்கோர்மந்திரோபதேசஞ்செய்து பஞ்சநதத்திலிருந்துசெபித்தால் மந்திரசித்தியும் சம்சாரதுக்கநாசமும் கிடைக்குமென்று சொன்னபிரகாரம் பஞ்சநதத்திற்குப் போகிறேனென்று மிக வணக்கத்துடன்சொல்ல அவ்வார்த்தையை அவர்கள்கேட்டு மகாயோக்கியனென்று நினைத்து, ஐயா நீர் துக்கப்படவேண்டாம் நாங்களும் பஞ்சநதத்தில் ஓர்மாதம் வசிக்கப்போகின்றோம், எங்களுடன் தாங்களும் வசித்திருக்கலாமென்றுசொல்லி யழைத்துக்கொண்டு பஞ்சநதத்திற்கு வந்தார்கள்.

அவர்கள் மறுநாள்காலை துலாமாசஆரம்பமாகையால்குடிக்கூலிக்கோர்வீடுவாங்கி அதினில் ராத்திரிவசித்துவிடியற்காலந் துர்த்தமனைக்காவலாகவைத்துவிட்டு ஸ்நானத்திற்கு போனார்கள் அத்தருணத்திலவர்கள் வைத்திருந்தபொன்முடிப்பை யெடுத்துக்கொண்டோடினன் ஓடும்போழுதுஅவனிடத்திலோரனுமானந்தோன்றி யிராஜசேவகர்கள் பின்றொடர்வதை இவன்

கண்டு காவேரியிற்சனக் கூட்டத்துடன் போய்முழ்கினான். சேவகர்களும் போய்முழ்கி, அவனைப்பிடித்துக்கரையில் கொண்டுவந்து பரிசோதித்துப் பொன்முடிப்பைகண்டு, அத்துடன் அரசனிடத்திற் கொண்டுபோய் விடுத்தார்கள். அரசன் விசாரணை செய்துதிருடனென்றறிந்தும், பிராமணனென்கின்ற மானத்தால் அவனிடத்திலிருந்த பொன்முடிப்பைமாத்திரம் வாங்கிக்கொண்டுவிட்டுவிட்டான். விடவே தர்த்தமன் பஞ்சநதத்தைவிட்டு மறுதேசம்போய்விட்டான். அதன்பின் ஸ்நானத்திற்குப் போனபிராமணர்கள் வீட்டிற்குவந்து தர்த்தமனைக்காணாமல்தங்கள் தங்கள்மூட்டையைப்பரிசோதித்துப் பொன்முடிப்பில்லாது இருக்கக்கண்டு மிகுந்ததுக்கத்துடன் அரசனிடத்தில்வந்து முறையிட்டார்கள் அரசன் அவர்கள் சொல்லியதைக்கேட்டு நடந்தசங்கதி முழுதுந்தெரிவித்துப், பொன்முடிப்பைஅவர்களிடங் கொடுக்க அதைவாங்கிக்கொண்டுபிராமணர்கள் அரசனையாசிர்வதித்துத் தங்களிடம்போய்ச் சேர்ந்தார்கள் இதுநிற்க, அன்னியதேசசஞ்சாரஞ்செய்து திருடித்திரிந்த தர்த்தமன் சிலகாலஞ்சென்று மரணமடைந்தான் அவனையெமதூதர்கள் அழைத்துக்கொண்டுபோகும் பொழுது பரமசிவன் காவேறியில்பயத்தால் முழுகினவனானாலும் துலாமாசத்திற் பிராதக்காலத்திற் காவைரிஸ்நானம் பண்ணிய புண்ணியத்தாற் சிவலோகமடையவேண்டியவனென்றெண்ணிநந்திதேவர்முதலான சிவகணங்களையழைத்துப் பாபமில்லாத தர்த்தமனை எமதூதர்களழைத்துப் போகிறார்கள் அவர்களை விலக்கித்தர்த்தமனையெமதிடமழைத்து வரக்கடவீர்களென்று கட்டளையிட, அவ்வண்ணமேயழைத்துவந்துவிடுத்தார்கள் அவனுக்குக்கணாதிபத்தியந்தந்துதன்னுலகத்தில்வைத்தருளினார் இந்தசங்கதியையெமனதெறிந்து பரமசிவனிடத்தில்வந்து சுவாமி! பஞ்சநதத்தில் வசிப்பவர்களை மாத்திரம் என்னுலகத்திற்கு அழைத்துபோகக்கூடாது. மகாபாபியாய் அன்னிய தேசத்திற்தங்கிய தர்த்தமனை என்னுலகத்திற்குத் தூதர்கள் பிடித்துக்கொண்டு வருகையில் சிவகணங்கள் வந்து அழைத்துக்கொண்டு வந்த காரணத்தை அடியேனுக்குத் தெரிவித்தருள வேண்டுமென பரமசிவன் எமனே! யொருவன்எவ்வித காரணத்தினாலாவது காவேரிஸ்நானஞ் செய்வானேல் முக்தியடைவது நிச்சயம். இந்தத் தர்த்தமன் துலாமாசாரம்பகாலத்தில் காவேரிஸ்னானஞ்செய்தவனாகையால் கணாதிபத்தியங்கொடுத்துச் சிவலோகத்திலிருத்தினோம். காவேரிஜலசம்பந்தமான காற்றொருவன்மேல்வீசினாலும்

அவன்பாவியல்ல இதைநீயறியக்கடவாயென்றார் எமன்அதைக் கேட்டுத் தன்னுலகம போய்ச்சேர்ந்தான்.

12-வது அத்தியாயம் முற்றிற்று.

## 13-வது துஷ்பிரக்ஞப்பிராமணன் முத்தியடைந்த அத்தியாயம்.

பூர்வத்தில்; அதர்மனும், விடனும், வேசிகள் கூட்டுறவுள்ளவனும், மாதாபிதா குருமுதலானவர்கள் வார்த்தை கேளாதவனுமான துஷ்பிரக்ஞனென்னுமோர் பிராமணனிருந்தான். அவன்தன் மனையாளைத்தள்ளிப்போட்டு, ஓர்வலைச்சியை வைப்பாட்டியாக வைத்துக்கொண்டு, அவள்வீட்டில் மாம்சபக்ஷணத்தோடு சாப்பாடுஞ்செய்துகொண்டு வெகுகாலம் அவ்வலைச்சியுடன்சேர்ந்திருந்தான் இப்படி இருக்குங்காலத்திற்பஞ்சநதத்தில்நடக்கும் சித்திரைமாசோச்சவம் பார்க்க அனேகஜனங்கள் போவதைக்கண்டு அந்தவலைச்சியுடன் துஷ்பிரக்ஞனும் பஞ்சநதத்துக்குப்போனான் அவன்போனஅன்றைத்தினம் ரதோச்சவமாகையால் ரதாரூடராகவந்த பரமசிவனை தெரிசித்து அன்றிராத்திரி பலஜனங்கள் நித்திரைசெய்தவீதியில் வலைச்சியுடன் அவனும்நித்திரைசெய்தான். பாதிராத்திரியில் அனேக திருடர்கள் கத்திமுதலான ஆயுதங்களுடன்வந்து வீதியில் நித்திரைசெய்தஜனங்களைக் கொலைசெய்ததோடு இவர்களையுங்கொன்று திரவியங்களைக் கொள்ளைபடிக்கிற செய்தியை அரசன்கேள்வியுற்றுப் படையுடன்வந்து சண்டைசெய்து இறந்தவர்கள் நீங்கமற்றத்திருடர்களைப் பிடித்துச்சிரைச்சாலையிலனுடத்துத் திரவியங்களையவரவர்கள்கையிற்கொடுத்துப் போனான். இறந்தவர்கட்கெல்லாஞ் சிவலோகங்கிடைத்ததோடு துஷ்பிரக்ஞனுக்கும் வலைச்சிக்கும் சிவலோகங்கிடைத்தது. ஆகையால் பஞ்சநதத்தில் பக்தியில்லாமல் வசித்தவர்களும் முத்தியடைவார்கள்.

13-வது அத்தியாயம் முற்றிற்று.

## 14-வது பாவிகள் ஜென்மமடைவதை உரைத்த அத்தியாயம்.

அனவத்தியாதேவி நாதசன்மாவை வணங்கி சுவாமி ஜீவர்கள் பாவசேஷத்தால் நரகத்தினின்று நீங்கி பூமியில்வந்து

என்னசென்மமடைகின்றார்கள் அதைச்சொல்லவேண்டுமென்றுகேட்க; நாதசன்மா பெண்ணே! பிர்மகத்தி செய்தவன், கழுதை, பன்றி, ஒட்டகம், யானை, பக்ஷி, மான், நாய், மாம்சந்தின்னுஞ்சண்டாளனாகவும், குருதாரகமனஞ்செய்தவன் மலத்தையுண்ணும் பன்றி, நரி, காகம், கழுதை, திருடனாகவும் சுராபனஞ்செய்தவன் கோட்டான், எறும்பு ஈ, கொசு, மூட்டைப்பூச்சி, பிணஞ்சுடும் வெட்டியானாகவும், பொன் திரிடினவனும், அவனுடன் சினேகித்தவனும், எலி, குரங்கு, தவளை, ஆமை, புழு, புறா, அன்னம், கொக்கு, எருமை, கோபாம்சந்தின்னனும் பறையனாகவும், பிராமணன் சொத்தை யபகரித்தவன் பிர்மராக்ஷதனாகவும், தானியங்களைத்திருடினவன் பெருச்சாளியாகவும் தண்ணீர் திருடினவன் நீர்க்காகமாகவும், வெண்கலந்திருடினவன் தேவவருஷத்தி லாயிரவருஷம் அன்னமாகவும், நெய்திருடினவன் ஸ்தாவரபோருளாகவும், கீரியாகவும், இலை காய்கரி திருடினவன் மயிலாகவும், வாழை நாரத்தை பலா தேங்காய் திருடினவன் சிறுகுருவியாகவும், மாம்சந்திருடினவன் கழுகாகவும், எண்ணெய் திருடினவன் சிரீயாகவும், பட்டுவஸ்திரந் திருடினவன் சிச்சிலியாகவும், வெண்பட்டுத் திருடினவன் தவளையாகவும், குதிரை பூ திருடினவன் குரங்காகவும் பயிர் திருடினவன் ஊர்குருவியாகவும், வைக்கோல் புல் திருடினவன புல்லட்டையாகவும், பாய் கட்டில் தலையணை வாகனம் பல்லக்கு இவைகள் திருடினவன் பாரஞ்சுமக்கும் ஒட்டகமாகவும், தேவாலயங்களிற் சேவகத்துக்கிருந்து நஷ்டம் விளைத்தவன பிசாசாகவும் விபூதி ருத்திராக்ஷம் வஸ்திரந் திருடினவன் குஷ்டரோகி யாகவும் பொய் சொன்னவன் மழைகாலத் தவளையாகவும் தாய் தந்தை தமையன் குரு வேதியர் வேதாந்தி சந்நியாசி சந்திரசூரியர்கள் பிரம விஷ்ணு ருத்திராள் இவர்களை நிந்தித்தவனும், வேதம் இதிகாசம் புராணம் யாகம் இவைகளை நிந்தித்தவனும் தேள், பாம்பாகவும், பிராமணதானத்தை தடுத்தவனும் சந்நியாசிகளுக்குபிச்சை செய்யாதவனும் அன்னங்கிடைக்காத தரித்திரனாகவும் பிராமணனுக்குத்தருகிறேனென்றுசொல்லிப்பின் தராதவன் துர்பாம்சநாற்றமுள்ள மூக்கையுடையவனாகவும் விதியைவிட்டு விலக்கையனுசரிப்பவன் மரம் கல் கொடி செடி முள்ளாகவும் தேவாலயம் சாவடி குளம் கிணறு இவைகளைச் கெடுதிசெய்பவனும் சிலம்பம்பழகல் அழுக்குருட்டல் காலமல்லாத காலத்திற்புணர்தல் எண்ணெய்தய்த்துக்கொள்ளல் தூங்குதல் க்ஷவரஞ்செய்துகொள்ளல் அதிக அன்னமுண்ணல் சூதாடுதல் முதலானவை செய்தவனும் நீர்பாம்பாகவும் வேதியர்

பிரம விஷ்ணுவை நிந்திப்பதைக்கேட்பவன் மண்ணுழிப்பாம்பாகவும் அத்துவிதத்தைநிந்திப்பவன் முகத்திற்சீயொழுகும் ரோகமுடையவனாகவும், அத்துவிதத்தை நிந்திப்பதைக்கேட்பவன் காதிற்சீயொழுகும் ரோகமுடையவனாகவும், சூத்திர மாதருடன்புணர்ந்தபிராம்மணன் முதலை மீன் நீர்காகம் ஆமையாகவும் பிறப்பார்.

இப்பாதங்களை நிவர்த்திசெய்துகொள்ள வேண்டினாற்பஞ்சநதஸ்தலத்திற் பத்துவருஷந்தங்கி துலாமாசத்திலும், மகாமாசத்திலும் காவேரிஸ்நானஞ்செய்து கோமூத்திரத்தாற் சமைத்த அன்னத்தை யொருவேளைபுசித்துவந்தால் விமோசனமாகுமென்றார் அதைக்கேட்ட ஆனவத்தியா தேவி சுவாமி! பிரமகத்தி குருதாரகமனம் சுராபானம் பொன்திருடுதல் சேர்க்கையால்வருதல் ஆகியவிவ்வைந்து பாவங்கட்குச்சமானமானபாவங்களையும் அவைகளுக்குவிமோசனத்தையுஞ் சொல்லவேண்டுமென, நாதசன்மா வழிநடைபைப்பேதிக்கின்றவன் தனக்குமாத்திரஞ்சமையல் செய்யச்சொல்லுகிறவன், பிராமணநிந்தை செய்கிறவன், அதிகபோசனன், வேதம்விற்கிறவன் பிராமணர்களையிச்சைகாட்டியழைத்துவந்து பின்னில்லையென்பவன், ஒருவரிடத்திற்றரும சாஸ்திரங்கற்றுக்கொண்டு அவர்களுடன் துவேஷித்து அவமதிக்கின்றவன் ஆகியயிவர்கள் பிரமகத்தி செய்தவரோடொப்பாவர். ஔபாசனம் விடுத்தவன் கோவிலன்னமுண்பவன், கள்குடிக்குமாதருடன்சேர்பவன் வேசியர் அன்னம்புசிப்பவன், கூட்டாஞ்சோறுதின்பவன் சாதிப்பிரஷ்டனன்னமுண்பவன், வைசுவதேவம் ஸந்தியாவந்தனம் சௌசம் காயத்திரிஜெபம் விட்டவன் சாஸ்திரவிரோதமாகப் பற்கொம்பிட்டுப்பல்தேய்ப்பவன் ஆகியஇவர்கள் சுராபானஞ்செய்தவரோடொப்பாவர். கந்தமூலபலம கஸ்தூரி கெந்தபொடி வெல்லம் சர்க்கரை தானியம எள் அரிசி திருடினவன், வேதாத்தியானம் பண்ணாதவன் தருமம், வேதம், தீர்த்தம், விற்றவன் பசு அக்கினி விக்கினம்பண்ணினவன் சிரார்த்தம்விட்டவன் அதிதிபூஜைபண்ணாதவன், அனாதை திரவியத்தை அபகரித்தவன் கோ, அசுவம், பிறர்விளைநிலம் பயிர் இவைகளையபகரித்தவன் வெண்கலபாத்திரம தேன் நெய் ருத்திராக்ஷம் திருடினவன் இவர்கள் பொன்திருடரோடொப்பாவார்கள் சகோதரி புத்திரன்பாரியை சிநேகன்பாரியை பரமாதர் மத்தியபானஞ்செய்பவள் சாதிகெட்டவள் கைம்பெண் இவர்களுடன் புணர்ந்தவர் குருதாரகமனஞ் செய்தவரோடொப்பாவன். இந்தநான்கு பேர்களுடன் சேர்ந்தவர்கள் அவர்களோடொப்பாவர். இந்தப்பா

லங்களை யறியாமற்செய்தார் காவேரியில் மாசமாசமுழுதும் ஸ்நானஞ்செய்து பஞ்சநதீசுவரைத்தெரிசித்தார் பாவப்பிராயச்சித்தமாகும். தெரிந்துசெய்தால்அதற்குப்பிராயசித்தம்ஸ்மிருதிகளிலில்லை ஆனாலும் மூன்றுவருஷகாலம் பஞ்சநதத்தில் வசித்து சாத்திரவிதிப்படி காவேரியில் ஸ்நானஞ்செய்து, நூற்றெட்டுவீதிப்பிரதக்ஷணம் ஏகவாரபோசனஞ்செய்து, பஞ்சநதீசுவரருக்கு நூற்றெட்டுப்பொன்னும், பிராமணனுக்கு நூற்றெட்டுப்பொன்னுங் கொடுத்துவந்தால் பிராயச்சித்தமாகும் இல்லாவிடில்நரகவாதனை யடையவேண்டுமென்றார் அதைக் கேட்டு அனவத்தியாதேவி சுவாமி! பாவஞ் செய்தவர்களெவ்வித அடையாள முடையவர்களாக விருப்பார்கள் அதையுஞ் சொல்லவேண்டுமென, நாதசன்மா பிரமகத்திசெய்தவன் க்ஷயரோகியாகவும் சுராபானஞ்செய்தவன் சொத்தைபல்லனாகவும் சொர்னந்திருடினவன் கைவிரல் கால்விரல்களில் ரோகியாகவும் குருதாரகமனஞ்செய்தவன் சருமரோகியாகவும் பரதாரகமனஞ்செய்தவன் நொண்டி செவிடன் வாயு ரோகமுள்ளவனாகவும் ஆசாரியனை நிந்தித்தவன் காக்காவலிப்புரோகியாகவும் குருமொழிகடந்தவன் நீரிழிவுரோகியாகவும் புழுவாகவும் வாயுரோகமுள்ளகழுதைபாகவும் சிவத்துரோகம் குருத்துரோகஞ்செய்தவன் துர்புத்தியுடையவன் அரணை பல்லி கோழியாகவும் விஷ்ணுத்துரோகம் விஷ்ணுநிந்தை செய்தவன் சித்திரக்குள்ளன் ஒணான் நாவில்ரோகமுள்ளசண்டாளனாகவும் வேதாந்தநிந்தனைசெய்தவன் மேகரோக முள்ளமதபேதபறையனாகவும் வேதாசாரநிந்தகன் உன்மத்தனாகவும் பாதவிடாய்மாதருடன் புணர்ந்தவன்மகோதரரோகமுள்ளவனாகவும் நீசனாகவும் விஷமூட்டினவன் தீமூட்டினவன் குஷ்டரோகியாகவும் ஆயுதப்பிடித்தவன் தவளையாகவும் இரத்தினந்திருடினதவன் ஒருதலைவலியனாகவும் வஞ்சனைசெய்தவன் பொய்சாக்ஷிசொன்னவன் இவ்விருவர்க்குமுடந்தையாகவிருந்தவன்குஷ்டரோகியாகவும் தாய் தந்தை சிறுவபதுடயதன்புத்திரன்மனையாள்இவர்களைத்தள்ளினவன் நேத்திரரோகியாகவும் குளம் தோட்டம் கிணறுசாவடி இவைகளைபோதித்தவன் அக்கயினனுகிபடிமைத்தொழிர் செய்பவனாகவும் எசமான் துரோகஞ்செய்தவன் குன்மரோகியாகவும் ஒட்டை மாடு கழுதை இவைகளிற்சவாரிசெய்தவன் மேகரோகியாகவும் பதிவிரதையைக் கற்பழித்தவன்லிங்கபுத்துரோகியாகவும் டன்றிபாகவும பிறனையபவாதஞ் சொன்னவன் நரம்பில் வாயுரோகமுள்ளவனாகவும் பிறந்திருப்பார்கள்.

14-வது அத்தியாயம் முற்றிற்று

## 15-வது மரணக்குறியுரைத்த அத்தியாயம்.

KOILOOR MADALAYAM

அனவத்தியாதேவி தன் காதலனாகிய கோதகன்மாவைவணங்கிச்சுவாமி! மரணக்குறியையும் அதற்குப்பிராயச்சித்தத்தையும் சொல்லியருளவேண்டுமென்றுகேட்க, தகன்மா பெண்ணே! இராகாலத்திற் சந்திரனைச் சூரியனைப்போல உஷ்ணமாகக்கண்டாலும் சூரியகிரகணங்கள் கண்ணுக்குத்தோன்றாதிருந்தாலும் ஆகாசஞ்சிவப்பாகவிடையிட்டுத்தோன்றினாலும் எலிவளைபோலாசனத்துவாரமிருந்தாலும் காகக்கூடுபோல் துர்க்கந்தம்தந்ததலையில் வீசினாலும் சீக்கிரத்தில் மரணமுண்டாகும் சூரியனிற்றுவாரமாகக்கண்டாலுந் தன்னிழலிற்றுவாரமாகக்கண்டாலும் ஒருமாசத்தில்மரணமுண்டாகும். ஜலத்திலாவது கண்ணாடியிலாவது தன்சிரம் வக்கிரமாகவுமற்றதாகவுங் கண்டால், எமன் வீட்டில்வந்திருக்கிறான் கண்ணைமூடித் திறக்கும் காலத்திற் பூச்சி பறந்தது போலிருந்தால் உடனே மரணம். காதைபொத்தி சத்தங்கேளாதிருந்தால் எமன் சமீபத்தில் இருக்கிறான். நெருப்பு மயிலின் கழுத்தைப்போல் தோன்றினாலும மேகமில்லாத காலத்தில மின்னல் தோன்றினாலும், மின்னல் காலத்தில் ஒளி தோன்றாதிருந்தாலும் மேகத்திற்கு சூரிய காந்தி தோன்றினாலும், பதினைந்து நாளில் மரணம், சந்திரகாந்தி துருவ நக்ஷத்திரம் அருந்ததிநக்ஷத்திரம் கண்ணுக்குத் தோன்றாதிருந்தால் ஒரு வருஷத்தில் மரணம், கிரணமில்லாமல் சூரியனையும காந்தியில்லாமல் அக்னியையும். கண்டால பதினொரு மாசத்தில் மரணம், அகாரணமாகத் தன்னுடம்பு பருமனாகவும், இளைப்பாகவும், கறுப்பாகவும் கண்டால் எட்டுமாசத்தில் மரணம். புறா கழுகு பருந்து காகம் தலைபட்டால் ஆறுமாசத்தில் மரணம். சலத்திலிந்திரதனுசு கண்டால் இரண்டல்லது 3 மாதத்தில் மரணம், தேகத்தில் வேம்புவாசம் பிணவாசங்கண்டால் 1-மாசத்திற்குமேல் மரணம் இருதயம் வரக்ஷையாக இருந்தாலும், தலையில் புகைச்சல் கண்டாலும், சரீரமுழுவதும் நடுக்கமுற்றாலும், 10-நாளையில் மரணம், பிராண வாயு வேகமாக அறுந்தது போலிருந்தாலும் பகற் காலத்தில் நக்ஷத்திரத்தை கண்டாலும், இராத்திரியில் இந்திரதனுசைக்கண்டாலும், சிகப்பு, கருப்பு; வர்ணமாகசந்திர சூரியர்களை க்கண்டாலும், சூரியஉதயகாலத்தில் எதிர் நின்று நரி ஊளையிட்டாலும சீக்கிரத்தில் மரணம், நா அதிகக்கறுப்பாகவும், முகம் அவலக்ஷணமாகவும், கன்னம் சிவப்புக் கலந்த

கறுப்பு வர்ணமாகவும், கண்டாலும் மேல்பார்வை சிவப்பாகவும் கறுப்பாகவுமிருந்தாலும் சரீரத்தில் உஷ்ணமின்றியிருந்தாலும் எமன் வீட்டில் வந்திருக்கிறான். நாபியிலும், பார்பிலும் ஓட்டையாகக் கண்டாலும், தணல் போல் முத்திரம் இருந்தாலும், பல் கருத்த நிறமாக யிருந்தாலும், சீக்கிரத்தில் மரணம்.

நித்திரையில் பன்றிபால் தான் அடிபடுவதாகவும், குறங்கு தன் தலையை அசைப்பதாகவும், சுருக்கு வாயுவீசுவதக்கவும், பொன்வாங்கியெடுப்பதாகவும், தேனைக்கடித்து தின்பதாகவும் தாமரை கிழங்கைத் தின்பதாகவும், வெண்டாமரைப் பூவைத் தரிப்பதாகவும், கழுதை பன்றி கட்டின வண்டியில் மேலேறிச் சவாரி பண்ணுவதாகவும், கறுத்த பசுவின்மேலேறுவதாகவும், விளாமிச்சைவேர் பாலையை தரித்துத் தென்றிசை போவதாகவும் பூதப்பிரேத பிசாசங்களை கண்டதாகவும் ஆகாசத்தில் கந்தர்வ பட்டணத்தைக் கண்டதாகவும் விருக்ஷங்களை சிவப்பு நிறமாகவும், தன்கால் வெட்டுப்பட்டதாகவும், சேற்றிலாவது புழுதியிலாவது தன்கால் அகப்பட்டு அருந்ததாகவும், தன் வஸ்திரம் சித்திரவர்ணம் கறுப்புவர்ணமாக இருப்பதாகவும் கறுநிறமுடைய மொட்டை மனிதன் தன்னை வாதிப்பதாகவும் கற்களால் அடிபட்டதாகவும் தன் தலையை விரித்து சிறித்து ஆடிக்கொண்டு தென்திசையில் ஓடுவதாகவும், கோமய மடுவில் விழுந்ததாகவும், எண்ணெய்க் கொப்பரையில் விழுந்ததாகவும் சொர்பனம் கண்டால் சிக்கிரத்தில் மரணமுண்டாகும், அதற்கு பிராயச்சித்தமாக பஞ்சநதக்ஷேத்திரத்தையடைந்து காவேரி ஸ்னானம் பண்ணிச் ஜெப்பியேசுவரரைத் தரிசித்து மரண பரியந்தம் அங்கு வசித்தால் எமலோகமடையாமல் சிவலோகம் அடைவார்கள் என்று சொன்னார்.

15.வது அத்தியாயம் முற்றிற்று.

## 16-வது ஆலயவரலாறுறைத்த அத்தியாயம்.

சூரியவம்சத்திற் பிறந்து அயோத்தியில் அரசுசெய்தமனுசக்ரவர்த்தி புதல்வனும் சத்ததீவுக்கு அரசனுமான பிரியவிரதராஜன் தன்புத்திரரெழுவரையும் ஏழுதீவுக்கும் ராசராகவைத்து வாழுங்காலத்திலோர்நாள் கிழக்கேயிருந்து

மேற்கே போகையில் மனுபுத்திரனாகிய பிரியவிரதனே! நீ இன்னுங்கொஞ்சதூரம் போனாலோர் அற்புதத்தைக் காண்பாயென்று ஆகாயத்தில் அசரீரி யுண்டாயிற்று. அரசன் அதைக்கேட்டு ஆனந்தமடைந்து மேற்கே போகையில் பதினான்கு உலகத்தையும் மூடுருவிய சோதியையுடைய மகாலிங்கத்தினின்றும் பரமசிவப்பெருமானெழுந்தருளிப் பிரியவிரதராஜனே! கற்பகாலத்திலுநாசமில்லாத வெம்மாலிவ்விடத்திற் கற்பசிருஷ்டிகர்த்தாவாகிய அனேகங்கோடி பிரம்மாக்களுங் கற்பபாலர்களாகிய அனேகங்கோடி விஷ்ணுக்களுங் காணப்பட்டார்கள். எம்முடைய மாயாசத்திவிசேஷத்தாற் செய்யப்பட்ட தாவர ஜங்கம சொரூப ஜகத்காரணனான யாமிவ்விடத்திற் பஞ்சநதீஸ்வரர் ஜெப்பியேஸ்வரரென்று நாமதேயத்தோடு வசிக்கின்றோம். எமதாலயஜீரணமாகவிருக்கின்றது, அதனை நீ ஜீரணோத்தாரஞ் செய்யவேண்டியதென்று சொல்லி மறைந்தருளினார் ஆச்சரியமடைந்து ஜோதிலிங்கத்தினருகுபோயினான். போனவுடனே பதினான்குலகத்தையுமூடுருவிநின்றவொளியையடக்கிச் சிறுத்துமூன்றிரேகையுடனும் அனேக துவாரங்களுடனும் உருக்கிய தங்கம்போலொளியடைந்து தோன்றிய சிவலிங்கப்பெருமானையும், அச்சிவலிங்கத்தினின்று வாரத்தில் துர்வாசர், கௌதமர், சதாநந்தர், ததீசி, வஸிஷ்டர்முதலான சிவபக்தசிகாமணிகளாகிய மகரிஷிகளையுங்கண்டு, மனதிலானந்தமடைந்து ஆலயத்தைப்பொன்னினால் அமைத்து, ஆபரணங் கொடி குடைவிசித்திரவஸ்த்திரம் சாமரை சாந்தாற்றி சுவர்ன தண்டம் உபசாரச்சாமான்கள் அனேகக்கிராமங்கள் திரவியங்களுங் கொடுத்து ஆலயத்திலும் வீதிகளிலிலுந் திருவிளக்கிட்டு, வேதபாராயணத்துடன் உச்சவ நடத்தி, வேதத்தில் ஓர் அத்தியாத்தில் சொல்லியபடி ஸ்த்தோத்திரம் பண்ணினான். அப்பொழுது பரமசிவன் பிரசன்னமாகிப் பிரியவிரதனே! நீ விரும்பியதைக் கேட்பாயாக வென்று திருவாய்மலர்ந்தருளினார். பிரியவிருதன், சுவாமி! நிரதிசயாநந்த சுகத்தை அடியேனுக்களித்தருளவேண்டுமென அவ்வாறே தந்தனமென்று பரமசிவன் மறைந்தருளினார்.

16-வது அத்தியாயம் முற்றிற்று,

## 17-வது நாதசன்மாவுக்கு பரமசிவன் பிரசன்னமான அத்தியாயம்.

நாதசன்மாவானவர் கலியுகத்தில் வருணாச்சிரமதரு
மம், ஆசாரம், அநுஷ்டானம், சந்தியோபாசனம், காயத்
திரிஜெபம், ஏகாதசிவிரதம் பாநுவாரவிரதம்விட்டவர்
களும், சூரியசங்கிராந்திகளிற் கர்மாநுஷ்டானஞ் செய்யாத
வர்களும், அவுபாசனம் விட்டவர்களும். ஸ்மிருதிகளில் சொ
ல்லியபடிகாலங்களில் உபாயனஞ் செய்யாதவர்களும், நெடுங்
காலமாகக்காயத்திரி ஜெபம் விட்டவர்களும், விடியக்கா
லத்திலெழுந்து சவுசஞ்செய்யாதவர்களும் சுத்தாசமனஞ்
செய்யாதவர்களும், திக்கறிந்து மலமூத்திர விசர்க்கஞ்
செய்யாதவர்களும், விதிப்படிவாய்கொப்பளியாதவர்களு
மான மானிடர்கள், சம்சாரமாகிய கோட்டானுக்குச் சூரி
யனாகவும், பாபங்களாகிய விந்தகங்களுக்கு அக்கினியாகவும்,
நரகங்களாகிய சர்ப்பங்களுக்கு கருடனாகவுமிருக்கின்ற இந்தப்
பஞ்சனத ஸ்தலத்தையுத்தேசித்துச் சங்கற்பஞ்செய்துகொ
ண்டு சிவஸ்துதிசெய்து, விபூதிதூளிதராக உருத்திராக்ஷந்
தரித்து வீட்டைவிட்டுப்புறப்பட்டு மௌன விரதத்துடன்
திருவையாற்றையடைந்து, கால்கைசுத்தப்பண்ணி, ஆசமனஞ்
செய்து தர்ப்பாசனத்திலுட்கார்ந்துசங்கர்ப்பஞ் செய்துகொ
ண்டு காவேரிஸ்நானஞ்செய்து பவித்திர பாணியாக நித்திய
கருமங்களை முடித்து க்ஷேத்திர சிரார்த்தமும் பிதிர்தர்
பணமுஞ் செய்து திருக்கோவிலுள்வந்து பஞ்சாக்ஷரஜெபத்
தோடு பரமசிவனைத் தெரிசித்துப் பிரதக்ஷண நமஸ்கார
ஸ்தோத்திரங்கள் செய்து, பஞ்சநதத்தில் வாசஞ் செய்வார்க
ளேயாகில் பாவங்களெல்லாம் நசித்து மோக்ஷாநந்தத்தை
அடைவது சத்தியம். இதுபொய்யானல் என்சிரம்வெடித்து
ப்போகக்கடவது. மெய்யாகிற் பரமசிவன் இப்பொழுதே
பிரசன்னமாகக்கடவதென்றார் அப்பொழுது பரமசிவன்
பிரசன்னமாகி நாதசன்மாவே! நீ சொல்லியயாவும் மெய்
யன்றிப் பொய்யல்ல, நீ வெமதவதாரமே நீ சொல்லிய
வெல்லாம் நாம்சொல்லியவையேயென்று மறைந்தருளினர்.
நாதசன்மா ஈசுவர வாக்கியத்தைக் கேட்டானந்தமடைந்து
பஞ்சநதத்திலெழுந்தருளி யிருந்தார்.

17-வது அத்தியாயம் முற்றிற்று.

## 18-வது உண்ணத்தகாத பதார்த்தங்களை உண்டதால்வந்த பாவ விமோசனமுரைத்த அத்தியாயம்.

உள்ளிப்பூண்டு, ஈரவெங்காயம், கத்தரிக்காய், முருங்கக்காய், சுரைக்காய், பீர்க்கங்காய், முள்ளங்கி அத்திக்காய் மண்ணுப்பு, பன்றி, கழுதை. ஒட்டை, பூனை, காகம் இவைகளினுச்சிஷ்டம் மாதர் முலைப்பால், கழுதைப்பால், பழஞ்சோறு, கள்சம்பந்தமான அன்னம், எலிப்புழுக்கை விழுந்த அன்னம், நகத்தால் கிள்ளிய பதார்த்தம், வேர்வை விழுந்த அன்னம், புனர்பாக அன்னம் தேங்காய்நீர், கன்றுபோட்டுப் பத்துநாளைக்குட் கறந்தபால், கன்றில்லாத பசுவின்பால், ஒட்டைப்பால்; காராம்பசுவின்பால், ஆட்டுப்பால், யானை குதிரையால் முகர்ந்த தொட்டப் பதார்த்தம், சாதியீனன் தொட்ட பதார்த்தம், ஜெனன மரண ஆசூர்கசள் அன்னம், மாதவிடாய் மாதர்கள் அநுமதிகொடுத்துச் சமைக்கப்பட்ட அன்னம், உபநயனமில்லாதவர்களன்னம், சந்நியாசியன்னம், அந்தகனன்னம், சாதியீனன் அன்னம், வேதாத்தியானஞ் செய்யாதவனன்னம்வேதங்கெட்டவர்களன்னம்வேதநிந்தகன்னம், வருணாச்சிரமம்ஆசாரம்விட்டவனன்னம்,நன்றிமறந்தவனன்னம், பெருவியாதியாளன்னம், விசாபாரஞ் செய்பவனன்னம், கோட்சொல்லுகிறவனன்னம், சிரார்த்தம்செய்யாதவனன்னம் மாமனார் சொத்தாற் சாப்பிடப்பட்டவனன்னம், தரித்திரனன்னம் பெரியோர்களைநிந்திப்பவனன்னம், தூஷகனன்னம், கொடியபாவிகளன்னம், மூர்க்கனன்னம, மரியாதை இல்லாதவனன்னம், புரோகிதனன்னம், தூர்த்தனன்னம், சாந்தகுணமில்லாதவனன்னம். பாஷண்டர்களன்னம், சூத்திரனன்னம், பகைவனன்னம், நாடகரன்னம், தச்சனன்னம், வைத்தியனன்னம், உழுகிறவனன்னம்,கூட்டாஞ்சோறு தாசி அன்னம், வண்ணானன்னம்,கத்திபிடித்து சேவிப்பவனன்னம் குஷ்டரோகியன்னம், பாடகனன்னம், கொல்லனன்னம், தட்டானன்னம், தகாதவர்களுக்கு யாகஞ்செய்துவைத்தவனன்னம், வட்டிக்கு வாங்குகிறவனன்னம், அறுதைகளன்னம், பாலரன்னம், சித்திரக்காரனன்னம், வேடர்களன்னம, தேவதூஷகனன்னம், உச்சிஷ்டன்னம், பயந்தவனன்னம், அழுகிறவனன்னம், பசிதாக முள்ளவனன்னம், உலோபனன்னம், தேவதுரோகனன்னம், விபூதி ருத்திராக்ஷ துவேஷி அன்னம், பாகஸ்தர்களை மோசம் செய்தவனன்னம், ஊர்த்துவ

புண்டரம் போட்டவனன்னம், வெட்டுப்பட்டவனன்னம், அம்பட்டனன்னம், குயவனன்னம், ஊழியக்காரனன்னம், மாதவிடாய் மாதர் சண்டாளன், ஆசாரமில்லாதவன், பார்த்த அன்னம்,வேசிகளன்னம், பாங்கியரன்னம், இவைகளை உண்டதால் வந்த பாவம், பஞ்சநதத்தை அடைந்து காவேரி ஸ்நானம் செய்து பஞ்சநதீஸ்வரரை தரிசித்து ஜெப்பியேசுர மண்டபத்திலிருந்துருத்திராத் தியாயத்தில் சொல்லிய மந்திரங்களை ரிஷி, சந்தசு, தேவதை, அங்கநியாசம், கரநியாசத்தோடு செபித்து மரணபரியந்தம் அங்கு வசித்தால் நீங்கி முக்தியடையலாகும்.

18-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## 19-வது விரசப்பிராமணன் முக்தி அடைந்த அத்தியாயம்.

பூர்வத்தில் காஞ்சி தேசத்தில் பிறந்த விரசனென்னும் பிராமணன் தீர்த்தயாத்திரை செய்யப் புறப்பட்டு அனேக தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து பின் காவேரி தீரமடைந்து ஸ்நானஞ் செய்து ஆங்காங்குள்ள சிவாலய தெரிசனம் செய்து திருவையாற்றையடைந்து தேவோத்தமனுகிய பிரணதார்த்திஹாரரை ஸ்தோத்திரம்செய்து திருக்கோயிலை வலம் வந்து நமஸ்கரித்துப் பூஜைசெய்து தெற்குவாயலுக்கு மேல்புரம் பன்னகசாலை யொன்று அமைத்து தன்மனையாளை வரவழைத்து அதிலிருந்து இல்லரம் நடத்திவருங்காலத்தில் தனுர்மாசம் பிறந்தது பிறந்தவுடன் காவேரியில் திரிகாலஸ்நானம் செய்து முப்பது நாளும் உபவாசம் இருந்து ருத்திரசபத்துடன் பஞ்சாக்ஷர மந்திரத்தையும் செபித்து தினம் நூறு பிரதக்ஷணம் செய்து மாசாந்தத்தில் காவேரிஸ்நானம் செய்து சந்தியாவந்தனம், சாயத்திரி ஜபம அவுபாசனம், பிரமயெக்ஞயம் சூரியோபாசனம் செய்து சிவலாயமடைந்து பிரதக்ஷண நமஸ்காம் செய்து சந்நிதியில் உட்கார்ந்து சுவாமியை நோக்கி திரிலோசனு, தேவதேவ, மதானுந்தகா, சங்கரா, அந்தகாந்தகா, ஓங்காராரதியந்திர சொரூபா, அம்பிகாபதே, ஈசானு ஜபசித்திகரா, திரிசியாதிரிசிய பிரபஞ்ச சொரூபா, ஞேயஞான ஞாதுரு சொரூபா, கருணைக்கடலே, சிவலோகத்தியாகர பிரணதார்த்திஹார, சத்தியோசாதாதி பஞ்சமுகா, என்று ஸ்தோத்திரம் பண்ணி யடியேனை நரகலோகம் காணுத வண்ணம், காத்தருளவேண்டுமென்று தியானம் செய்தார்.

செய்தவுடன் பரமசிவன் நந்திப்பிரந்நிய'கி சிவகணங்களுடன் ரிஷபாரூடரூய்ப் பிரசன்னமாகி வி சனே உனனுடைய ஸ்தோத்திரத்தாலும் ஜபத்காலும் ஆனந்தமடைந்தோம் உன்னபீஷ்டத்தை சொல்வாயென்றூர். அதைக்கேட்டு விரசன் சுவாமி காஞ்சி தேசத்தானுகிய நான் தீர்த்த யாத்திரையாக இவ்விடம் வந்தேன். வந்தயான திரும்ப அங்கேபோவதற்கு பனமில்லாதவன், காஞ்சிதேயத்திலிருக்கின்ற கம்பாநதியை இவ்விடத்தில் அழைப்பதோடு புத்திரசந்தானமும் அளித்து மரணபரியந்தம் இங்கு வசித்து மரித்தபின் முக்திபடையக் கிருபை செய்யவேண்டுமென்றுன். அதை பரமபதியானவர் கேட்டுப் பூமியினுள்வழியாக கம்பாநதியை அழைத்து தர்மஸம்வர்த்தனி அம்பாள் ஆலயத்தில் வடக்கில் நிலைபெறச்செய்து விரசனுக்கு தெரிவித்து மறைந்தருளினூர். விரசன் கம்பாநதியில்ஸ்நானஞ்செய்துபுத்திரனையடைந்து அப்புத்திரனுக்கு பிரணதார்த்திஹரனென்று நாமம் வைத்து சில நாளிருந்து மரணமடைந்து சிவலோகமடைந்தான். பின்பிரணதார்த்திஹரன் பஞ்சநதத்திலேயே வசித்து ஓர் புத்திரனை பெற்று, அப்புத்திரனுக்கு பஞ்சநதேசானனென்று பெயர் வைத்து சிலகாலமிருந்து சிவலோக பதவியை அடைந்தான்.

19-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## 20-வது ததீசீ முதலான மகரிஷிகள் முக்தி அடைந்த அத்தியாயம்.

சிவபக்த சிகாமணிகளும் வீபூதிருத்திருக்ஷதாரும், வேதவேதாந்தா பாரங்கதரும், பஞ்சாக்ஷர ஜபமுளளவரும், ருத்திரபாராயணஞ்செய்பவருமான ததீசீ முதலானமகரிஷிகள்இமயமலைச் சாரலிலிருந்து முக்திஸ்தலந் தெரியத் தபசு செய்தார்கள் அப்போது பரமசிவன் பிரசன்னமானூர். ஆனவுடன் மகரிஷிகள் எழுந்து நமஸ்காரம் செய்து தேவதேவா முக்தி சாதனமாயுள்ள சிவஸ்தலத்தை திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்றூர்கள். அதற்கு பரமசிவன் எதாசக்தி தனதானத்தால் சம்சார நாசஞ் செய்யதக்கதும் யாகம், தபசு, ஜபம், சித்திக்கத்தக்கதும், கௌதமர் துர்வாசர் சதாநந்தர் முதலான மகரிஷிகளும், பிர்மவிஷ்ணுக்களும் யக்ஷகின்னர கிம்புருட வித்தியாதர கந்தர்வ சித்த சாத்திய சாரணா அப்சரசு முதலானவர்களும், வசித்தடைந்த பஞ்சநதஸ்தலத்தை யடை

விர்களாயின் தவசித்தியடைந்து முக்தி யடையலா மென்று சொல்லி மறைந்தருளினர் உடனே மகரிஷிகள் இமயமலைச் சாரலை விட்டு பஞ்சநதத்தை அடைந்து காவேரி நதியில் ஸ்நானம் செய்து ஜாபாவ உபநிஷத்திற் சொல்லியபடி விபூதி ருத்திராக்ஷம் தரித்து ஆலயம் வந்து ஐப்பியேசர மண்டபத்தில் நூறு வருஷகாலமிருந்து சிவபூஜா துரந்தரர்களாக தவம் செய்தார்கள். அப்பொழுது பரமசிவன் பிரசன்னமாகி வந்தார் வந்தவரைமகரிஷிகள் நமஸ்கரித்து பாமபதியை நோக்கி தோத்திரம் பண்ணினர்கள். சிவபெருமான் மகரிஷிகளே உங்கள் தவத்தால் ஆனந்தமடைந்தோம், மற்றஸ்தலத்தில் அனேக கோடிகாலம் இருந்து தபசு செய்தாலும் சித்தியாவதில்லை, இந்தஸ்தலத்தில் கணப்பொழுது தபசு செய்தால் போதுமானது. அப்படிக்கில்லாமல் நூறுவருஷகாலமிருந்து தவஞ்செய்தமையால் நீங்கள் மோக்ஷமடைவதற்கு ஐயமில்லை என்று சொல்லி மறைந்தருளினர். அதன்பின் மகரிஷிகள் அநேக காலம் வசித்து சித்தி முக்தி அடைந்தார்கள்.

20-வது அத்தியாயம் முற்றிற்று.

## 21-வது பரமசிவனுக்குப் பிரணதார்த்திஹரர் என்று பெயர்வந்தற்குக் காரணமுறைத்த அத்தியாயம்.

கிருதயுகத்தில் எல்லாச்சாஸ்திரங்களையுங் கற்றவனும் சகலமந்திரார்த்தங்களுந் தெரிந்தவனும், வேதாநுஷ்டானந்தவறாதவனுமான சிவசன்மனென்ற பிராமணன் க்ஷயரோகத்தாற் பீடிக்கப்பட்டுக் கர்மகாண்ட விதிப்படி அனேக தருமங்களைச்செய்தும், நிவர்த்தியாகாமல் மிகுந்தவிசனத்துடன் பஞ்சநதஸ்தலமடைந்து, கௌதமநந்தரான சதாநந்தரைக்கண்டு, நமஸ்கரித்து, சுவாமி! நான் வெகுநாளாக வியாதியால் வாதனையடைந்து, கர்மகாண்ட விதிப்படியனேக தர்மங்கள்செய்தும், நிவர்த்தியாகவில்லை. தேவரீரென்மேற் கிருபைசெய்து, இதற்கோர்நிவர்த்திசொல்ல வேண்டுமென்றான். சதாநந்தர் ஞானதிருஷ்டியாலிவன் பூர்வகர்மத்தை தெரிந்து, சிவசமன்மனே! நீ பூர்வசென்மத்திற்சூரிய கிரகண புண்ணியகாலத்தில் ஒருவண்டி தானியந் தானஞ் செய்கிறே னென்றோர் பிராமணனுக்குச் சொல்லிப்பின் கொடாததனும் பிர்மகத்திபாவத்தோடொப்பான இந்த க்ஷயரோகம்வந்தது.

இதுமூன்றுசென்மம்விடாது, ஆகையாலிப்பொழுதே சிவாராதனமும், தினமொன்றுக்கு பிரணவத்துடன் பதினாயிரம் பஞ்சாக்ஷரசெபமும், வீதிப்பிரதக்ஷிண நூறும், ஆயிரநமஸ்காரமும், இந்க்ஷேத்திரத்தில் நீசெய்தால், வியாதிநீங்குமென்று சொல்லியருளினர். சிவசன்மன் தன்குருவாகிய சதாநந்தர் சொல்லியவாறேயோர்மாதஞ்செய்து, கடைசிநாளிராத்திரி நித்திரைசெய்கின்ற சிவசன்மனருகிற் சிவபெருமான்சந்நியாசியாகவந்து, கையில் விபூதிபெடுத்துச், சிரசுமுதற்கால் வரையிலுந்தடவி திருவடி தீக்ஷைசெய்து, மறைந்தருளினர் சிவசன்மா விபூதிதடவுங்காலத்திலரியாமல் தீக்ஷை செய்யுங்காலத்தில் விழித்தெழுந்து தன்றேகம் ரோகமில்லாமற் றங்கம் போலிருப்பதைக்கண்டு, ஆச்சரியமடைந்துவந்தவர் பரமசிவனேயென்று தெளிந்து ஆலயமடைந்து வேதங்களாலும் ஸ்மிருதிபுராணங்களாலுந் தோத்திரஞ்செய்து, பிரணதார்த்திஹரனே! வெண்முன்வர வேண்டுமென்றான். உடனே பரமசிவன் பிரசன்னமாகிச் சிவசன்மனே!சென்றஇரவுச் சந்நியாசிவேடமாகவந்து, விபூதிதடவித்திருவடிதீக்ஷைசெய்தது நாமே உன்னாற்பிரணதார்த்திகரனென்றழைத்த பெயரையிந்தஸ்தலத்தில்யாருச்சரித்து அந்தநாமத்தினால் நம்மை யழைக்கின்றவர்கள் பாபநாசஞ்செய்வோம். நீ யிந்தஸ்தலத்திற்றானே வசிப்பாயென்று சொல்லிமறைந்தருளினர். அதன்பின் சிவசன்மா திருவையாற்றிலேயே நெடுங்காலமிருந்து மரணமடைந்து, சிவலோகமடைந்தான்.

21-வது அத்தியாம் முற்றிற்று.

## 22-வது சர்வவிஜயனை வதைத்த அத்தியாயம்

இரணியாசுரன் பேரனும், பிரகலாதன் புத்திரனுமான சர்வவிஜயனென்னுமசுரன் தான் எல்லாவுலகத்திற்குமதிபதியாகவேண்டுமென்று, இமயபருவதச்சாரலிலிருந்து பிரமதேவனை நோக்கித் தவம் செய்தான் பிரமதேவன் அவன் தவத்திற்கிரங்கி அம்சாருடனாகப்பிரசன்ன மானர். உடனேயவ்வசுரனெழுந்து நமஸ்கரித்துநின்று சுவாமி! பதினான்குலங்களிலுமுள்ளவர்களாலும் நானபஜயமடையாதவரந்தரவேண்டுமென்றான். அவ்வாறேதந்தோமென்று சொல்லிப் பிரமதேவன்

மறைந்தார். உடனே யிமயபருவத்தை விட்டுத்தன்னகரத்தையடைந்து, சொர்க்கலோகத்தை ஜெயிக்கவேண்டுமென்று தன் மந்திரிகளுடனாலோசித்துப்பதினாயிரலக்ஷம்யானை,கோடிலக்ஷங்குதிரை, கோடிலக்ஷந்தேர், கோடிலக்ஷம்பதாதியுடன் புறப்பட்டு இந்திரலோகமடைந்து நான்குவாயிலும் வளைத்துக்கொண்டார்கள் அதை யிந்திரனறிந்து தன்சேனைகளுடன் யுத்தத்திற்குவந்து இருசேனையுங்கலந்து போர்செய்யும்போது, சர்வவிஜயன் சூலாயுதமெடுத்துத் தேவர்கூட்டத்திற்குட்புகுந்து அடித்தான் அதற்காற்றமற்றேவர்கள் இந்திரனை நோக்கி முறையிட்டார்கள். இந்திரன் அக்கினியைநோக்கி அக்கினிதேவா நீ சீக்கிரங்கவசம் பூண்டு, இரதமேறிச்சென்று, சர்வவிஜயனை விஜயஞ்செய்துவருவாயென் றுசொன்னான். உடனே அக்கினிதேவன் இரதமேறியுத்தகளத்தில் சென்று சூலாயுதத்தை எடுத்துபதினாயிரமசுரர்களை கொன்று சர்வவிஜயனுக்கு எதிரேபோகும் பொழுது சர்வவிஜயன் கண்டு ஒரு கதாயுதத்தை எடுத்து அக்கினிதேவன் தலையில் தாக்கினான் தாக்கிவுடன் அக்னிதேவன் வாயால் ரத்தத்தை கக்கிக்கொண்டு பூமியில் விழுந்து மரணமூர்ச்சை அடைந்தான் உடனே அசுரன் தேவர்கூட்டத்திற்குள் புகுந்து தாக்கினான். அதை தாங்க முடியாமல் தேவர்கள் முறையிட்டார்கள். அதை யிந்திரன்கேட்டு வாயுவை நோக்கி நீ அசுரனை சம்மாரஞ் செய்து வாவென்றான். வாயுதேவன் ஊழிக்காற்றைப்போல் போற்களத்தில் உள்புகுந்து ஐயாயிரம் அசுரர்களைக்கொன்று திரிகின்ற சமயத்தில் அசுரன் வாயுவை சக்தியாயுதத்தால் அடிக்க வாயுதேவன்மறைந்தோடிபோய்விட்டான் அதன்பிறகு எமனை அனுப்பினான்.

எமன் புகுந்து யுத்தம்பண்ணுங்காலையில் அசுரன் இருப்புலக்கையால் சுழற்றியடிக்க அதற்காற்றமல் எமனோடி ஒளிந்தான். அதன் பின் வருணனை யனுப்பினான்.

வருணன் வந்து யுத்தம் செய்யும்பொழுது அசுரன் பரிகாயுதத்தால் அடிக்க அதற்காற்றமல் சமுத்திரத்துக்கு ஓடி ஒளிந்தான் அதன்பின் இந்திரன், குபேரன், அஷ்டவசுக்கள், சத்தமருதர்கள், கெந்தருவர் முதலான அனேகர்களை கூட்டமாக அனுப்ப அவர்கள் வந்து யுத்தத்தினுள் புகுந்து யுத்தம் பண்ணுகையில் அசுரன் தன்சேனை குறைவதைக்கண்டு அதிககோபத்துடன் உலக்கையை கையில் எடுத்துத்தூக்கி கிறுகிறுவென்று சுழற்றி யடித்தான். அதைபொருக்கமுடியாமல் வந்தவர்கள் திசைகள் தோறும் ஓடிஒளிந்தார்கள். பின்தேவேந்திரன்

வகனுக நிற்பதை யசுரன் கண்டு இந்திரன் சமீபத்தில் போயினான். போனவுடன் இந்திரன் வச்சிரபாணியாக அயிராவதத்திமேலரி அநேக அசுரர்களை கொன்று தன் கையிலிருந்த வஜ்ஜிராதயுத்தால் அசுரன் தலையிலடித்தான். அந்த அடியினால் சர்வவிஜயன் இரண்டு நாழிகையளவு மூர்ச்சையடைந்து பூமியிற் கிடந்து பின்னெழுந்து கையை மடித்து இந்திரன் மார்பில் குத்தினான். குத்தினவுடனே இந்திரன் யானையினின்றும் கீழே விழுந்து காயமடைந்து மூர்ச்சையடைந்தான். அத்தருணத்தில் மாதலி மாயையால் மறைத்து இந்திரனை தூக்கிக்கொண்டு அமராவதியை அடைந்தான. அப்பொழுது சர்வவிஜயன் அமராவதி பட்டணத்துட்புகுந்து தேவமாதர்களை சிறைபிடிப்பதோடு காமதேனு கர்பகவிருக்ஷம் முதலான இந்திரன் செல்வங்களை எல்லாம கொள்ளை யடித்துக்கொண்டு தன்னகரமாகிய இரணியபுரத்தை அடைந்தான். இந்திரன் இரந்தவர்கள் போக இருந்தவர்களோடு சத்தியவுலகத்தையடைய தேவருலகம் பாவவுலகமாயிற்று சத்தியலோகத்தை யடைந்த இந்திரன் தக்ஷப்பிரசாபதி, நாரதர், சனகர், சனந்தனர், சனக்குமாரர் சனச்சுசாதர், முதலான யோகிகள் சூழச் சரஸ்வதி சமேதராக வீற்றிருந்த சகலலோக சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமதேவரைக் கண்டு நமஸ்கரித்தெழுந்து நின்று சுவாமி! கமலயோனியே! பிரகலாதன் புத்திரனான சர்வவிஜடன் தாங்கள் கொடுத்த வரத்தின் பலத்தால் மிகுந்த கருவக்கொண்டு, தேவர்கள், பிராமணர்கள், மகரிஷிகள்முதலான பெரியோர்களுக்குச் சகிக்க முடியாத விடுக்கண்செய்வதுந்தவிர என்னையும் அமராவதிப் பட்டணத்தை விட்டுத்துரத்திவிட்டான்; நான்வசிப்பதற்கோ விடமில்லை, யடியேனை யிரக்ஷித்தருள வேண்டுமென்றான். அதைக்கேட்டபிரமதேவர் இந்திரன்முதலான தேவர்களைப்பார்த்து பூமியிற் பஞ்சநதமென்கின்ற சிவக்ஷேத்திரமிருக்கின்றது. அதில்வசிப்பவர்களுக்குச்சர்வசத்துருநாசமும், சகலரோக நிவாரணமும், சம்சாரநிவர்த்தியும், ஜெனனமரண பயக்கிலேசநாசமும் உண்டாகும். அன்றியும் பரமசிவன்காலபைரவ ராற்றுஷ்டநிக்கிரகஞ்செய்கின்றார். அசுரர், இராக்ஷதர், பிசாசு, துஷ்டக்கிரகங்களும், அந்தவிடத்திலணுககூடாது. ஆகையால், அந்தக்ஷேத்திரத்தில்தேவரோடு நீவசிப்பாயேல் அதையறிந்துசர்வவிஜயன் அங்குவந்து அநுசாரஞ்செய்வான். அப்பொழுது காலபைரவரால் மரணத்தையடைவானென்றுசொல்லினார். சொன்னவுடன் இந்திரன் அவரோடு திருவையாற்றையடைந்து, சிவபூஜாதுரந்தரனுகஸ்ரீ ருத்திரத்தால் ஸ்தோத்திரம் பண்ணினான். பர

மசிவன்பிரசன்னமாகி இந்திரனே! நீபயமடையாதே இந்தஸ்தல த்தில் பாவிகளாகியவிருக்ஷங்களுக்குக்கோடரியாகநமதுகிங்கர னாகியகாலபைரவரிருக்கிறார். அவரால்சர்வவிஜயன் மரணமடை வான். என்றுசொல்லிமறைந்தருளினார். பிரமதேவர்,இந்திரன், பஞ்சநதத்தையடைந்தபின் நாரதரைநோக்கி நாரதரே! நீர்தீர்த் தயாத்திரைக்குப்போவதுபோற்பூமியையடைந்து, சர்வவிஜய னைக்கண்டு, இந்திரன்பஞ்சநதத்திலிருக்கிறனென்றுசொல்லி, அந்தவிடத்துக்குச்சர்வவிஜயன் போகும்படிசெய்துவாருமென் றார் அவ்வண்ணமேநாரதர் பூமியில்வந்து, அனேகதெய்வநதி களில்ஸ்நானஞ்செய்து, திருவையாற்றையடைந்து காவேரிஸ்நா நஞ்செய்து, ஆலயத்துட்புகுந்து, பரமசிவனைதெரிசித்துஸ்தோ த்திரம்பண்ணினார். அப்பொழுது பரமசிவன் பிரசன்னமாகி நாரதரே! உமக்குவேண்டியவரங்களைப் பெற்க்கொள்ளுமென்றார் நாரதர் ஐயனே! தேவரீர்பாதமெரிசனத்தையன்றி யடியேனு க்கு வேறொன்றும் வேண்டுவதில்லையெனப் பரமசிவன்மறைந் தருளினார். நாரதர் திருக்கோயிலைவிட்டு வெளியில்வந்து திருப் பழனத்தை உத்தேசித்துபோகுந்தருணத்தில் இந்திரன் நார தரைக்கண்டு நாரதரே! அசுரரால்சொர்க்கத்தைவிட்டுப் பூமியில் வாசஞ்செய்வது எப்பொழுது நீங்குமென்றுகேட்க நாரதர் பயப்படாதே விரைவில் அசுரர்கள் நாசமடைவார்களென்று சொல்லித் திருபழனத்தையடைந்து, ஆபத்சகாயரைதெரிசி த்துத் திருச்சோற்றுத்துறையையடைந்து ஓதவினேஸ்வரரைத் தெரிசித்துத், திருவேதிகுடியையடைந்து ஆதிவேதேசுவரரைத் தெரிசித்து; திருக்கண்டியூரையடைந்து, கண்டீஸ்வரரைதெரி சித்துத் திருப்பூந்துருத்தியையடைந்து, புஷ்பவனேசுவரரை தெரிசித்து திருநெத்தானமடைந்து கிருத்தானேஸ்வரரை தெரிசித்து திருவானைக்காவையடைந்து செம்புநாதரைதெரி சித்து த்திருச்சிராமலையையடைந்து, தாயுமானவரைதெரிசித்து க்கிழக்கேதிரும்பி சுவாமிமலையையடைந்து, ஸ்வாமிநாதரைத் தெரிசித்து கும்பகோணமடைந்து கும்பேஸ்வரரையும், உமா பாகேஸ்வரரையுஞ் சோமநாதரையுந்தெரிசித்து, மத்தியாச் சுனத்தையடைந்து, மகாலிங்கேஸ்வரரைதெரிசித்து இராமேஸ் வரந்தெரிசிக்கவேண்டுமென்று இராமேஸ்வரத்துக்குசமீபத்தில் போகையில் சர்வவிஜயனைக்கண்டு தான்அவனருகுபோய், சர்வவிஜயனே! நீயெங்குபோகின்றாய் என்றுகேட்டார் கேட்ட வுடன் நாரதரைநமஸ்கரித்து, என்சத்துருவாகிய இந்திரனோடு தேவர்களையும் தேடிபோகிறேனென்று சொல்லினான் அதை க்கேட்டு நாரதர் சிரித்துத்தேவர்கள் திருவையாற்றில் காலபை

ரவர்களால் நிர்பபங்காரகவசிக்கின்றார்கள் நீயவ்விடம் போனால் உன்னைக்கண்டு காலபைரவர் ஓடிப்போவார். நீசீக்கிரம் அங்குபோவாயென்று சொல்லி இராமநாதரை தெரிசித்து அசுரன் பஞ்சநதத்தை யடைவதற்குமுன் தான் பஞ்சநதத்தையடைந்து பரமசிவனை ஸ்தோத்திரத்தால் பிரத்தியக்ஷமாக வரவழைத்து ஸ்வாமி! சர்வவிஜயன் இவ்விடத்திற் தேவர்கள் இருக்கிறார்களென்று மிகுந்தகோபத்துடன் வருகிறான். அவனைக் கொன்று தேவர்களை காத்தருளவேண்டுமென்றார். பரமசிவன் நாரதரே! உம்முடைய வேண்டுதலின்படி யவனைக்கொன்று தேவர்களை காத்தருளுவோமென்று சொல்லிக் காலபைரவரை யழைத்து, பைரவரே! சர்வவிஜயனென்னும் அசுரன் தேவர்களைக் கொல்ல இங்குவருகின்றான் அவனைக்கொன்று தேவர்களை காத்தருளவேண்டுமென்று சொல்லிமறைந்தார். அதன் பின் சர்வவிஜயன் இலச்சங்கோடிசேனையுடன் திருவையாற்றை யடைந்து நாலுபக்கமும்வளைத்து, அனேகபாணங்களையெடுத்து தேவர்கள்மீதும் பிராமணர்மேலும் ரிஷிகள்மேலும் வருஷித்தான் அதைபொருக்கமுடியாமற் காலபைரவரைநோக்கி முறையிட்டார்கள்காலபைரவர்சூலாயுதத்தைக்கையிலெடுத்துச்சுழற்றி அசுரசர்சேனைமேல்வீசினார் சூலமானது அசுரர்சேனையுட்புகுந்து இரண்டுகடிகைக்குள் சர்வவிஜயனோடு சேனைகளையுங் கொன்று திரும்பியது அதன்பின் இந்திரன் பரமசிவனை வணங்கி விடைபெற்றுத் தேவர்களோடு அமராவதிபட்டணமடைந்து வாழ்ந்திருந்தான்.

22-வது அத்தியாயம் முற்றிற்று.

## 23-வது சுசிகரப்பிராமணனுக்குக் கலிநீங்கியதை யுரைத்த அத்தியாயம்.

அனவத்தியாதேவி நாதசன்மாவை வணங்கிச் சுவாமி! கலியின் சுபாவத்தையும் அதைநாசஞ்செய்யும் விதத்தையுஞ் சொல்லியருளவேண்டுமென்று கேட்க நாதசன்மாபெண்ணே! நாலாவது யுகமாகியகலியுகத்திற்கோடி ஜனங்களில்ஒருவன் தருமவனாகி, ஆபாசதருமங்களைச் செய்தல் ஆயிரத்திலொருவன் அவுபாசனம் சந்தியாவந்தனம் வேதாத்தியயனஞ்செய்தல் தருமவானைக் கண்டு அசுயைப்படுதல் விரதம், ஆசாரம் எக்கியம் குளம்வெட்டல் இவைகள் விடுதல், பொறுமை, டம்பநிமித்த

மாசாரமாயிருத்தல், கொஞ்சம்வேதசாஸ்திரங்கற்றகருவத்தாற்
பாவஞ்செய்தல் கோட்சொல்லல், காரியம்முடியுமளவும்சிநேக
னாகவும் பந்துவாகவுமிருத்தல் மாதர்முயக்கிலாசை சிரார்த்தம்
விடுதல் பிதுர்துரோகம், புத்திரதுரோகம், மனையாள்துரோகம்
நாயகன்துரோகம், குருத்துரோகம், சிவத்துரோகம், நம்பிக்கை
துரோகம், இரண்டாசௌசம்விடுதல் பிராமணர்சூத்திரர்கட்கு
த்தாசராகுதல் குதிரை, யானை, ரதமுடையவன் க்ஷத்திரியன்
சண்டாளன், சூதகன் தூரமாதர் சூத்திரன் சாதிகெட்டவன்
இவர்களைத்தொட்டுஸ்நானஞ்செய்யாதிருத்தல்சங்குசக்கரத்தார்
சூடுபடுதல் சங்குச்சக்கரச் சின்னமுடையவர்களுடன் கலந்து
விவாகஞ்செய்தல் அவர்களுடன் கூடி அத்தியயனஞ்செய்தல்,
நான்தான் உயர்ந்தவனென்று சொல்லல், அதர்மஇச்சையால்
அற்பாயுளாக மரணமடைதல் நான்குவருணத்தாருஞ்சங்கர
சாதியாதல் காமக்குரோத அகங்காரத்தால் வயிரமடைந்து
பிறர்குவருத்தஞ் செய்தல், உத்தமர்கள்நீசராகுதல் நீசர்கள்
உத்தமராகுதல் அரசர்கள்திரவியாசையையடைந்து தருமம்
செய்வதுபோற் தருமத்திரவியத்தை கவருதல அபகாரஞ்செ
ய்து பிறருக்குக்கெடுதிவிளைப்பவரோடு கலந்திருதல் ஆசார
மில்லாதவனையும் வேதங்கற்காதவனையும் சிரார்த்தத்தில்பிரா
மணனாகவைத்தல் சிஷ்டப்பிராமணனுக்கு கொடாதிருத்தல்,
குலமாதர்கள் வேசிகளைப்போல் அலங்கரித்துக்கொள்ளல், ஔஷ
தியற்பலத்தைக் கொடுத்தல் மேகஞ்சுருக்கமாகவருஷித்தல,
பால்நிமித்தமாகப் பசுவைப்பாலனஞ் செய்தல் நதிதீரங்களிர்
பயிரிடுதல் தருமத்திற்கும் மூடர்களுக்கும, சாதுகளுக்கும்,
விதவைகளுக்கும், பாலர்களுக்கும், அபகாரம் செய்துதிரவியம்
சம்பாதித்தல், டம்பநிமித்தம் பிதிர் எக்யமுதர் பஞ்சயக்ஞங்
களும், சோமயாதி யாகங்களும் செய்து அபாத்திரர்களு
க்கு தானங்கொடுத்தல் சவுசம, ஸ்நானம விதிப்படி செய்யா
திருத்தல் அகாலத்திற் கருமஞ்செய்தல் குயுக்தியால் வேத
நிந்தனை, விப்ர நிந்தனை, எதிநிந்தனை, பதிவிரதா நிந்தனை,
பரமசிவனிடத்தில் பக்தியில்லாமல் காட்டேரி, கருப்பன்,
முதலான துர்தேவரிடத்தில் பக்தி செய்தல், தேவார்ச்சனை,
பண்ணுகிறவர்களை பரிகாசம் செய்தல், இராஜ சேவகர்ள்
திரவ்விய நிமித்தம் பிராமணர்களை வாதைப்படுத்தல், தானம்,
எக்யம்' ஜெபம் இவைகளால் வரும் பலனை விற்றல், சண்
டாளரிடத்தில் வாங்கியுண்ணல், சூத்திரான்னம் புசித்தல்,
தாசி விதவை இவர்களுடன் புணர்தல், கலியுக முதர்பாக
த்தில் மாதர்கள் கணவனை நிந்தித்தல், நாலம்பாகத்தில்கடவுளை

மறத்தல் முதலான கெடுதல்கள் உண்டாகும், இந்தகலியுகத்தில் ஆதிகாலத்தில் வேதவேதாங்க பாரங்கதனும் தர்மசாஸ்த்திர மர்மத்தை அறிந்தவனும் வருணாச்சிரம தருமந்தவறாதவனும் சிவத்தியத்துடன் சிவபூஜாதுரந்தரனும் விபூதிருத்திராக்ஷதரனும், பாவமில்லாதவனுமான சிரகனென்னும் பிராமணன் கிருஷ்ணன் வைசந்தம் அடைந்த பின் கலிவாதையதிகரித்து எந்த விடங்களிலும் பாவிகளாக இருப்பதைக்கண்டு இந்தயுகதர்மம் நம்மையும் பற்றி நரகமடையச்செய்யுமென்று பயந்து பரமசிவனை சரணமடைவோமென்று தன் இடமவிட்டு தீர்த்தயாத்திரை செய்து வரும் காலத்தில் தனக்குப் பின்னாக கலிபுருஷன் கருநிறத்தை யுடையவனாய் கையில் கத்திபிடித்துக்கொண்டு தன்னைத் தட்டுவதைக்கண்டு பயந்து பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்தான்.

அந்த ஜபத்தைக் கேட்டு கலிபுருஷன் மறைந்தான் மறைந்தவுடன் இன்னும் அவன் நம்மைத் தொடர்வானென்று ஒரு விருக்ஷத்தினடியில் உட்காரந்து திரும்பிப்பார்த்தான். பார்த்பொழுது நெடுந்தூரத்தில் கலிபுருஷன் வருவதைக்கண்டு கீழே விழுந்து மூர்ச்சையடைந்து தெளிந்து முன் பஞ்சாக்ஷர மந்திரத்தால் மறைந்தவன் இப்பொழுது கண்ணுக்குத்தோன்றுகிறான். இன்னுமந்த பஞ்சாக்ஷர மந்திரத்தையே ஜபிப்போமென்று தியானத்துடன் செபிக்க கலிபுருஷனைக் காணுகிறான். அப்பொழுது ஆகாயத்தில் ஓ பிராமணனே! கலிபுருஷனுன்னை பிடிக்க வருகிறான் அன்றியும் பஞ்சத க்ஷேத்திரம் தவிர மற்றஎல்லாவிடங்களிலும் கலிபுருஷன் வியாபித்திருக்கிறான் ஆகையால் நீ சீக்கிறம் பஞ்சநதத்தை யடைவாயென்று அசரீரு உண்டானது. உடனே பஞ்சாக்ஷர ஜபத்துடன் பஞ்சநதத்தை யடைந்து திரிகாலம காவேரிஸ்நானம் செய்து வேதமாதாவாகிய காயத்திரி மந்திறத்தை ஆயிரத்தெட்டுரு ஜபிப்பதோடு பஞ்சர்க்ஷர மந்திரமும் செபித்து பிரதக்ஷண நமஸ்காரத்துடன் பஞ்சநதீசரை தரிசித்து ருத்திர மந்திறத்துடன் ருத்திருபிஷேகஞ் செய்து சதா ருத்திர ஜபத்தால் ஸ்தோத்திரம் பண்ணினான், பரமசிவன் பிரசன்னமானார் சுசிகரன் நமஸ்கரித்தெழுந்து நின்று சுவாமி! என்னை கலிபணுகாது காத்தருளவேண்டுமென்றான். சுசிகரனே! எம்மிடத்திலுள்ள பயத்தால் கலி புருஷன் இந்தஸ்தலத்தில் வரமாட்டான் அந்தபயமுனக்கில்லை. ஜப்பியேசுரபதி, பஞ்சநதீசா, பிரணதார்த்திஹரா, என்று நீஜபித்தல் துர் சொப்பனம் துஷ்டகிரகம் பூதப்பி

ரேத பிசாசம் விஷம் ஆபிசாரம் சாரித்திரம் துக்கம் இவைகள் நாசமாகும். அர்த்தோதயம் மகோதயம் சூரிய சந்திர கிரகணம் இந்தநாள்களில் பஞ்சநத காவேரிஸ்நானம செய்பவர்கள் பரதிரவியாபகாரம் இம்சைபரதாரகமனம் முதலானகாயிகபாதகத்தையும் கோட்சொல்லல் மாறுபடப்பேசல் குரூரமாகச் சொல்லல் ஆனவாசிகபாதகத்தையும் பரதிரவியத்தியனம் பிறருக்குகஷ்டத்தை யெண்ணல் வீணஹங்காரப்படுதல் ஆனமரன சிகபாதகத்தையும் போக்கிக் கோடி கோதானம் செய்த பலத்தை அடைவார்கள். அன்றியும் காவேரி ஸ்நானம் கங்காநதியிலும் நூறுபங்கு அதிகபலத்தையும் சமுத்த பூமிதான பலத்தையும் கொடுக்கின்றது பஞ்சநதக்ஷேத்திரத்தில் வஸ்திரம் தானியம் இரணியம் இவைமுதலாகிய தானங்கள் செய்தவர்கள் ஆயுள் விருத்தி தனதனியசம்பத்து புத்திர பௌத்திர சம்யுத்தராக அனேக சௌக்கியத்தையடைந்து பரத்தில் சிவலோக சாயுத்தத்தையும் அடைவார்கள். வித்தியாதபசு விரதமுள்ள பிராமணன் புண்ணியகாலங்களில் தான பாத்திரனுவான் மகா சங்கிராந்தி முதலாகிய புண்ணிகாலங்களில் காவேரி ஸ்நானம் செய்து நம்மை தரிசித்தவர்கள் மோக்ஷமடைவது சத்தியம் ஆதலால் நீ இந்தஸ்தலத்தில் வசித்துப் புண்ணிய காலங்களில் காவேரிஸ்நானம் செய்து நம்மை தரிசித்தால் மோக்ஷமடைவாயென்று பரமசிவன் சொல்லி மறைந்தருளினுர். அவ்வண்ணமே சுசிகரன் மரணபரியந்தம் திருவையாற்றில் வசித்து மோக்ஷமடைந்தான்.

23-வது அத்தியாயம் முற்றிற்று.

## 24-வது தருமநாசன் சாரூபபதவியை அடைந்த அத்தியாயம்.

திரேதாயுகத்தில் கோதவரிதீரத்தில் முற்கலம்சத்தில் பிறந்த தர்மநாசனென்ற பிராமணன் மருணுச்சிரதத்தை விட்டு, விலக்கான காரியங்களைச்செய்துவந்தான் அவனுக்குத் தர்மசொரூபியாக ஓர் புத்திரன்பிறந்தான் அப்புத்திரனுக்கு தருமசேது என்று பெரிட்டு சாதகர்மமுதல் உபநயபரியந்தம் வேறோர் பிராமணனுல் செய்வித்து விவாகமும் செய்வித்

தான். பின் தருமசேது புண்ணியகீர்த்தி என்றும் பிதுரு
கடன் விமோசனனென்றும் பிரசித்தியனடைந்தான்.
அக்காலத்தில் அவன் தந்தையாகிய தருமராசன் மகோதர
வியாதியாற் பீடிக்கப்பட்டு தான் சீக்கிரத்தில் மரண மடை
வேனென்று நிச்சயித்து புத்திரனை அழைத்து தருமசேது
வே நான் சொன்ன முதல் வருணாச்சிரம தர்மத்தை விட்டுப்
பாவத் தொழில்களில் பிரவேசித்து பாவஞ்செய்தமையால்
நரகமடைவேன்று என் இருதயம் நடுங்குகிறது. நான்நரகமடை
யாமற் செய்வதுன் கடமை என்றனன். அதைக்கேட்ட தரு
சேது ஐயா பூர்வத்தில் பிதுர்வாக்கியத்தால் பரசுராமன்
தன்தாயைக் கொன்றார். இராமன் காட்டை யடைந்தார்.
யயாதி சக்கிரவர்த்தியின் வயோதிகத்தை அவர் புத்திரனா
கிய பூருமகாராஜா வாங்கிக்கொண்டு தன் யௌவனத்தைத்
தன் தந்தைக்களித்தான்; பீஷ்மர் தன் தந்தை சந்தனு மகா
ராஜா மச்சகந்தியை விவாகம் செய்து சுகத்தையடையும்
பொருட்டு தான பிர்மச்சரியத்தை அடைந்தார். ஆதலால்
தந்தை வாக்ய பரிபாலனைஞ் செய்யவேண்டியது புத்திரர்கட
மைதான் நான் செய்யவேண்டியதைச் சொல்லவேண்டுமென்
றான். தருமராசன் புத்திரன் சொல்லியதிற் சந்தோஷமடை
ந்து தருமசேதவே நான் மரணமடைந்தபின் என்னுடைய
அஸ்திகளை எல்லாவற்றையும் இராமசேதுவில் ஸ்தாபனம்
பண்ணினால் எனக்குத்தம ஜென்மங்கிடைக்குமென்றார். தரு
மசேது தந்தை சந்தோஷிக்க அவ்வாறே செய்கிறேனென்று
சொன்னார். சிலநாள் சென்ற பின் மகோதர வியாதியாற்
தருமராசன் மரணமடைந்தான். அவன் மனையாளும் அனு
மரணமடைந்தாள் தருமசேது தாய் தந்தையிருவரையும்
தகனம் பண்ணி தகனகர்மா முதல் சவுண்டிகரண
பரியந்தம் செய்து வந்ததுந்தவிர வருஷாப்தீகமரியந்தப்சே
ஷகருமங்களையும் செய்து இருவர் அஸ்தியையும் ஓர் பெட்டி
யில்வைத்தெடுத்துக்கொண்டு சேதுவையுந்தரிசித்துநியமத்து
டன் புறப்பட்டு வருங்காலையில் பஞ்சநதமடைந்து சங்கர்ப்ப
பூர்வமாக காவேரிஸ்நானம் பண்ணி க்ஷேத்திர தீர்த்தம்
தர்ப் ணம் முதலியவைகள் செய்து சிவாலய மடைந்து பிராண
தார்த்தி கரரை தரிசித்து பிரதக்ஷண நமஸ்கார ஸ்தோத்தி
ரத்துடன் பஞ்சாக்ஷரஞ் செபித்து அன்றையதின முபவாசம்
இருந்து மறுநாள் பாரணை செய்து தன்னாத்மாவை கிதார்த்
தாமாக எண்ணி ஸ்தலமான்மியத்தையுங் காவேரி மான்மியத்

தையும் விசாரித்தங்கெழுந்தருளித் தூர்வாசர், கௌதமர் சநாதந்தர், வசிஷ்டர் முதலான ஆறுகோடி மகரிஷிகளும், அநேகஞ்சந்நியாசிகளும், வானப்பிரஸ்தர்களும், பிரமசரிய ஆச்சிரமத்தார்களும் சோமயாகமுதல் மற்ற யாகங்களையுஞ் செய்து முடித்த தீக்ஷிதர்களும் தவஞ்செய்வதைக்கண்டு, நாமுமிந்தஸ்தலத்திலொருமாதம் வசிப்போமென்றொருவீட்டில் அஸ்தி பெட்டியைவைத்துச் சுயப்பாகத்தாலேகவாரம் போசனஞ்செய்து, பஞ்சாக்ஷர செபத்துடன் வசிக்கின்ற நாள்களில் ஓர்நாள் நித்திரை செய்கையில் சொப்பனத்திற் றன் பிதாவை சந்திரார்த்த சேகரனாகவும் சடாதாரியாகவும முக்கண்ணனாகவும் விபூதி தரித்தசரீர முள்ளவனாகவும் கண்டு எழுந்து நமஸ்கரித்து தருமநாசனை நோக்கி ஐயனே யுனக்கிந்த சிவசொரூபம் வந்தகாரணத்தைச் சொல்லவேண்டுமென்றான்.

தருமநாசன், நானிறந்த பின் எமதூதர்கள் இருப்புப் பாசங்களாற் கட்டி எண்பதாயிரம் யோஜனை தூரமுள்ள பயங்கரமான எமமார்க்கத்தில் கொதித்த சேற்றிலும கொதித்த மணலிலும், கல்லிலும் முள்ளிலும் எமதூதர்களால் முசலாயுதத்தால் அடித்திழுத்தும், கல்மழையாலும், நெருப்பு மழையாலும், வாதையடைந்தும போகையால் பத்துநாட்சென்று பதினோராம்நாள் எமலோகத்திற்கருகே போகையில் பாவிகளால் கடக்கக்கூடாத வைதரணி நதியென்னும் நெருப்பைக் கண்டேன். அதிலிரங்கென்று எமபடாள் சொன்னதைக் கேட்டு பயந்தேன் உடனே எமதூதர்கள் என்னை யதில் தள்ளினார்கள் நான் அதில் ஒருநாள் முழுதும் கிடந்து தத்தளித்தேன், பனிரெண்டாம் நாள் பசுவொன்று வந்து தருமநாசனே நீவைதரணி நதியைத் தாண்டவேண்டி யுன் புத்திரனார் பனிரண்டாம் நாள் சவுண்டிகரணத்திற்கு பிராமணனுக்கு தானங்கொடுத்த பசு நான் என்வாலை நீ பிடித்துக்கொள்ளு உன்னைக்கரையேற்றுகிறேனென்று சொல்லிற்று. அவ்வாறே நான் வாலைப் பற்றிக்கொண்டேன். உடனே அந்த வைதரணி நதி குளிர்ந்தது. முழங்காலளவானது, கரையேரினவுடனே எமதூதர்கள் என்னை எமன் முன் கொண்டுபோய் விட்டார்கள். எமன் என்பாவகர்மத்தைத் தெரிந்து, என்னை நரகத்தை பதனம் பண்ணிவைக்கும்படி எமதூதர்களுக்கு உத்திரவு பண்ணினான். அப்படியே எமதூதர்கள் நரகத்திலிருத்தினார்கள் நான் அதில் ஒருவருஷமிருந்து வாதையடைந்

தேன் ஒருவருஷபானபின் நரகம்சொர்க்கலோகம் போலானதுமன்றி இந்தச் சரீரத்தையுமடைந்தேன் அடைந்தவுடன் தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள் அப்போது எமதூதர்கள் என்னருகில்வந்து நமஸ்காரம செய்தெழுந்து அஞ்சலிபந்தத்துடன் நின்று பிரமணோத்தமனே நீ தவசிலனுயினை உன்னை நரகத்தினின்று வெளிப்படுத்தி மரியாதையாகத் தன்னிடமழைத்து வரும்படி எமன் எங்களுக்கு உத்திரவு கொடுத்தார், ஆகையால் வரவேண்டுமென்றார்கள். நானவர்களோடு எமனருகில் வந்தேன். வந்தவுடன் எமன் என்னைக் கண்டெழுந்து அர்க்யபாத்தியம் ஆசமனமுதலான உபசாரத்துடன் நமஸ்காரம் செய்து பிரமணோத்தமனே உன்புத்திரன் தருமசேது உன்னஸ்திகளை யெடுத்துக்கொண்டு சேதுக்குப்போனவன் திருவையாற்றில் 1மாசம் வசித்தான் அங்கவன் வசித்த புண்ணியத்தால் நரகவாதை நீங்கிவிட்டது இனிச் சிவலோகமடைவாயென்று சொல்லியதோடு உன் புத்திரனுக்கு நடந்தயாவும் சொல்ல வேண்டுமென்றான் அதைக்கேட்டு நான் இங்குவந்தேன். நீ சேதுக்குப் போகவேண்டியதில்லை, என்னைச்சிவலோகம் அனுப்பும்போது எமன் தன்தூதர்களை அழைத்து வேறெங்கேயாவது மரித்தவர்கள் தலைமயிராவது, அஸ்தியாவது, அல்லது சாம்பலாவது திருவையாற்றில் இரண்டு கடிகையளவு தங்குமாயின் அவர்கள் சிவலோகபதவியை அடைவார்கள் அவர்களிடத்தில் நீங்கள் போகக்கூடாது என்று உத்திரவு தந்தான். பார்வதி ரூபத்தை பெற்றவுன் தாயும் சிவரூபத்தை பெற்ற யானும் தேவ விமானத்திலேறிச் சிவலோகம் போகின்றோம். நீ சுகமாக வாழக்கடவாயென்றதை யுணர்ந்துதருமசேது நித்திரை தெளிந்தெழுந்து ஆச்சரியமடைந்துகாவேரிக்குப்போய் ஸ்நானம் பண்ணி நித்தியகருமங்களை முடித்து சிவாலயமடைந்து, சிவதரிசனம் செய்து அங்கெழுந்தருளியிருக்கின்ற துர்வாசர் கௌதமர் சதானந்தர் வசிஷ்டர் அத்திரி வியாசர் சுகர் பராசுரர் கண்ணுவர் மேதா திதி சதகு விசுவாமித்திரர் பிருகு முதலான மகரிஷிகளைக்கண்டு நமஸ்கரித்து தான் இராத்திரி கண்ட சொர்ப்பனத்தைச் சொன்னான்.

அதைக்கேட்ட மகரிஷிகள் ஆச்சரியமடைந்து தன் தாய் தந்தை அஸ்தி பெட்டியைக் கொண்டுவாவென்றார்கள். அவ்வாறே அவன் அஸ்திபெட்டியைக் கொண்டுபோய் மகரிஷிகள்முன்வைத்தான். மகரிஷிகள் அதைத்திறவென்றார்கள். தருமசேது அஸ்திப்பெட்டியைத்திறந்தான். திறந்தவுடன்

மகரிஷிகள் அதைப்பார்க்கும்போது அஸ்திகளெல்லாம் இடது பாகத்தில் பார்வதிதேவியோடு சிவசொரூபமாக இருப்பதைக் கண்டானந்தமடைந்து இருக்குந்தருணத்தில், அவ்வஸ்திகள் பறந்து வெளியில்வந்து, சிவலிங்கத்தில் அக்கியமாயின. பின் தருமசேது பஞ்சநதத்திற்றானே சித்துத்தவஞ்செய்தா னென்று சொல்லிய நாதசன்மாவைநோக்கி, அனவத்தியா தேவி சுவாமி! மகா பாவிகளாகயிருந்தாலும் அவர்கள் மனையாள் அனுமரணத்தால் புண்ணியலோகத்தை அடைகின்றார்களென்று புராணங்களாலும், ஸ்மிருதிகளாலும சொல்லப்படுகின்றன. நாயகனிறந்தபின் பதிவிரதையான மாதர்கள் அக்கினியாரோகணஞ் செய்து, பாபியாகிய தன்பதியைப் புண்ணியலோகமடைவித்துத் தாமுஞ் சுகத்தை அடைவார்களென்று தேவரீராலும் சொல்லக் கேட்டிருக்கின்றேன். பாரதத்தில் மாடப்புறாவின் ஆக்கியானத்தில் ஆண்பறவை இறந்தபின் பெண்பறவை அக்கினியில் அநுமரணமடைந்து அநேக அலங்காரத்தை அடைந்தவளாக தன்புருஷனைச்செய்து, சொர்க்கலோகத்தில் வாசஞ்செய்தா னென்று சொல்லப்பட்டிருக்கிறது. சங்கர் அங்கிரிஸ்முதலான மகரிஷிகளால் அனுமரணஞ்செய்தமாதர்களுக்கு மூன்றரைக் கோடி கற்பகாலந் தன்பர்த்தாவுடன் சொர்க்கத்தில் வசிப்பதுபலனென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆரிதமகரிஷியால், தன்னாயகன் சந்தோஷமடையுங்காலத்தில் தானுஞ்சந்தோஷமடைந்தும், துக்கமடையுங்காலத்தில் தானும் துக்கமடைந்தும், தேசாந்திரம் போகும்காலத்தில் தானழுக்கு வஸ்திரந்தரித்துச் சுகத்தைத்துறந்திருந்தும், மரணமடைந்தால் தானுமரணமடைந்துஞ் சுகத்தையடைகின்றார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவைகளுக்கு விரோதமாக தருநாசன் மனையாளனுமரணமடைந்திருந்தும், தருமநாசனொரு வருஷம் நரகத்தையடைந்தானென்று சொல்லியதென்ன காரணமென்றுகேட்க, நாதசன்மா பெண்ணே! தருமநாசன் துராசாரனும், வேசைமார்களைப்புணர்ந்து அவர்களுடன் ஏக பாத்திரத்திலுண்டவனும், சந்தியாவந்தனம் காயத்திரிஜபம் விட்டவனும், பிராமணனைக் கொன்றவனும், ஏழைபிராமணன் வீட்டில் கொள்ளையடித்தவனும், பிறருடைய விளைநிலங்களையும் மனையாளையும் அபகரித்தவனுமாதலால் அனேகங்கோடி காலநரகத்தை யனுபவிக்கவேண்டியவன்மனையாளால் அனுமரணத்தால் ஓர்வருஷம் நரகத்தையனுபவித்துச் சிவலோகத்தை அடைந்தானென்று சொன்னார்.

24-வது அத்தியாயம் முற்றிற்று.

## 25-வது கழுதை நாய் மான் முள்ளம்பன்றி யுத்தமஜன்மத்தை அடைந்த அத்தியாயம்.

ததீசிமகரிஷியானவர் கந்தமாதனபருவத்திலிருந்து புறப்பட்டுத் தனுஷ்கோடிக்குப்போய் ஸ்நானஞ்செய்து, இராமலிங்கத்தைத் தெரிசித்துப் பஞ்சநதீசுவரரைத் தெரிசிக்க மிகுந்த விருப்பத்துடன் வருங்காலையில் தங்கள் தங்கள் குறையைச்சொல்லிக்கொண்டுகின்ற கழுதை, நாய் மான், முள்ளம்பன்றியைக்கண்டு நீங்கள் மானிடர்போற் பேசிக்கொண்டிருக்கின்ற காரணம் யாதென்று கேட்டார். கழுதை மகரிஷியின் எதிர்வந்து, ஐயா! நான்காசிபகோத்திரத்திற் பிறந்து, வேதாத்தியயனஞ்செய்த பிராமணன் குரு மனைவியோடு புணர்ந்த பாபசேஷத்தால் நாய்ச்சென்மமும், அக்காலத்தில் விபூதிதரித்திருந்த புண்ணியத்தால் மானிட அறிவு உண்டானதென்று சொல்லிநின்றது மான் மகரிஷியினெதிர்வந்து ஐயா! நான் கௌண்டினிய கோத்திரத்திற் பிறந்து புண்டரனென்னும் பெயர்பெற்ற பிராமணன், பதிதப்பிராமணனுக்கு வேதாத்தியனஞ் செய்துவைத்தபாவத்தால் மான்சென்மமும், அக்காலத்தில் நல்லறிவுடன் ஞானத்தைப் போதித்தமையால் மானிடவறிவு உண்டானதென்று சொல்லிநின்றது.

முள்ளம்பன்றி மகரிஷியினெதிர் வந்து ஐயா! நான் தாய் தந்தைகளையடித்த பாபசேஷத்தால் முள்ளம்பன்றிச்சென்மமும், அக்காலத்திற் சத்கருமங்கள் செய்தமையால் மானிட அறிவு உண்டானதென்று சொல்லிநின்றது.

அதைக்கேட்டு ஆச்சரியமடைந்து நின்ற ததீசிமுனிவர் காலில் நான்கு மிருகங்களும் விழுந்து நமஸ்கரித்து, எங்களை யுத்தமஜென்மமடையும்படி இரக்ஷித்தருள வேண்டுமென்றன. ததீசி முனிவர் அவைகளைநோக்கி நீங்களென்னுடன் பஞ்சநதக்ஷேத்திரமடைந்தால் உங்கள் பாபம் விமோசனமாகுமென்று சொல்லித் தன்னுடனழைத்துக்கொண்டு பஞ்நதமடைந்து அந்நான்குமிருகங்களுடன் தானுங் காவேரிஸ்நானஞ்செய்து மாவுரிதரித்து, விபூதிதரித்து உருத்திராக்ஷம்பரித்து, அவைகளை ஆலயத்தின் வெளியினிறுத்தி தான் ஆலயத்தினுட்சென்று பிரதக்ஷணம்வந்து, நந்தி சங்கரர் பக்தியில் நமஸ்கரித்துப் பரமசிவனருகிற்சென்றார். அப்பொழுது பரமசிவனுக்கபிஷேககாலமாகையால் வேதபாராயணஞ் செய்துநின்று

மீவதனுதிகளானபின் உபநிஷதவாக்கியத்தாற் ஸோத்திரம் பண்ணினர். அப்பொழுது பரமசிவன் பிரசன்னமாகித் ததீசி முனிவரே! உமதிஷ்டத்தைத் தெரிவியுமென்றார். ததீசி முனிவர் பரமசிவனை வணங்கினின்று சுவாமி! யென்னுடன் வந்திக்கின்றமிருகங்களை யிரக்ஷித்தருளவெண்டுமென்றார் பரமசிவன் ததீசிமுனிவரே! யெமதுபாததீர்த்தத்தால் மிருகங்களின் சரீரத்தை நனைத்தால் திவ்விய தேகமுண்டாகுமென்றுசொல்லி மறைந்தருளினர். உடனே ததீசிமுனிவர் ஓர்கடத்திற் பாததீர்த்தத்தைக்கொண்டுபோய்க் கோபுரவாயிலிக்கு வெளியினின்ற மிருகங்களின் சரீரத்தை நனைததார். நனைத்தவுடன் திவ்வியதேகத்தையடைந்து, யாவரும் பார்க்கும்படி விமானத்திலேறித் தேவலோக மடைந்து, ஓர் கற்பகாலம்வரையில் இந்திரனாற்பூசிக்கப்பட்டங்கு வசித்தார்கள். இழிந்தசென்மத்தையுடைய மிருகங்களும் பஞ்சநதமனடைந்தமாத்திரத்தில் புண்ணியஉலகத்தை அடையுமானல் உயர்ந்த பிறவியடைந்து நல்லறிவுடன் பஞ்சநதத்தில் விசிப்பவர்களடையும்பயனை நான் சொல்லுவது யாது. இழிந்தபிறவி பிறக்கினும் பஞ்சநதத்திற் பிறக்கவேண்டுமென்று சொன்னர்.

25-வது அத்தியாயம் முற்றிற்று.

## 26-வது ஜைகிஷவ்வியசந்நியாசியுடன் தேவலர் பஞ்சநதமடைந்த அத்தியாயம்.

மனோவாக்குக் காயங்களாற் பிறர்க்குத் துன்பமில்லாதவரும், வருணாச்சிரமம் ஆசாரமுதலானவைகளைப்பாலனஞ் செய்பவரும், சிவபூஜாதுரந்தரரும தருமசிந்தனையுடையவருமான தேவலனெனமோர் பிராமணனிருந்தார். அவருடைய ஆச்சிரமத்தில் ஜைகிஷவ்வியரென்னுமமோர் சந்நியாசிவந்தார். வந்தவரைத் தேவலர்கண்டு வந்தனத்துடனுபாரஞ்செய்து, எப்பொழுதுமென்னுடைய ஆச்சிரமத்தில்வசித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். அவரதற்குசைந்தவ்விடத்தில் வசித்தார். தேவலரவருக்கு வேண்டியவைகளைக் குறைவின்றி நடத்தியவரை விட்டு நீங்காதிருந்தார். இவ்வாறு நிகழுநாள்களி லோர்நாள் ஜைகிஷவ்வியருக்குத் தெரிவித்துக்கொள்ளாமற் சமுத்திரஸ்நாநத்திற்குப்போய் ஸ்நானஞ்செய்து, நித்திய கருமங்களை முடி

த்துக்கொண்டு, கண்ணைவிழித்தெதிராகப்பார்த்தார். பார்த்தகாலையில் ஜைகிஷவ்வியசந்நியாசிகளெதிராகவந்தார். அவரைக் கண்டு வியப்படைந்து தன்னாச்சிரமத்திற்கு வந்தார், வந்தவர் தனக்குமுன்னாக ஆச்சிரமத்தில் வந்திருந்த சந்நியாசியைக் கண்டு இவர்மிகப்பெரியாரென் றெண்ணியவரைப் பரீக்ஷை செய்வதற் ஆகாயத்திற் பறந்தார். அங்குந் தனக்குமுன்னாகச் சந்நியாசியைக்கண்டு, ஆச்சரியமடைந்து பினசூரியாதி யுலகங்களிற்போனார். அங்குந்தனக்கு முன்னாகச் சந்நியாசியைக் கண்டு ஆச்சரியமடைந்துநின்றார். அப்பொழுது சந்நியாசி யோகமாயையால் மறைந்தார. உடனே தேவலர் சித்தர்களை நோக்கிச் சித்தர்களே! ஜைகிஷவ்வியர்போனவிடந் தெரிவிக்க வேண்டுமென்றார். சித்தர்கள் தேவலரே! ஜைகிஷவ்வியர் தனது யோகப்பிரபாவத்தாற் கருமகெதியாலடையக்கூடாத பிரமலோகத்திற்குப் போயிருக்கிறார். உம்முடைய கருமகெதியால் இந்தயுலக பரியந்தந்தானடையக்கூடும், பிரமலோகம் அடையக்கூடாது நீர் உம்முடைய ஆசிரமத்தை யடையலாமென்றார்கள். அதைக்கேட்டு தன் ஆசிரமத்தை யடைந்தார். அடைந்தவர் தனக்கு முன்னாக வந்து யோகத்திலிருந்த சந்நியாசியைக் கண்டு நமஸ்கரித்தெழுந்து நின்று சுவாமி! சிற்றறிவையுடைய யான் தேவரீரை பரீக்ஷை செய்ததை திருவுள்ளங்கொள்ளாது செனனமாகிய சாகரத்திற் காமமென்கிற மீனாலும் தாபத்திரயமென்கின்ற முதலையாலும், விஷமென்கிற அலைகளாலும், சோகமோகமென்கிற பாம்புகளாலும், குரோதமென்கிற சுழல்களாலும், வாதையடைந்து மூழ்கிக்கிடக்கின்ற அடியேனை ஆத்மஞானோபதேசம் என்கிற தெப்பத்தினால் கரையேற்ற வேண்டுமென்றார். ஜைகிஷவ்யர் அந்தவார்த்தையைக் கேட்டு தேவலரே! மனதையும நேத்திரத்தையும் அடைந்த அஞ்ஞான திமிரத்தைச் சிவஞானமென்கிற அஞ்சனஆசையால் ஒதுக்கவேண்டும். சிவஞான ஆசையாலாவது ஜப்பியேசுவரரைத் தியானிப்பதாலும் நமஸ்கரிப்பதாலும் ஸ்தோத்திரஞ்செய்வதாலும் பிரதக்ஷண நமஸ்காரம் செய்வதாலும, தெரிசனம் செய்வதாலும், பஞ்சநதத்தில் வசிப்பதாலும், காவேரிஸ்நானத்திலும், சர்ச்சங்கத்தாலுமுண்டாவது, சர்வம் ஜெப்பியேசுவரரென்கிற ஞானந்தான் தவசு சித்தி தனம் இந்த ரகசியத்தை அறிந்தவன்றான் ஞானி, ஞானத்தை அடைவதற்கு துக்கமாகிய சம்சாரத்தை நீக்குவது அவசியம் ஆத்தும பின்னங்களிலாத்தும ஞானமுண்டாவது சம்சாரமூலம அதைபேதிப்பதாகிய ஆத்மாவில் ஆத்மஞானமுண்டாவது மோக்ஷம், சிவனுக்கும் ஆத்மாவுக்கும் பேதமுண்டாவது ஞானம், பரத்துவமாயிருக்கிற பஞ்ச

நதீசுவரனைச் சத்தியஞானானந்த சொருபியாகத் தியானிப்பது மோக்ஷசாதனம், யோகமாகின்ற சுத்தியாற் சம்சார விருக்ஷத்தை சேதித்து ஆத்மாவிலாத்மபுத்தி யுள்ளவன் யோகி. இந்த ஞானயோகத்தை அடைந்தவன் சற்போதமுள்ளவுங் கருமத்தை விடப்படாது, ஏகாந்தத்திலிருந்து தவசு செய்யவேண்டியது தவசு செய்வோன் சுருக்கமான ஆகாரம் காவேரிஸ்நானம், இந்திரிய நிக்கிரகம், நல்லறிவு, ஜப்பியேசுவரிடத்தில் மனோலயத்துடன் ஸோஹம்பாவனை செய்யவேண்டும். இப்பொழுது யாம் சொல்லியவாறு தபசு செய்வோன் ஈச்சுவரன் திருவடியை யடைவது நிச்சயம். இந்தரகசியத்தை யபக்குவர்க்குபதேசிக்கலாகாது. தேவலரே! நீர்பஞ்சநதத்தை யடைந்து தவசு செய்யும் யாமுமங்குவருகின்றோம் நீர் கவலையடையவேண்டாம் என்றுசொன்னார். அதைகேட்ட தேவலர் ஆசாரியருபதேசத்தால் ஆசாபாசம்நீங்கி வயிராக்கியத்தோடு சந்நியாசமடைந்து ஜைகிஷ்வ்வியருடன் திருவையாற்றையடைந்தார்.

26-அத்தியாயம் முற்றிற்று.

## 27-வது தேவலர் தவசுக்கிரமமுரைத்த அத்தியாயம்.

தேவலர் ஜைகிஷவ்வியருடன் பஞ்சநதத்தை யடைந்தபின் காவேரிஸ்நானஞ்செய்து பரமசிவனை தெரிசித்துச் ஜெப்பியேசுரமண்டபத்தில் ஒருகாலால் நின்று பழவர்க்கங்களை யாகாரம் செய்துகொண்டு இந்திரிய நிக்கிரகத்துடன் காமாதிஷ்ட குற்றங்களை நீக்கிச் சிலகாலந்தபசும் சருகுபக்ஷணத்துடன் சிலகாலந்தபசும், ஜலபக்ஷணத்துடன் சிலகாலம் தபசும் வாயுபக்ஷணத்துடன் சிலகாலந்தபசும், பிரஜாபத்தியக்கிரிச்சிரம் அதிக்கிரிச்சிரம், உஷ்ணகாலங்களில் தப்தக்கிரிச்சிரம் சீதகாலத்தில் சீதக்கிரிச்சிரம், சாந்தபனக்கிரிச்சிரம், மகாசாந்தனக்கிரிச்சிரம், அதிசாந்தபனக்கிரிச்சிரம், மகாபாரகம் சவுமியக்கிருச்சிரம் வச்சிரகக்கிருச்சிரம் சாந்திராயணக்கிருச்சிரம் வாருணக்கிருச்சிரம் பர்ணகக்கிருச்சிரம் முதலான தபஞ்செய்துமுடித்துச் சித்தசுத்தியாகும் வரையில் முக்கியபக்ஷத்தாலேயே சரீரசிரமமடைந்து, பிராயச்சித்தத்தாலு நீங்கப்படாத பாவங்களைப்போக்கி முத்திகொடுக்கும் பஞ்சநதத்தில் செய்தார். அக்காலத்திற் பரமசிவன்பிரசன்னமாகிச்சரீரமெலிந்து, வாடியிருந்த தேவலரைப்பார்த்துக் கையாற்றடவினார்,

பரமசிவன் ஸ்பரிசவிசேஷத்தால் வறங்களால் வாடியிருந்த
சரீரம் பருவதம்போல் வலிமையடைந்து, உடனே ஆனந்தத்
துடன் பரமசிவனைநமஸ்கரித்து நின்றார். நின்றவரைபரமசிவன்
பார்த்துத்தேவலரே! இடச்சிரங்களால் மிகச்சிரமமடைந்தீர்
இவ்வாறு தவஞ்செய்தல்மிகவுமரிது, உமதிஷ்டத்தைத்தெரிவியு
மென்றார். தேவலர்சுவாமி சம்சாரவாதைக்குப் பயந்த என்னை
யதினின்று நீக்கிச் ஜைகிஷவ்வியரை இரக்ஷித்ததுபோலென
னையும் இரக்ஷித்தருளவேண்டும். என்குருவாகிய ஜைகிஷவ்
வியர் பிரசாதத்தால் தேவரீரைசரணமடைந்தேன், அவரு
மெனக்குநற்போதமுண்டாகும வரையில் இங்குவசிக்கின்ற
ரென்று சொன்னார். அத்தருணத்தில் ஜைகிஷவ்வியரும் பர
மசிவனை பணிந்து தேவலரை இரக்ஷித்தருளவேண்டுமென்
றார் அதைக்கேட்டு பரமசிவன் தேவலரே ஜைகிஷவ்வியரால்
போதிக்கப்பட்ட தத்துவமெதார்த்தம், அது இப்பொழுது
விளங்கக்கடவதாக. காஷாயமுதலான வேடங்களைநீக்கிக் கிர
கஸ்தாச்ரமத்தையடைந்து, எமதுஸ்தானத்தில் வசித்தவர்
களுக்கு மோக்ஷங்கிடைப்பதற்கையமில்லை. கிரகஸ்தர்களுக்கு
தான் தருமாதிகாரம். இஃதன்றி ஜைகிஷவ்வியருன்னாச்சிரமத்
தில் வசிக்கும் நாள்களிலோர்நாள் நீர்வைசுவதேவபலி பண்ணா
மல் அன்னமிட்டவன்று கிருமியான அன்னத்தைத் தன் தவ
மகிமையால் அமிர்த அன்னமாக்கியுண்டார். ஓர்நாள் வைசுவ
தேவபலி பண்ணாதவன்னம்புழுவாமேல், என்றும் வைசுவ
தேவபலிபண்ணாதவன்னம்யாதாகும் ஆனதால்நீஜைகிஷவ்விய
முனிவரைச்சற்குருவாகவெண்ணிப் பத்திசிரத்தையாகவணா
ங்கக்கடவாயென்று சொல்லி மறைந்தருளினார். உடனே
தேவலர் தன்குருவாகிய ஜைகிஷவ்வியரைவணங்கி, விடை
பெற்றுத் தன் ஆச்சிரமத்தையடைந்து சிலகாலமிருந்து
முத்தியடைந்தார்.

27-வது அத்தியாயம் முற்றிற்று.

28-வது அவிஷிதாசாரன் மூன்ற மகா பாவி அத்தியாயம

பூர்வத்தில் ... பிராமணனுக்கு ...தை அபகரித்து, விடர்,
யொருவனிருந்தான்.
கெடுதிவிளைவித்து

நடர், சாயகர், மூர்க்கர்முதலானபாவிகளுக்குக் கொடுத்துவந்
தான். இப்படிப்பட்டபாவத்தாற் பிரமராக்ஷஸனால் பிடிக்கப்
பட்டு வெகுவாதையடைந்தான். அவன்பிதா காலவரென்பர்
புத்திரவாஞ்சையால் மிகுந்த துக்கத்தையடைந்து,
வசிஷ்டமுனிவர் ஆசிரமம் போய் வசிஷ்ட
மகரிஷியைக்கண்டு நமஸ்கரித்துத் தன்புத்திரனடையுந்துன்
பத்தைத்தெரிவித்தார் அதைக்கேட்ட வசிட்டமுனிவர்
அநேகநாள் யோசித்துக் காலவரைநோக்கி காலவரே! பிர்ம
விஷ்ணுவாதி தேவர்களால் நித்தியம் தெரிசிக்கப்பட்டதும்
அனேக விரதத்தர்களாற் றவசித்தடைந்ததும், சர்வோ
பத்திரவநிவர்த்தியின் பொருட்டுச் சங்கரனிற்மிக்கப்பட்ட
தும், அற்பதானததால் மகாதானபலத்தை கொடுக்கப்பட்ட
தும், தெரிசனத்தளவில் புத்தி முத்தியளிக்கப்பட்டதும்,
மஹா பாவங்களை நீக்கப்பட்டதுமான பஞ்சனஸ்தலத்தை
யடைந்து மார்கழிமாதத்தில் ஆருத்ராநக்ஷத்திரத்தில் உதய
காலத்திற் காவேரிஸ்நானஞ்செய்து, பிரணதார்த்திகரரையும்
தருமாம்பாளையுந் தெரிசித்தாற் பிர்மராக்ஷசு நீங்கிவிடும்.
ஆகையால் நீர் உமமுடைய புத்திரனோடு பஞ்சநதத்தைய
டையுமென்றுத்தரவுகொடுத்தார். காலவர் வசிட்டமுனிவரை
நமஸ்கரித்துத் தன்கிரகம்வந்து, புத்திரனோடுதிருவையாற்றை
அடைந்து மார்கழிமாதம் ஆருத்ரா நக்ஷத்திரத்திற் காவேரி
ஸ்நானஞ்செய்து தருமாம்பாளோடு பிரணதார்த்திகரரைத்
தெரிசனஞ்செய்யுங்காலத்திற் பிர்மராக்ஷசக்கிரகநீங்கிவிட்டது
அதன்பின் நெடுங்காலம் பஞ்சநதத்திற்றானே வசித்து மர
ணமாகி முத்தியடைந்தான்.

28-வது அத்தியாம் முற்றிற்று.

## 29-வது துர்ப்பகன் முத்தியடைந்த அத்தியாயம்.

பூர்வத்திற் தருமதூஷகனும், வேசியர் நட்புடைய
வனும், பிராமணர் திரவியத்தைக் கொள்ளையடித்தவனும்,
சுராபானஞ்செய்தவனும், நித்திய கர்மாநுஷ்டானத்தை
விட்டவனும், தாய்தந்தையர்வார்த்தை கேளாதவனுமான
துர்ப்பகனென்னுமோர் பிராமணனிருந்தான. அவன் மகர
சங்கிராந்தி புண்ணியகாலத்தில் காவேரி ஸ்நானத்திற்குப்போன
ஜனங்களுடன் சேர்ந்து பஞ்சநதமடைந்து காவேரிஸ்நானஞ்
செய்து பிரணதார்த்திகரரைத் தெரிசித்து, வெளிவீதியில

வந்து நடந்துவந்த சிரமத்தாலோர் மரத்தடியில் நித்திரை செய்தான் அக்காலத்தில் நித்திரைசெய்த தூர்ப்பகன் தலையில் பெருமழையுடன் இடிவிழுந்து மரணமடைந்தான். மரணமடைந்த தூர்ப்பகன்சரீரத்திலிருந்து ஓர் ஜோதிகிளம்பித் திருக்கோயிலையடைந்து, பரமசிவனுடன் கலந்தது. இறந்து பூமியிற்கிடந்த சரீரம் திரிநேத்திரம் நான்குபுயம் மான் மழு சூலம் உடுக்கையுடன் சந்திரசேகரனுகவெழுந்து திருக்கோயிலையடைந்து, துவாரபாலகனுயினது, ஆகையால் மகரசங்கராந்தியிற்பஞ்சநதகாவேரிஸ்நாநஞ் செய்தவர்கள் சமஸ்ததோஷங்களும் நிவர்த்தியாகிச் சிவலோகமடைவது சத்தியம்.

29-வது அத்தியாயம் முற்றிற்று.

## 30-வது ஆசாரவிகலன் முத்தியடைந்த அத்தியாயம்.

கௌசிககோத்திரத்திற்பிறந்தவனும், உபநயனகாலமுதற் பிரமசரியவாச்சிரமத்திற்கு யோக்கியமாகிய ஆசாரம் தண்டம் எக்ஞோபவீதம் கிருஷ்ணாசனம் சௌசம் மூஞ்சை வெண்மைவஸ்திரம் பிச்சாசரணம திரிகால சந்தியாவந்தனம்முதலானவைகளை விட்டவனும், பெரியோர் தாய் தந்தைகளை வணங்காதவனும், ஈசுவராராதனஞ் செய்யாதவனுமான ஆசாரவிகலனென்னுமோர் பிராமணனிருந்தான். அவன் இல்லற தருமங்களுக்குரிய விவாகஞ் செய்துகொள்ளாமல் தாய்தந்தைகளால் நீக்கப்பட்டு வேசியருடன் கலந்து மதுபானஞ்செய்து, தூர்த்தரைச் சினேகித்துப் பிறர்திரவியத்தைக் கொள்ளையடித்துத் திரிந்தான் அந்தசமாச்சாரத்தை அரசனறிந்து தன்தேசத்தைவிட்டுத் துறத்திவிட்டான். அதன்பின் ஆசாரவிகலன் அன்னியதேசங்களில் நெடுங்காலம் திருடித்திரிந்து கடைசியாகப் பஞ்சநதம்வந்து, டம்பமாகத்திரிகின்ற தூர்த்தர்களோடு வேசைமாதர்களைச் சேர்த்துக்கொண்டு மகரசங்கராந்திப் புண்ணியகாலத்திற் காவேரியில் ஜலக்கிரீடைசெய்து, முழுகி விளையாடிக் கரையேறி நிர்த்தகிதாவாத்தியத்துடன் மண்டபத்திலெழுந்தருளியிருந்த பரமசிவனைத்தெரிசித்து, நடசாயகர்களோடுவெளிவீதியில்வந்து ஓர் திண்ணையில் படுத்துநித்திரைசெய்தான். அப்பொழுதவனுக்குமரணகாலம்சம்பவித்ததால் பரமசிவன் அருகிலெழுந்தருளி பிரணவத்துடன் பஞ்சாக்ஷர மந்திரத்தை வலதுசெவியி

அபதேசித்தருளினர். உபதேசித்தவுடன் மாணமடைந்து ஈசுவரனோடைக்கியமாயினன். ஆதலாற்பக்தியில்லாமல் மகாசங்கராந்தியிற் காவேரிஸ்நானம்பண்ணி பரமசிவனைத் தெரிசித்தவர்களுஞ் சிவலோகமடைவது சத்தியம்.

30-வது அத்தியாயம் முற்றிற்று.

## 31-வது வேதப்பிரியர் மோக்ஷமடைந்த அத்தியாயம்.

பூர்வத்திற் கருமங்களிற்சிரத்தையுடையவரும், சாந்தமனதையுடையவரும், வேதவேதாங்கபாரங்கதரும்சுருதி ஸ்மிருதி புராண இதிகாச தர்மசாஸ்திரங்களிற் சொல்லிய வருணாச்சிரம பரிபாலகரும், சர்வஜீவனிடத்திலும் தயவுள்ளவரும், மித்துரு சத்துருவைச் சமமாக எண்ணப்பட்டவரும், மானவமானத்திலும், லாபாலாபத்திலும், சுகதுக்கத்திலும், சமபார்வையுடையவரும், இந்திரிய நிக்கிரகருமான வேதப்பிரியரென்னுமோர் பிராமணனிருந்தார் அவரினித்தனக்கு வரும்ஜென்மம்எவ்வளவினதோ? அதைநம்முடைய புத்தியாலறியப்படவில்லையேயென்று மிகுந்த துக்கத்தையுடையவராய்ச் சிவஸ்தலங்களைத்தெரிசித்தும், புண்ணியநதிகளில் மூழ்கியுஞ்சஞ்சரித்து வருங்காலத்திற் சிலமகரிஷிகளைக்கண்டு, ஐயாமகரிஷிகளே! யென்செனனமரணமெப்பொழுதுநீங்குமென்றுகேட்கஅவர்கள்விசுவேசுவரரன்றி வேறொருவரும் சொல்லச் சாத்தியப்படாதென்று சொன்னார்கள். அதைக்கேட்டு மிகுந்த துக்கமுடையவராய்ப் பஞ்சநதமடைந்து, காவேரியிற் சங்கரப்பபூர்வமாக ஸ்நானஞ்செய்து, செம்பொற் சோதியாரைத்தெரிசித்து, அங்குவசிக்கின்ற தூர்வாசர்முதலான மகரிஷிகளைக்கண்டு தன்கருமத்தைத் தெரிவித்தார். அதற்கவர்கள் வேதப்பிரியரே! பரமசிவனன்றி வேறொருவருமறியமாட்டார்கள். நீர் இந்தஸ்தலத்திலிருந்து அவரையுத்தேசித்துத் தவஞ்செய்தாற் பரமசிவன் பிரசன்னமாகி தெரிவிப்பாரென்றார்கள்.

அவ்வாறே வேதப்பிரியர் தவஞ்செய்தார். அப்பொழுது பரமசிவன் பிரசன்னமாக வேதப்பிரியர்கண்டு, நமஸ்கரித்தெழுந்து நின்றுஸ்தோத்திரம்பண்ணினர். பரமசிவன் வேதப்பிரியரே உம்முடைய அரியதவத்திற்கானந்தமடைந்தோம், உம்முடைய

இஷ்டத்தைத்தெரிவியுமென்றார். வேதப்பிரியர் சுவாமி தயாமூர்த்தியே! இனியெனக்குவரும்சென்மங்களெத்தனை யிருக்கின்றன, அவைவெப்பொழுது நிவர்த்தியாகுமென்று கேட்கப்! பரமசிவன் வேதப்பிரியரே! உமக்குஇன்னும்நூறுசென்மமிருக்கின்றதென்றுசொல்ல, வேதப்பிரியர் மனநடுங்கிச்சுவாமி! இந்த சென்மத்தையே கடைசியாகவைத்து எனக்கநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று நமஸ்கரித்தார். பரமசிவன் தாரகமந்திரமாகிய பிரணவத்துடன் பஞ்சாக்ஷரமந்திரத்தை உபதேசித்து மறைந்தருளினர். அதன்பின்வேதப்பிரியர் அம்மந்திரத்தை அனேக நாள் ஜெபித்து மரணமடைந்து முத்தியடைந்தார்.

31-வது அத்தியாயம் முற்றிற்று.

## 32-வது நாஸ்திகப்பிராமணன் முத்தியடைந்த அத்தியாயம்.

பூர்வத்தில்நாஸ்திகனென்னுமோர் பிராமணனிருந்தான் அவன் வேதம் வேதாங்கம் இதிகாசம் புராணம் தருமசாஸ்திரங்களைப் பொய்யென்று சொல்லிப் பெரியோர்களை நிந்தித்தான். அவன்மரணமாகி நரகவாதையடைந்து பாபசேஷத்தால் மாமரமாக பஞ்சநதக்ஷேத்திரத்தில் வெளிவீதியில் முளைத்து தழைத்திருந்தான். அப்பொழுது, சங்கரனென்னுமோர் பிராமணோத்தமர் அனேக தீர்த்தயாத்திரைசெய்து பஞ்சநதத்தையடைந்து, வழிநடந்துவந்தசிரமத்தால் முன்சொல்லியமாமரத்தினிழலினுள்வந்துபடுத்துக்கொண்டார். அத்தருணத்திலொரு குரங்கு மாமரத்தின் கிளையையசைக்க அதிலிருந்தொருபழம் நித்திரைசெய்த சங்கரப்பிராமணன் மார்பில் விழுந்தது. விழுந்தவுடன் சங்கரப்பிராமணன் விழித்து, அந்தப்பழத்தையெடுத்துத்தின்று பசிநீங்கிக் காவேரிஸ்நானஞ்செய்து, திருக்கோயிலையடைந்து, செம்பொற் சோதியாரைத்தெரிசித்து சிலகாலம் பஞ்சநதத்தில் வசித்து மரணமடைந்து சிவலோகம்பெற்றனர். நாஸ்திகப்பிராமணன் பஞ்சநதத்தில் மாமரமாகமுளைத்தாலும், உத்தமராகிய சங்கரப்பிராமணன் பழத்தைப்புசித்தாலும், சகலபாவங்களுநீங்கிக் சிவலோகமடைந்தான். குரங்குஞ் சிவலோகமடைந்தது.

32-வது அத்தியாயம் முற்றிற்று.

## 33-வது விஜயச்சத்திர ராஜன் மோக்ஷமடைந்த அத்தியாயம்.

பூர்வத்தில் இமோர்க்கிரிபருவதச்சாரலில் அரசாக்ஷி செய்த விஜயச்சத்திரனென்னும் யவனராஜன் பரமசிவனைக் குறித்து தவஞ்செய்து யாவராலுந்தான் மரணமடையாதவரத்தைப்பெற்று,எல்லாஉலகங்களையுஞ்செயிக்கவுத்தேசித்துப்பதின்மூன்றுகோடியக் குரோணிசேனையுடன் புறப்பட்டு, அயோத்தி வடமதுரை துவாரகை அஸ்தினபுரி காஞ்சிபுரமுதலான தேசங்களைப்பிடித்துக்கொண்டு பஞ்சநதத்தை அடைந்தான். அவனைக்கண்டு தூர்வாசர்முதலானமற்றரிஷிகளும் பயந்து, பிரணதார்த்தி ஹரரைநோக்கிமுறையிட்டார்கள். அப்பொழுது பரமசிவனனவர், விநாயகர் சுப்பிரமணியர் நந்திகேஸ்வரர் சத்தமாதர்கள் பிருங்கி பைரவர் சண்டிசேஸ்வரர் முதலான சிவகணங்களையுத்தத்திற்கனுப்பினர். அவர்கள்வந்து யவனராஜன் படையுடன்கலந்து யுத்தஞ்செய்யுங்காலத்தில் விஜயச்சத்திரன் அதிகோபங்கொண்டு தன்சேனையையும்யுத்தம்செய்யும்படி உத்தரவு கொடுக்க அவர்கள்யுத்தம்பண்ணும் பொழுது விநாயகர் ஒரு கோடி சேனையைமடித்தார் சுப்பிரமணியர் தன்கையிலிருகின்ற சத்திவேலால் இரண்டுகோடிசேனையை மடித்தார் பைரவர் மூன்றுகோடி சேனையை மடித்தார் நந்திகேஸ்வரர் நாலுகோடி சேனைகளை மடித்தார் பாக்கிநாலுகோடிசேனைகளை சத்தமாதர் பிருங்கி, நந்திகேஸ்வரர், வீரபத்திரர் இவர்கள் திக்குதோறும் ஓடி ஒளியும்படி அடித்தார்கள். அத் தருணத்தில் விஜயச்சத்திரன் மிகுந்த கோபத்துடன் இவர்கள் முன் வந்து எதிர்த்தான். எதிர்த்தவனை விநாயகர் துதிக்கையால் பிடித்து பூமியிற் போட்டுத் தேய்த்துக்கொன்றார். அந்த யுத்தத்தில் இறந்த சேனைகளும் அரசனும் புண்ணிய க்ஷேத்திரமாகிய திருவையாற்றில் இருந்தமையால் சிவசாரூபியத்தைப்பெற்றுச் சிவலோகமடைந்தார்கள்.

33-வது அத்தியாயம் முற்றிற்று.

## 34-வது சத்தியவான் தீர்க்காயுள் பெற்ற அத்தியாயம்.

புண்ணியகீர்த்தி என்னும் பிருமணன் சுசீலை என்னும் மனையாளோடு பஞ்சநதத்தில் வசித்து இல்லறம் நடத்திவருங்

காலத்தில் அவர்மனையாளோர் ஆண் குழந்தையையும் ஓர் பெண் குழந்தையையும் பெற்றனள் ஆண் குழந்தைக்கு சத்தியவான் என்றும் பெண்குழந்தைக்கு சுந்திராகிருதி யென்றும் பெயர்வைத்துச் சிலகாலமிருந்து மரணமடைந்து சிவலோகத்தை பெற்றனர். சத்தியவான் அவருக்குச் செய்யவேண்டிய உத்தரக்கிரியைகளை முடித்துத் தன் தாய் தங்கையுடனிருந்து வரும் நாட்களில் சத்தியவானுக்கு இருபது வயதும் அவன் தங்கைக்கு பத்துவயதுமானது. அப்பொழுது கௌதம ரிஷி சத்தியவான் வீட்டில் வந்து ஆதித்தியம் செய்து கொண்டு சுசீலையை நோக்கி யுன் புத்திரனுக்கு முப்பதாவது வயதில் மரணமும் உன் புத்திரிக்கு இருபதாவது வயதில் வைதைவ்வியமும்உண்டாகுதென்று சொல்லிப்போயினர் அவ்வார்த்தையைக்கேட்ட சுசீலை மிகுந்த துக்கமடைந்து ஆகாரமின்றியிருக்கச் சத்தியவானும் சுந்திராகிருதியுந் தன்தாயைப்பார்த்து அம்மா நீயேன் துக்கமடைந்திருக்கிறீர்களென்று கேட்க சுசீலை கௌதமர் சொல்லியதைச் சொன்னாள். அதைச் சத்தியவான் கேட்டு கலக்கமின்றித் தன் தாயைநோக்கி அம்மா! பரமசிவப் பிரசாதத்தால் அற்பாயுளைப்போக்கி தீர்காயுளை நான் அடைவது மின்றி யென் தங்கைக்குண்டாகிய வைதவ்விடத்தையும் நீக்குகிறேன், நீ பயப்படாதே என்று சொல்லி சிவதீக்ஷைசெய்து கொண்டு சிவபூஜையும் சிவத்தியானமும், சிவகதாசிரவணமும் மாதுரு பூஜையும், வருணாச்சிரம விதிப்படி நித்தியகருமானுஷ்டானமும் செய்து ஒருகாலால் நின்று தவஞ் செய்தான். அப்பொழுது பரமசிவன் பிரசன்னமாகி சத்தியவானே! யுன்னரிய தவத்தால் ஆனந்தமடைந்தோம் உன்னபீஷ்டத்தை சொல்வாயென்றார். சத்தியவான் சுவாமி! கௌதமர் என்தாயிடத்தில் எனக்கு முப்பது வயதில் மரணமும், என் தங்கைக்கு 20வயதில் வைதவ்வியமும, என்றாராம். அன்றுமுதலென்தாய் அதிக விசனத்தை அடைந்திருந்தாள். அதை நான் தெரிந்து என் மரணத்தையும் என்தங்கை வைதவ்வியத்தையும் பரமசிவப்பிரசாதத்தால் போக்குகிறேனென்று சொன்னேன். அவ்வாறே தேவரீர் பாலித்தருளவேண்டுமென்றான். அப்பொழுது பரமசிவன் தருமராஜனை நினைத்தார் உடனே எமன்வந்து பரமசிவனை வணங்கி சுவாமி! அடியேனை நினைத்தகாரியம் இன்னதென்று திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்றான். பரமசிவன் எமனே! சத்தியவானுக்கு முப்பதாவது வயதிலுண்டாகுமரணத்தையும், அவன் றங்கைக்கிருபதுவயதிலுண்டாகும்வைதவ்யத்தையும் நீக்கியிருக்கிறோம் இதைநீ அறியக்கடவாயென்றார்எமன்சுவாமிதெ

ந்துகொண்டேனென்று தன்னுலகத்தையடைந்தான். அதன்பின் பரமசிவன் சத்தியவானுக்கநுக்கிரகஞ்செய்து மறைந்தருளினர். சத்தியவான் பரமசிவன் அநுக்கிரகஞ்செய்ததைத் தன்றாய்க்குத் தெரிவித்துத் தானுந், தங்கையும் பஞ்சநதத்திற்சுகமாக வசித்தார்கள்.

34-வது அத்தியாயம் முற்றிற்று,

## 35-வது மந்தமதி முத்தியடைந்த அத்தியாயம்.

மந்தமதியென்னுமோர் காமுக பிராமணனிருந்தான். அவன்சில வேசைமாதர்களுடன் பஞ்சநதம்வந்து அர்த்தராத்திரியில் திருடவேண்டுமென்றுவீடுவீடாகநுழைந்தான் ஒவ்வொரு வீட்டிலுஞ் ஜனங்கள் விழித்துக்கொண்டிருந்தமையால் திருட்டகப்படாமல் மூன்றுசாமநேரம் கண்விழித்திருந்து நாலாவது சாமம் திருக்கோயிலினுள்வந்தான். அவ்விடத்திலோர்வணிகன் அநேக ஆபரணங்களைந் தரித்துக்கொண்டு சிவார்ச்சனையோடு சிவதெரிசனஞ்செய்து வீட்டிற்குபோகுங்காலையில் மந்தமதி பின்தொடர்ந்து தடியாலடித்து ஆபாணங்களை அபகரித்தான் அப்பொழுது அவ்வணிகன் பெருங்கூச்சலிட்டதை இராஜ சேவகர்கள் கேட்டு ஓடிவந்து தடயத்துடன் பிடித்துக்கயிற்றாலிறுகக்கட்டிச் சிவாலயத்திற் சிவபூஜை செய்துகொண்டிருந்த அரசன் முன் கொண்டுபோய்விடுத்தார்கள் அரசன் தருமசிந்தையையுடையவனாதலாலும், சிவபூஜாசமயமானதாலும் அவனைத் தண்டிக்காமல், ஆபரணங்களை மாத்திரம்வாங்கி வணிகனிடத்திற்கொடுத்து மந்தமதியை விட்டுவிட்டான், அன்றுசிவராத்திரி புண்ணியகாலமாகையால் மந்தமதி இராத்திரிமுழுவதுங் கண்விழித்துச் சிவதெரிசனஞ்செய்தமையால் மரணமடைந்து கைவல்லிய பதத்தைப்பெற்றான், ஆகையால் சிவராத்திரி புண்ணியகாலத்திற் போஜனத்தோடு நித்திரையுல்லாமல் பத்திசிரத்தையுடன் காவேரியிற்றிரிகாலஸ்நானஞ் செய்து இராத்திரிநாலுகாலமும் வில்வமுதலான பத்திர புஷ்பங்களாற் சிவார்ச்சனைபண்ணித் திருக்கோயிலுக்குச்சென்று திருவிளக்கிட்டு, தருமாம்பிகையோடு செம்பொற்சோதியாரைத் தெரிசித்துப் பிரணவத்துடன் பஞ்சாக்ஷர மந்திரஞ் செபித்து வேதபாராயணஞ்செய்து சூரியோதயத்திற்குமுன் காவேரியில் மூழ்கிவீட்டிற்குவந்து சற்பிராமணருக் கன்னதானஞ்செய்து

பின் பாரணைமுடித்துச் சிவகதாசிரவணஞ் செய்தவர்கள், சென்ற சென்மங்களிற் செய்திருந்த பாவங்களெல்லாம்நீங்கிச் சிவலோகமடைவது சத்தியம்.

35-வது அத்தியாயம் முற்றிற்று.

## 36-வது மதுவென்னும் சூத்திரன் முத்தியடைந்த அத்தியாயம்.

முன்னோர்காலத்தில் கோஹத்திபிரமஹத்திசெய்தவனும், தருமசூனியனும், கோட்சொல்லினவனும், தேவத்திரவியம் பிராமணத்திரவியந்திருடினவனும், கட்குடியனுமான மதுவென்னு சூத்திரனிருந்தான். அவன்றன்பந்துக்களால் நீக்கப்பட்டு அநேகதேசங்களிற் சஞ்சரித்து, மாசிமாதம்கிருஷ்ணபக்ஷம் சதுர்தசித்தினமாகிய சிவராத்திரி புண்ணியகாலத்தில் வேசைமாதர்களுடன் கள்ளுண்டு, பஞ்சநதமடைந்து, திருக்கோயிலினுள் வந்து கட்குடி மயக்கத்தாற் சந்நிதியினின்று விடியுமளவும் நிர்த்தனஞ்செய்து கட்குடி மயக்கம் தெளிந்து கிழேவிழுந்து மரணமூர்ச்சையடைந்தான். அப்பொழுது பரமசிவன் தாரகாமந்திரத்துடன் பஞ்சாக்ஷர மந்திரத்தை வலது செவியில் உபதேசிக்க மரணமானான். உடனே சிவகணங்கள் வந்து விமானத்தில் எற்றி கைலாசத்தில் கொண்டு போயிரண்டு கற்பம் வைத்திருந்து வைகுந்தத்திற்கு அனுப்பினார்கள். வைகுந்தத்திலிரண்டு கற்பம் வைத்திருந்து சத்தியலோகத்திற்கனுப்பினார்கள். சத்திய லோகத்திலொருகற்பம் வைத்திருந்து, சொர்க்கலோகத்திற் கனுப்பினார்கள். சொர்க்கலோகத்திலொருகற்பம் வைத்திருந்து பூலோகத்திற் பஞ்சநதத்திற்கனுப்பினார்கள் பஞ்சநதத்தில்வந்து, பூர்வஜன்மநினைவுடன் பிராமணனாகப் பிறந்து, வேதவிருப்பனென்னும் பெயர்பெற்று சகல வேத சாஸ்திரங்களையுங்கற்றுச் சிவசந்நிதியில் நித்தியம் நிர்த்தனஞ் செய்வதுமன்றிச் சிவராத்திரி புண்ணியகாலத்தில் விசேஷ நிர்த்தனஞ்செய்தான். அப்பொழுதவன்தந்தையாகிய குணநிதியென்னும் பிராமணன் புத்திரனைநோக்கி வேத விருப்பனே! சகலதருமங்களுமிருக்க அவைகளைவிட்டு நீ நிர்த்தனம் செய்யவேண்டிய காரணம் யாதென்று கேட்க, வேதவிருப்பன் தந்தையைநோக்கி ஐயா! நான்பூர்வஜன்மத்தில்மதுவென்னும் பெயரையுடைய சூத்திரனாகப்பிறந்து, கட்குடிமயக்கத்தால்

சிவசந்நிதியில் சிவராத்திரி புண்ணியகாலததில் மறுநாள் சூரி யோதயபரியந்தம் நிர்த்தநஞ்செய்து மயக்கந்தெளிந்து கீழே விழுந்து மரணமடைந்தேன். சிவராத்திரி புண்ணியகாலத் தில் சிவசந்நிதியில் நிர்த்தனஞ் செய்த புண்ணியத்தால்கைலா யத்திலிறண்டு கற்பமும் வைகுந்தத்தில்இறண்டு கற்பமும் சத் தியலோகத்தில் ஒருகற்பமும் சொர்க்கலோகத்தில் ஒரு கற் பமும் வசித்துப்பிறகு உமக்குப்புத்திரனாகப் பிறந்து பூர்வ சென்மவாசனையால் நிர்த்தனத்தில் என்மனம் பிரவேசித்து நிர்த்தனம்செய்கின்றே னென்று சொல்லி மரணமடைந்து, சிவலோகம் பெற்றான்.

36-வது அத்தியாயம் முற்றிற்று

---

## 37-வது சிவராத்திரி மகிமை யுரைத்த அத்தியாயம்

மூக்குற்ற நீங்கினவர்களும், சுவையொளியூறு ஓசை நாற்றமென்னு மைந்தின் வகைதெரிந்தவர்களும், வேதவிதி தவறாதவர்களும், சாபால உபநிஷத்திற் சொல்லியவாறு விபூ திருத்திராக்ஷந் தரித்தவர்களும், சிவலிங்கார்ச்சனை உள்ளவர் களும் நித்தியாகர்மானுஷ்டான நெறியுள்ளவர்களுமான தூர் வாசர் கௌதமர் அத்திரி சதாநந்தர் ததீசி வசிஷ்டர் பிருகு குச்சர் காசிபர் ஆங்கிரசுமுதலான மகரிஷிகள் முத்தியடைய வேண்டிய மார்க்கந்தெரிந்துகொள்ள பஞ்சநதக்ஷேத்திரத்தி லிருந்து, பரமசிவனைத் தியானித்துத் தவஞ்செய்தார்கள். அப்பொழுது பரமசிவன் அவாகள் செய்யுந் தவத்திலானந்த மடைந்து, நந்தி பிருங்கிமுதலான சிவகணங்கள்சூழ உமா சமேதராய் ரிஷபத்தின்மேலாரோகணித்துமகரிஷிகளுக்குப் பிரத்தியக்ஷமாக, மகரிஷிகள் தெரிசித்து பிரதக்ஷிணநமஸ்கார ஸ்தோத்திராதிகள் செய்து வாய்பொத்திக்கைகட்டி, நின்று பரமபதியே! நாங்கள் சம்சாரவாதைநீங்கி முத்தியடையு மார்க்கத்தைச் சொல்லியருள வேண்டுமெனப், பரமசிவன் மகரிஷிகளே! மாசிமாத கிருஷ்ணபக்ஷம் சதுர்தசியிரவை. எல்லாவுயிர்களுங் கடைத்தேரும்பொருட்டுச் சிவராத்திரி யென்றெம்மால் நிர்மிக்கப்பட்டிருக்கின்றது. அன்றையத்தின முபவாசமிருந்து, காவேரியில்திரிகாலஸ்நானஞ்செய்து, வில்வ முதலான பத்திரங்களெடுத்து, இராத்திரி நாலுசாமம் பூசை

பண்ணி, நாலாவது சாமத்திற் றிருக்கோயிலையடைந்து, நமது சொரூபமாகிய சிவலிங்கப்பெருமானை மல்லிகை, சண்பக, முதலான வாசனை புஷ்பங்களாலருச்சித்து, நிவேதனங்கள்செய்து, பரமசிவனுக்கும் பிராமணருக்கும் லோபகுணமின்றிச் சொர்ணதானங் கொடுத்து ஊர்த்தவ புண்டரந்தரித்தவர் துலுக்கர், சண்டாளர், சங்கர ஜாதியார், முதலான பாபிகளுடன் வார்த்தைசொல்லாமல் மருநாட்பாரணைசெய்து, விரதத்தை முடித்தவர்கள், நரகவாதை, கெர்ப்பவாதை, முக்கடமை, பஞ்சமகா பாதகம் நீங்கிமுத்தியடைவது சத்தியம். இப்படிக் கில்லாமலன்று போசனஞ்செய்து விரதமில்லா திருந்தவர்கள் மலபோசனஞ்செய்து திரிகின்ற துர்ப்பீஜர்களென்பதற்குச் சந்தேகமில்லை யென்றுசொல்லி மறைந்தருளினர். அதன்பின் மகரிஷிகள் பரமசிவன் சொல்லியவாறே சிவராத்திரிவிரதத்தை முடித்துச் சிவலோகமடைந்தார்கள்.

37-வது அத்தியாயம் முற்றிற்று.

பஞ்சநதமான்மியம்

முற்றிற்று.

# ஸ்ரீ ஜப்பியேச்சுரமான்மியம்

## முதலாவது அத்தியாயம்.

திருமாதுக்கிருப்பிடமும், சிவபிராப்திக்கேகசாதனமும், சகலபாப பிரசமனமும், நிகில காம பலத்தைக் கொடுப்பதும், தெரிசித்தளவில் மோக்ஷத்தைக் கொடுப்பதும் புராதன தேவாசுரர்களாற் பூசிக்கப்பட்ட பரமசிவன், தன்னடியவர்களுக்கு முத்திகொடுக்க எழுந்தருளியதுமான ஜப்பியேசுரத்தில், ஸ்ரீமானும், சிவப்பிரியரும், சர்வஜ்ஞரும், மகாயோகியும், இந்திரிய நிக்கிரகரும், சகல ஜீவர்களிடத்திலு மிரக்கமுள்ளவரும், சமுத்திரத்தையாசமனஞ் செய்தவரும், வேதவேதாந்த புராண இதிகாச தர்மசாஸ்திரமுதலியவைகளை ஐயந்திரிபறவுணர்ந்தவருமான அகஸ்தியமாகமுனிவர் தவஞ்செய்து கொண்டிருந்தார். அப்பொழுது பரமசிவன் பிரசன்னமாக, அகஸ்தியர் அவரைத்தெரிசித்தானந்தத்தினால் அடிக்கடி நமஸ்கரித்து, உபநிஷத்தாற் றோத்திரஞ்செய்து சூரியபுஷ்கரணித்திர்த்தத்தார்பாதத்தை விளக்கி, யத்தீர்த்தத்தில் உண்டான புஷ்பங்களாலர்ச்சித்து, அஞ்சலிபந்தனத்துடனெதிர்நின்று சுவாமி! தேவரீர்திருவடியைத்தவிர வேறொன்றுந் தெரியாதிருக்க வாமனரூபத்தையும், புத்திமுத்தி சாதனமாகவுள்ள பத்தியையும் அடியேனுக் களித்தருளவேண்டுமெனப் பரமசிவன் அகஸ்தியரே! இந்தச் சூரியபுஷ்கரணி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வீரேல் யாவுங்கிடைக்குமென்று சொல்லி, மறைந்தருளினார். அதன்பின் அகஸ்தியர் பரமசிவன் சொல்லியவாறே சூரியபுஷ்பகரணிதீர்த்தத்தில் முழ்கி எழுந்து, தான்கைலாச சிகரத்தினுச்சியிலிருந்ததைக்கண்டுமிருந்த வாச்சரியமடைந்து, பரமசிவனைத்தெரிசித்துச்சுவாமி அடியேனையிரக்ஷித்தருளவேண்டுமென்றார். பரமசிவன்ஜீவன் முத்தித்திசையைக்கொடுத்தருளினார். அப்பெழுதுபரமசிவன் அகஸ்தியருக்கனுக்கிரகஞ்செய்வதைப்பார்க்க முப்பத்துமுக்கோடிதேவர்கள்நார்ப்பத்தெண்ணுயிரமகரிஷிகள்சித்தவித்தியாதராதி சகலருமங்கு வந்திருந்தமையால் வடதிசைதாழ்

ந்து தென்றிசையுயர்ந்தது. அதைப்பரமசிவன் கண்டு, யுகப்பிரளயநேரிடுமென்று யோசித்து, அகஸ்தியரை யருகழைத்துத் தமிழிலக்கணத்தை யுபதேசித்துப், பொதிகைமலைக்குப்போகும்படி கட்டளையிட்டருளினார்.

அவ்வாறே யகஸ்தியர் மலயாசலத்துக்கு வருமார்க்கமத்தியில் அனேகர்க்கிடையூறாக விருந்த விந்தகிரியைப் பூமியிலழுத்தி இல்வலன் வாதாபியைக்கொன்று, கானவித்தையிற் றான்றான் பெரியவனென்று விவாதப்பட்டுக்கொண்டிருந்த தும்புருநாரதரருகிற்போனார். அவ்விருவருந்தங்கள் விவகாரத்தைச்சொல்ல, அவரவர்கள் கையிலிருந்த தாளங்களிலொவ்வொன்றை வாங்கித்தான் கானஞ்செய்து, அவ்விடத்திலிருந்த பளிங்குமலையையுருகச்செய்து, தாளத்தைய திலெறிந்து கானத்தைநிறுத்தினார். உருகினபளிங்குமலைதாளத்தைப்பிடித்துக்கொண்டு கெட்டியாய்விட்டது அப்பொழுது அகஸ்தியர் தும்புருநாரதரை நோக்கிநீங்கள்பாடிமலையையுருகச்செய்து, தாளத்தையெடுத்துக் கொள்ளுங்களென்றுசொல்லினார், அவ்வாறே தும்புருநாரதரிருவருந்தனித்தனிபாட மலையுருகாமையை அகஸ்தியர் கண்டு, நீங்களிருவருங் கானவித்தையிற் சிறந்தவர்களல்ல ரென்றவர்கள் கெருவத்தைத் தணித்துத் தான்பாடிமலையையுருகச்செய்து பலகையாகத் தாளத்துடன் சேர்த்துக்கொண்டுபோய் மதுரைமாநகரத்திற் சாரதாபீடமாக விருத்தித்திருக்குற்றாலமடைந்து அங்குள்ள விஷ்ணுவைத்தெரிசனஞ்செய்யக் கோயிலினுள்ளேபோவதைச் சங்குசக்கர யோனிமுத்திரை தரித்தங்கிருந்த சிலவைணவர்கள் அகஸ்தியர் தரித்திருந்த சிவச்சின்னங்களைக்கண்டு உள்ளே போகக்கூடாதென்று தடுத்தார்கள். உடனேவெளியில்வந்து சற்றுநேரமிருந்து விஷ்ணுச்சின்னங்களைத் தரித்துக்கொண்டு கோயிலினுள்ளேபோவதை முன்றடுத்த வைணவர்கள் கண்டு விஷ்ணுபத்தரென்று விட்டுவிடஉள்ளேபோய்ப்பஞ்சாக்ஷரமந்திரப்பிரபாவத்தால் விஷ்ணுவைச் சிவலிங்கமாக்கினார் அதைக்கண்ட வைணவர்கள் வயற்றிலும் வாயிலுமடித்துக்கொண்டு அலறியூரைவிட்டோடினார்.

அதன்பின் அகஸ்தியர் மலபாசலத்தையடைந்து தன் மாணாக்கர்பன்னிருவருக்குந் தமிழிலக்கணம்போதித்துச் சில காலமிருந்து சமுத்திரதீரவழியாகச் சுவேதாரணியஞ்சென்று ஸ்வாமிதெரிசனஞ் செய்திருக்குங் காலத்திற் சமுத்திரராஜன் வந்து அகஸ்தியரைவணங்கிநின்று தயாமூர்த்தியே! சையகிரியிலிருக்கும் கவேரராஜபுத்திரியாகிய காவேரியை அடியே

னுக்கு விவாகஞ்செய்துவைக்க வேண்டுமென்றுகேட்க அவ்வாறே செய்கிறேமென்று சையகிரியையடைந்து கவேரராஜரிஷியைக்கண்டு சமுத்திரராஜன் சம்பந்ததிற்குடன்படுத்திக் காவேரியோடுமூவரும் பஞ்சநதத்தையடைந்து ஸ்வாமிதெரிசனஞ்செய்துகொண்டு புறப்படுகையிற்காவேரி பஞ்சநதத்தை விட்டுவரமாட்டேன்என்றுசொல்ல, பரமசிவனார் காவேரியை சமாதானப்படுத்தி அழைத்துக்கொண்டுபோய்ச் சமுத்திர ராஜனுக்கு விவாகஞ்செய்துவைத்துக் கவேரராஜரிஷியை சையகிரிக்குப்போகும்படி விடைகொடுத்திருக்கும் பொழுது சமுத்திரராஜன்வணங்கிநின்று சுவாமி! தாங்கள்சையகிரிக்கு போய்வருவதற்கிவ்வளவு காலந்தாமதமானகாரணம் அடியேனுக்குசொல்லியருள வேண்டுமென்று கேட்க அகஸ்தியர் சமுத்திரராஜனே! காவேரி பஞ்சநதத்தில்வந்திருந்து கொண்டு வரமாட்டேன் என்றுசொன்னதால் இவ்வளவுகாலதாமதமானதென்றுச் சொல்லச் சமுத்திரராஜன் சுவாமிமலயமுனிவரே! பஞ்சநதமான்மியத்திற் சில அடியேனுக்குச்சொல்லியருளவேண்டுமென்றுகேட்க அகஸ்த்தியர் சமுத்திரராஜனுக்குச் சொல்லத்தொடங்கினர்.

1-வது புராணவரலாறுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 2- சிலாதமுனிவர் புத்திரனையடைந்த அத்தியாயம்.

சிலாதமுனிவரானவர், வசிஷ்டர், வர்மதேவர் முதலானமகரிஷிகளால் ஜெபத்துக்குயோக்கிய மென்று நிச்சியித்த ஜப்பியேச்சுரத்தில் சூரியபுஷ்கரணி தீர்த்தத்திலிருந்து தவஞ்செய்தார். அப்பொழுது பரமசிவன் பிரசன்னமாகி மகாபிரளய காலத்திலுமழிவில்லாத நித்தியத்துவத்தையளித்து மறைந்தருளினர். அதன்பின் சிலாதர் நெடுங்காலஞ் ஜெப்பியேச்சுரத்தில் வசித்துச் சுவேச்சையாற் சொர்க்காதிபுவனங்களைப்பார்க்கவேண்டுமென்று, முதல்நரகலோகத்தையடைந்து அந்தவுலகத்தரசனாகிய எமதருமராஜனைப்பார்த்தார். பார்த்தவுடனெமதருமராஜனெழுந்து அர்க்கியபாத்திய ஆசமனீயங்களாலுபசரித்துத் தாங்களிங்கு வந்தகாரியந்தெரிவித்தருளவேண்டுமென்றான். சிலாதர் தருமராஜனே! நான் பிக்ஷுகப்பிராமணன் பலிப்பாத்திரத்திற் கல்லைப்போட்டேன். அந்தபாவத்தாற் கற்களைப் பொடிபண்ணிப் புசித்துத் தவம்பண்

ணினேன். அதனாற் சிலாதரென்றெனக்குப் பெயர்வந்ததுந்
தவிர உன்பட்டணத்தை நான்பார்க்குமளவுஞ் சிலாசனத்துவ
மெனக்கிருக்குமென்று பரமசிவன் சொன்னதால்உன்பட்ட
ணத்தைப் பார்க்கவந்தேனென்று சொன்னார். தருமராஜன
மகரிஷியே! பார்க்கச்சகிக்கமுடியாத வென்பட்டணத்தைத்
தாங்களெவ்வாறு பார்க்கபோகிறீர்களென்று சொல்லித்தூதர்
களையழைத்து நீங்கள் சிலாதமுனிவரை யழைத்துக்கொ
ண்டு போயென்னுலக வைபவங்கள் யாவையுங்காட்டுங்
களென்று உத்திரவுபண்ணினான். அவ்வாறே தூதர்கள்சிலாத
ரையழைத்துக்கொண்டு போய் ஒவ்வொரு நரகங்களையுங்
காட்டச் சிலாதர் பார்த்து மிகுந்ததுக்கமடைந்து வேறோர்
நரகத்தைப்பார்க்க அந்தநரகத்திலிருந்து சயிக்கமுடியாத
வாதையடைகின்ற ஜனங்களைக்கண்டு, இதென்னநரகமென்று
தூதர்களைக்கேட்டார். அப்பொழுது துன்முகனென்ற தூதன்
புத்திரரில்லாதவர்களடையும் புன்னாம நரகமென்றுசொன்
னான் சொன்னவுடன் சிலாதர்மனநடுங்கி மிகுந்ததுக்கத்துடன்
நரகலோகத்தைவிட்டுப் பூமியிற்ஜப்பியேசுவரமடைந்து, சூரி
யபுஷ்கரணித்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, நித்தியகருமங்
களைமுடித்துத் திருக்கோயிலுட்சென்று, பிரதக்ஷணநமஸ்கா
ரஞ்செய்துகொண்டு, வெளியில்வந்து, சூரியபுஷ்கரணிக்கரை
யிற் பஞ்சாக்கினிமத்தியினின்று நெடுங்காலம்தவஞ்செய்தார்.
அப்பொழுதுபரமசிவன் பிரசன்னமாகிச் சிலாதரேயென்று
விளிக்கக் கண்ணைத்திறந்து பரமசிவனைக்கண்டு, நமஸ்கரித்து
ஸ்தோத்திரம்பண்ணினார்.

பரமசிவன் சிலாதரே! யுமக்குவேண்டியதைச் சொல்லு
மென்றார். சிலாதர் சுவாமி! பரமபதியே அயோனிசம்பந்தனாக
வுஞ் சகலகலைக்கியானங்களும் தெரிந்தவனாகவுமோர் புத்திரனை
நானடையும்படி யனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்றார் அப்பொ
ழுதுபரமசிவன் சிலாதரே! புத்திரகாமேஷ்டி செய்வீரேற்
பதினாறுவயது பூரணாயுளாக வுள்ளவோர் புத்திரனையெமதனு
க்கிரகத்தாலடைவீரென்று சொல்லி மறைந்தருளினார், அதன்
பின் சிலாத முனிவர் புத்திரகாமேஷ்டி செய்ய அந்தணர் வாச
ஞ்செய்யுமக்கிரகாரஞ்சென்று ஸ்தலசுத்திசெய்வதற்குக் கலப்
பையாலுழுங்காலத்தில் கொழு முனையில், நவரத்தினங்களி
ழைத்த தங்கப்பெட்டி யொன்றகப்பட்டது. அதைக்கண்டு
மிகுந்த ஆச்சரியமடைந்து பெட்டியைத்திறந்து பார்க்கையில்
சோதிரூபமாகிய திருமேனியும், திருநேத்திரமும், சதுர்ப்
புஜமும், சிரச்சந்திரனுமுள்ள பரமசிவனைக்கண்டு நமஸ்கரித்து

யிற்கையிற் சிலாதரே! பெட்டியை மூடித்திறந்தாலும் உம்முடைய அபிப்பிராயப்படி புத்திரனாகத் தோன்றப்படுமென்று ஆகாயத்தில் அசரீரி உண்டானது. அவ்வாறே பெட்டியை மூடித்திறந்து, சூரியோதயம்போல் ஓர் ஆண்குழந்தையைக் கண்டு, பேரானந்தத்துடன் கையாற்றூக்கித்தன் மார்போடணைத்துக்கொண்டு கிரகமடைந்து, மனையாளாகிய சாருலக்ஷணை கையிற் கொடுத்தனர்.

2 வது அத்தியாயம் முற்றிற்று,

## 3-வது சைலாதி சிவகணாதிபத்தியம் பெற்ற அத்தியாயம்.

சிலாதமுனிவர் கொண்டுவந்து கொடுத்த குழந்தையைச் சாருலக்ஷணை வளர்த்து, அருமையாகப் பாராட்டி வருங்காலத்தில் சிலதாமுனிவர் ஜாதகர்மஞ் செய்து, சைலாதி யென்று நாமமிட்டு உபநயனம் செய்து, சகலவேதபுராணங்களும் கற்பித்து வருகையிற் பரமசிவன் முன்சொல்லிய பதினறு வயதிற்குப் பதினன்கு வயதாய் விட்டது. இன்னும் இரண்டுவயது தானே! இருக்குதென்று யோசித்து மிகுந்த துக்கமுடையவராக விருந்தார். அப்பொழுது அவர் மனையாள் சாருலக்ஷணை சிலாதரை வணங்கி சுவாமி! தாங்கள் மிகுந்த துக்கமடைந்திருக்கின்ற காரணத்தைத் தெரிவித் தருளவேண்டுமென்று கேட்கச் சிலாதர் பெண்ணே! நமது குமாரன் மரணத்திற்கின்னமிரண்டு வருஷந்தானிருக்கின்றதென்று சொல்லினர், அதைக்கேட்டுச் சாருலக்ஷணையும் மிகுந்த துக்கமடைந்திருந்தாள். சைலாதி தாய் தந்தையிருவருந் துக்கமடைந்திருப்பதைத் தெரிந்து, நீங்கள் துக்கமடைந்திரும்பது யாது காரணம் மென்று வினவ, அவர்கள் கீழ் நிகழ்ந்ததைச்சொல்லப் புன்னகையுடன் தாய் தந்தையாரை நோக்கி பரமசிவனனுக்கிரகத்தாலென்றுஞ் சாவாதவரத்தைப்பெறுகிறேனென்று சொல்லிச்சூரிய புஷ்காணியடைந்து கழுத்தளவு ஜலத்தினின்று சிரமேற் கைகளை கூப்பி வடதிசையை நோக்கிப் பரமசிவத்தியானத்துடன் அக்ஷரலக்ஷமாகும்படி ஸ்ரீ ருத்திர மந்திரத்தை செபித்தார், அப்பொழுது உமாதேவியார் பரமசிவனைப் பணிந்து நின்று சுவாமி! யாவராலுஞ் செய்தற்கரிய தவஞ் செய்யுஞ் சைலாதிக்குக் காலதாமதமின்றி யனுக்கிரகஞ்,செய்யவேண்டுமென்று சொல்லப் பரமசிவனவர் பிரமா, விஷ்ணு, இந்திரன் முதலான அஷ்டதிக்கு

பாலகர், முப்பத்துமுக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிர மகரிஷிகள், சித்தர், சாத்தியர், கெந்தருவர், உரகர், அப்சரசுகள், வித்தியாதரர் புடைசூழ வீணை, வேணு மிருதங்க முதலான பதினொன் வாத்தியங்கள் முழங்க ரிஷபாரூடராகப் பிரசன்னமாகிச் சைலாதி யருகில் வந்து, சைலாதியே யுன்னரியதவத்தால் யாம் ஆனந்தமடைந்ததுமன்றி யுனக்குச் சாரூப பதவியையுமளித் தனமென்று சொல்லிச் சைவதீக்ஷையோடு பஞ்சநதியாலபிஷேகஞ் செய்து நந்திகேசுவரரென்று தீக்ஷா நாமம் வைத்து நந்திகேசுவரரோடு கைலாயமடைந்தார்.

3-வது அத்தியாயம் முற்றிற்று.

## 4-வது நந்திகேசுவரருக்கு மணம் புரிந்த அத்தியாயம்.

பரமசிவன் நந்திகேசுவரரோடு கைலாயமடைந்த பொழுது பார்வதி தேவியார் இருவரையும் வேறுதெரியாமல்மயங்க அதைபரமசிவனறிந்து, பெண்ணே! யுன்மனத்திலுண்டான சந்தேகத்தைச் சொல்லென்று கேட்கப் பார்வதி தேவியாரொன்றுஞ் சொல்லாதிருந்தார். அதை நந்திதேவர் தெரிந்து எழுந்து பரமசிவனை நமஸ்கரித்துநின்று சுவாமி யடியேனுக்கு முகத்தில் வானர ரூபத்தை யளித்தருளவேண்டுமென்று கேட்கப் பரமசிவன் நந்தியே! நீ ஜெப்பியேசுவரமடைந்து சூரிய புஷ்கரணி தீர்த்தத்தில் முன்போல் தவஞ்செய், யாமங்குவந்துவானரரூபத்தைக் கொடுக்கின்றோமென்று சொன்னார். உடனே நந்திகேசுவரர் கைலாயமலையை விட்டு ஜெப்பியேசுரமடைந்து, சூரியபுஷ்கரணி தீர்த்தத்திலிருந்து தவஞ்செய்தனர். அப்பொழுது பரமசிவன் பிரசன்னமாகி நந்தியே! இலங்கை அரசனாகிய இராவணனுக்கும் பார்வதிதேயாருக்குமுன்னிடைய முகம் வானரரூபமாகவும் மற்றவர்களுக்கெல்லாம் எம்முடைய முகம்போலவும் தோன்றக் கடவதென்று சொல்லி; உடைவாளும் இரத்தினவேத்திரமுங் கொடுத்து, எப்பொழுதும் எமது சந்நிதானத்தைவிட்டு நீங்காதிருவென்று நந்திகேசுவரரோடு கைலாயமடைந்தார். பரமசிவன் நந்திகேசுவரருக்கு சைவதீக்ஷை செய்ததைச் சனக்குமார மகரிஷி ஞானதிருஷ்டியால் தெரிந்து கைலாயம் வந்து நந்திகேசுவரனுமதியாற் பரமசிவன் சந்நிதி

யையடைந்து நமஸ்கரித்தெழுந்து நின்று பரமபதியே! அடியேனுக்கு சைவதீக்ஷை செய்தருளவேண்டுமென்று சொல்லச் சுவாமி நந்திகேசுவரரையழைத்து நந்தியே! இவருக்குக் காலசோதனை செய்து தீக்ஷை செய்யென்று உத்தரவுகொடுக்க அவ்வாறே தீக்ஷை செய்தவரை அனுப்பியிருக்குங்காலத்தில் பரமசிவன் நந்திகேசுவரருக்கு விவாகம் செய்யவேண்டுமென்று விடையிலாரோகணித்து, வசிஷ்டாச்சிரமாகிய திருமழபாடியை அடைந்து வசிஷ்டரைக்கண்டு வசிஷ்டரே! உமது பவுத்திரியாகிய சுயசையை நமது பக்தனாகிய நந்திக்கு விவாகஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று சொல்ல வசிஷ்டர் நமஸ்கரித்து எழுந்து நின்று சுவாமி! தேவரீர் திருவாக்குக்கெதிருண்டோவென்று சொன்னார் உடனே பரமபதியானவர் கைலாயம போய் நந்திகேசுவரரை அழைத்துக்கொண்டு திருமழபாடி வந்து, பங்குனிமீ சுக்கிலபக்ஷ தசமி புனர்பூச நக்ஷத்திரத்தில் நந்திகேசுவரருக்கு சுயசையை விவாகஞ் செய்து வைத்தார்.

4-வது அத்தியாயம் முற்றிற்று.

## 5-வது நந்திகேசுவரர் திருமணப்பவனிச் சிறப்புரைத்த அத்தியாயம்.

பரமசிவன் நந்திகேசுவரருக்கு விவாக முடித்துக்கொண்டு சிலதமுனிவருடன் ஜப்பியேசுரம்வந்து நந்திகேசுவரரை கௌசிகாதி முனிவருக்கு காண்பித்து வைக்கும் பொருட்டு நந்திகேசுவரரை முன்விட்டு ஜெம்பியேசுரத்தை விட்டு புறப்பட்டுச் சகல வாத்தியகோஷங்களுடன் கௌசிக ஆசிரமமாகிய திருப்பழனத்தையடைய, அங்கெழுந்தருளிய ஆபத்சகாயர் எதிர்வந்தழைத்துக் கொண்டுபோயுபசாரம் செய்து வழிவிட, அவ்விடம்விட்டுப்புறப்பட்டுப்காவேரிநதியைத்தாண்டிகௌதமாச்சிரமமாகிய திருச்சோற்றுத்துறையை அடைய, அங்கெழுந்தருளிய ஓதவனேசுவரர் எதிர்வந்தழைத்துக்கொண்டு போயுபசரித்து வழிவிட, அவ்விடம் விட்டுப்புறப்பட்டு வியாசாச்சிரமமாகிய திருவேதிகுடியை அடைய அங்கெழுந்தருளிய வேதநாயகர் எதிர்வந்து அழைத்துக்கொண்டுபோயுபசரித்து வழிவிட, அவ்விடம் விட்டுப்புறப்படடு உத்தமமானபச்சிமத்துவாரசந்நிதியை யுடைய திருக்கண்டியூரையடைய, அங்கெழுந்தருளிய

வீரட்டேசுவரரெதிர் வந்தழைத்துக்கொண்டு போயுபசரிக்க சற்றுநேரமங்கிருந்து சூரியாபிமுகமாக வீரட்டேஸ்வரர்வழி விட அவ்விடம்விட்டுப்புறபட்டுத் திருப்பூந்துருத்தியையடைய அங்கெழுந்தருளிய புஷ்பவனேசுவரர் எதிர்வந்து அழைத்துக்கொண்டுபோயுபசரிக்க சற்றுநேரம் புஷ்பவனேசுவர மண்டபத்திலெழுந்தருளி நடனுதிவைபவங்களை யனுபவித்துப் புஷ்பவனேசுவரர்வழிவிட அவ்விடப்விட்டுப்புறப்பட்டுக் காவேரிநதியையடைந்து அந்நதியின்மத்தியில் மந்தமாருதம் வீசக்கொஞ்சநேர மெழுந்தருளியிருக்கும்பொழுது திருநெய்த்தானத்திலெழுந்தருளிய கிருதத்தானேசுவரரெதிர்வந்தழைத்துக் கொண்டுபோயுபசரித்து வழிவிடப் பல்லாயிரங்கோடி தீவட்டிமத்தாப்பு வானங்களுடன் வேதியர்வேதகோஷமுழங்க மூவர்திருவாய்மலந்தருளிய தேவபண்களையுடைய தேவாரங்களைத் திருக்கூட்டத்தார் முழங்கவுஞ் சகல வைபவங்களுடன் ஜெப்பியேசுரமாகிய திருவையாற்றை யடைந்தார் இந்தத்தேவவைபவவுச்சவ தினத்தில் காவேரிஸ்நானஞ் செய்து, தன்னுலியன்றபொருளை யுத்தமர்களுக்குத் தானமாகக்கொடுத்து, மௌனவிரதத்துடன் பரமபதியோடு சப்தஸ்லத்தைப் பிரதக்ஷணமாகவந்தவர்கள் மறுவருஷத்திற்குள்ளாகப் புத்திரப்பேறுமுதலான செல்வங்களையடைதல் சத்தியம்.

5-வது அத்தியாயம் முற்றிற்று.

## 6-வது நியமேசர் திருப்பணி செய்த அத்தியாயம்,

பூர்வத்தில் நியமேசரென்னும் மாகாயோகியொருவர் காவேரிநதித் தென்கரையிலிருந்த சிவாலயத்திற் சிவபணிவிடைசெய்து கொண்டிருந்தனர், அப்பொழுது சூரியகுல திலகனுகிய ரீபுவென்னுஞ்சோழராஜன் நியமேசரிடம வந்து சுவாமி! அடியேன்கிரகத்தில் மத்தியானப்போசனஞ் செய்து கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்க அதற்கிசைந்தனர். உடனேயரசன் கிரகத்துக்கேகிப் போசனஞ்செய்துகொண்டு வருவதற்குமுன் நியமேசர்யோகத்திலிருந்துவிட, அரசன்வந்து யோகிகள் கண்ணைத்திறவாமலிருப்பதைக்கண்டு அனேக்காலம்

காத்திருக்க, அரசனுக்கும் மரணகாலஞ் சமீபித்தது. அப்பொழுது தன்குமாரனையழைத்து நியமேசர் கண்ணை விழித்தவுடன் போசனம் செய்துவையென்று சொல்லி மரணமடைந்தான். அதன்பின் தந்தை சொல்லியவாறே அநேக காலம் காத்திருந்தும நியமேசர் கண்ணைத்திறவாமையைக்கண்டு தன் புத்திரனையழைத்துத் தந்தை சொல்லிய பிரகாரம் புத்திரனுக்குச் சொல்லி மரணமடைந்தனன் நியமேசர் அநேக கற்பகாலம் கண்ணைத்திரவாமலிருக்க, ஆலயத்தோடு நியமேசரையு மூடிக்கொண்டிரண்டு பனைமரப்பிரமாணம் மேடுயர்ந்துவிட்டது. அப்பொர்தரசு செய்திருந்த ஆசிதவசி யென்னும் சோழராஜன் சதுரங்க சேனையுடன் புறப்பட்டு திக்விஜயம் செய்துகொண்டு, காவேரி நதி தென்கறை வழியாக இரதத்தை நடத்திக்கொண்டு வருகையில் இரதம் தடைப்பட்டு நின்றது. உடனேயரசன் மந்திரிகளை அழைத்து மந்திரிமார்களே! நமக்கிதுவரையிலும் யாதோரிடையூறு நேர்ந்ததில்லை இன்று யாதுகாரணமோ இரதம் போகாற்றடைபட்டு நிற்கின்றதென்று சொல்ல மந்திரிகள் அரசனே! ஈதோர் புண்ணிய க்ஷேத்திரமாக விருக்கவேண்டுமென்றுசொல்ல, அரசன் சேனைகளை விட்டு பூமியை வெட்டும்படி உத்திரவு பண்ணினான் அவ்வண்ணமே சேனைகள் பூமியை இரண்டு பனைமரப் பிரமாணம் பறிக்க* வோர்ராலயத்தின் சிகரந்தோன்றியது. அதைச் சகலருங்கண்டானந்த மடைந்து பின்னும் சோதிக்க ஆலயத்தோடு நியமேசர் வெளிப்பட, அரசன் நியமேசரைகண்டு, பூமியில் பதிந்திருந்த சடை நகங்களை பிரித்துவிட்டு எதிர் நின்றான். அப்பொழுது நியமேசர் கண்ணைத்திறந்து அரசனே! காலைசொல்லியபடி போசனம் தயாராவிருக்கின்றதா வென்று வினவ, அரசன் திகைத்து நின்றான் ஞானதிருஷ்டியால் நமக்குப்போசனம் சொன்னவரசனல்ல அவனிறந்து அநேக யுகமாய்விட்டதென்றறிந்து பின்னுமரசனை நோக்கி யரசனே! நமக்கு மிகவும் பசியாக விருக்கின்றது, போசனம் கொடுக்க வேண்டுமென்று கேட்க, நியமேசருக்கு அப்பியஞ்ஞனஸ்நானத்தோடு போசனம் செய்து வைத்து இன்னுமென்னாலாகவேண்டியதைச் சொல்லியருள வேண்டுமென்று கேட்க, நியமேசர் கிருபாநோக்கஞ்செய்து அரசன் கையிலோர் கோலைக்கொடுத்து அரசனே நீ எவ்விடம் சென்றாலும் யாதோரிடையூறுன்றி யிவ்வுலகத்தையாளக்கடவாய் என்று விடைகொடுக்க அரசன் நமஸ்கரித்து தன்னகரம் போய்ச்சேர்ந்தான்.

அதன்பின் யோகீஸ்வரர் சிவத்தியானத்திலிருக்க அப்பொழுது பரமசிவன் பிரசன்னமாகி நியமேசரே! யென்று விளித்தார். நியமேசர் கண்ணைவிழித்துப் பரமசிவனைக் கண்

டெழுந்து நமஸ்சரித்து அஞ்சலி பந்தத்துடன் நின்று, சுவாமி பரமகருணாநிதியே அடியேனுக்கு ஸ்தூல தேகத்தை நீக்கி யருளவேண்டுமென்று சொல்லப் பரமசிவன் ஸ்தூலதேகத்தை நீக்கிச் சூக்ஷும தேகத்தை யளித்து நியமேசரே பிரளயகாலத்திலும் நாசமில்லாத சப்தஸ்தலங்களிலும் முதன்மையான காவேரிநதிக்கு வடகரைக்கருகிருக்கிற ஜெப்பியேசுரத்தில் திரிசூபென்று நாமத்தையுடைய நம்மை நீர் தெரிசித்து அந்தவாலபததை ஜீர்ணோத்தாரணம் செய்யவேண்டுமென்று சொல்ல நியமேசர் சுவாமி காயக்கிலேசம் செய்துகொண்டு மூன்றாசையுந்துறந்து தவம் செய்கின்ற வென்னிடத்தில் ஜீர்ணோத்தாரணம் செய்யத்திரவியமில்லையே யான் யாதுசெய்வேனென்றார். பரமசிவன் நியமேசரே அந்த ஆலயத்தில் எம்முடைய ரிஷபத்தின் கால்கள் பதிந்து நாலுகுண்டங்களாக விருக்கின்றன அவைகளில் ஒன்றில் கருப்பஞ்சாறும், ஒன்றிற் கற்களும், ஒன்றிற் சுண்ணாம்பும் மற்றொன்றில் சொர்னமும் இருக்கின்றன அவைகளையெடுத்து திருப்பணி செய்யுமென்று சொல்லி மறைந்தருளினார்.

அதன் பின் நியமேசர் ஜெப்பியேசுரமடைந்து பரமசிவன் சொல்லியபடி நாலுகுண்டங்களைக்கண்டானந்தமடைந்து கெர்ப்பகிரகம், ஆதிவிநாயகராலயம், தெக்ஷிணாமூர்த்தியாலயம் சத்தமாதராலயம், ஜெபமண்டபம், மகிஷாசுரமர்த்தனி யாலயம் கெஜேந்திரலெக்ஷிமியாலயம், அமிர்த கூபம், சண்டேசுவராலயம், சித்தேசராலயம், நடராஜர்மண்டபம், காலபைரவர் அஷ்டபைரவாலயம், விக்கினேசுவராலயம், சோமஸ்கந்த மூர்த்தியாலயம், சுப்பிரமணியராலயம், எமதன்வந்தியாலயம், பள்ளியறை, ரிஷபமண்டபம், அன்னபூர்னேசுவரி மண்டபம், மடைப்பள்ளி, நிர்த்தன மண்டபம், தென்கைலாயம், வடகைலாயம், மூன்று கோபுரம், தெற்குவாசல், ஒலவிநாயகராலயம், விசுவேசுவராலயம், பொக்கிஷ மண்டபம், ஆபரண தேவதையாலயங்களுடன் தர்மசம்வர்த்தனியாலயம், சம்பாநதி, கூபமுதலானவைகளும், புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்து பரமசிவன் சந்நிதானத்தில் வந்து நமஸ்காரதோத்திரம் செய்து பஞ்சாக்ஷர ஜெபத்துடன்பஞ்சநதத்தில் வசித்தார்.

6-வது அத்தியாயம்முற்றிறு.

## 7-வது அப்பர்சுவாமிகளுக்குக் கைலாய தரிசனங் கொடுத்த அத்தியாயம்.

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வேளாளர் குலத்திலே குறுக்கையர் குடியிலே புகழனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் பெயர் மாதினியார். அம்மாதினியர் வயற்றிலே திலகவதியார் என்கிற புத்திரியார் பிறந்தார். அவர் பிறந்து சிலவருஷஞ்சென்றபின் சைவசமயம் அபிவிருத்தியாகும்படி மருணீக்கியார் என்கிற புத்திரர் அவதரித்தார், அவருக்குறிய பருவத்திலே வித்தியாரம்பஞ் செய்த்தர். மருணீக்கியர் தந்தையாருக்குப் பெருமகிழ்ச்சி யுண்டாகும்படி பலகலைகளையும் கிரமமாகக்கற்றுபரமசிவனனுக்கிரகத்தால் அப்பரென்றும், வாகீசரென்றும், பேர் பெற்று அனேக சிவஸ்தலங்களில் சென்று தேவாரபதிகம்கள் பாடி வணங்கிக்கொண்டு தென்கைலாயமாகிய திருகாலத்திய மலையையடைந்தார். அங்கே பொன்முகலியிலே ஸ்நானஞ்செய்து கொண்டுமலையின்மேலேரிசுவாமியைவணங்கித்திருபதிகம்பாடி அவருடைய வலபக்கத்திலே நிற்கின்ற கண்ணப்பநாயனருடைய திருவடிகளை வணங்கிச் சிலநாள் அந்தஸ்தலத்திலே வசித்தார்.

பின் உத்திர கைலாயத்திலே பரமசிவன்வீற்றிருக்கின்ற திருக்கோலத்தைத் தரிசிக்க விரும்பிதிருக்காளத்திமலையினின்றுநீங்கிஉத்திர திசையிலிருக்கின்ற திருப்பருப்பதத்தைஅடைந்துவணங்கிதிருப்பதிகம்படிச் சென்று காசியை வணங்கிகொண்டு அதற்கப்பாலிருக்கின்ற சற்சுரத்திலே காகமூலபலங்கள் பொசித்தலையும் ஒழிந்து திருக்கைலாய தரிசனம் செய்யவேண்டுமென்னும் பேராசையால் இராப்பகல் விடாது நடந்தார். அதனுல் அவருடைய பாதங்கள் பரடு வரைக்கும் தேய்ந்தன. தேய்ந்தும், ஆசைமேலீட்டினுல் தம்முடைய 2 கைகளையும் ஆதாரவாகக்கொண்டு தாவிசென்றார், அந்தக்கைகளும் மணிக்கட்டு அசைந்து கரைந்து சிதைந்தன. பின்னும் ஆசைசிறிதும் குன்றுதலின்றி மேலிடுதலால் கொடிய நெருப்பையொத்த வெவ்விய பருக்கைக்கற்கள் பொருந்திய மார்க்கத்தில் மார்பினுல் நகர்ந்து போயினர். மார்புந்தசையுங்கைந்து சிந்த எலும்புகளும் முறியலுற்றன. பின் புரண்டு புரண்டு போனர். அதனுல் தேகமுழுவதும் அரைய, நாயனர் திருக்கைலாயகிரியினிடத்தே பதிந்த அன்பின் உறுதியினுல் மெல்ல நகருவதற்கு முயன்றும் கூடாமையால் வழியிலே கிட

ந்தார். அப்பொழுது பரமசிவன் அப்பமூர்த்தியை மீளவும் தமிழ் நாட்டிற்செலுத்தி அந்நாட்டிலுள்ளோர் உய்யும்பொருட்டு தமிழ்வேதமாகிய தேவாரம்பாடுவித்தற்கும் அவ்வப்பமூர்த்தியுடைய கருத்தையும் மாறின்றி முடிப்பதற்கும் திருவுள்ளங்கொண்டு அவ்விடத்திலொரு தடாகத்தை யுண்டாக்கி ஒரு முனிவர் வடிவங்கொண்டு அந்நாயனருக்கு முன்வந்து நின்று நீர் அங்கங்களெல்லாம் அழிந்துபோக வருத்தத்தோடும் இந்தக்கொடிய காட்டில் எதன்பொருட்டு வந்திரென்று கேட்டார். அப்பமூர்த்திமரவுரியாடையும் எஞ்ஞோபவீதத்தையும் சடமுடியையும் விபூதிதாரணத்தையுமுடைய அந்தமுனிவரைக்கண்ட பொழுதேபேசுதற்கு அற்பசக்தியுண்டாக, அவரை நோக்கி, "முனிவரே" நமதுகடவுளாகிய பரமசிவன் உத்திர கைலாயத்தில் உமாதேவிசமேதராய் வீற்றிருக்கின்ற திருக்கோலத்தைத்தெரிசித்துவணங்குயபொருட்டு விரும்பிவந்தேன் என்றார் அதற்குமுனிவர் தேவர்களாலும் அடையப்படுதற்குஅரிதாகிய திருக்கைலாயகிரி மனிதர்களால் அடையப்படுதற்கெளிதா. நீரிந்தக் கொடுஞ்சுரத்திலே வந்து என்செய்திர்; இனித் திரும்பிவிடுதலே யுத்தமம்" என்றார். உடனே அப்பமூர்த்தி திருக்கைலாயகிரியில் இருக்கின்ற சிவபெருமானுடைய திருக்கோலத்தைத் தரிசித்தன்றி அநித்யமாகிய இத்தத்தேகத்தைக்கொண்டுதிரும்பேனென்றுமறுத்தார். சுவாமி அவருடைய துணிவைக்கண்டு மறைந்தருளி, ஆகாயத்தில் அசரீரியாகிநின்று, நாவுக்கரசனே! எழுந்திரு என்றார். உடனே அப்பமூர்த்தி அழிந்த உருப்புக்களெல்லாம் முன்போல் நிரம்பப்பெற்றுச் சிறந்த திருமேனியோடும் எழுந்து, சுவாமி தேவரீர் திருக்கைலாசகிரியில் எழுந்தருளியிருக்கின்ற திருக்கோலத்தை அடியேன் தரிசித்து வணங்கும்பொருட்டு அருள் செய்யுமென்று பிரார்த்தித்து, நமஸ்காரம்பண்ணினார். அப்பொழுது பரமசிவன் "நீ இந்தத்தடாகத்திலே முழுகித் திருவையாற்றையடைந்து, நம்மைக்கைலாயகிரியில் வீற்றிருந்தபடி அந்த, ஸ்தலத்திலே தரிசித்து வணங்கு என்று பணித்தருளினார்.

அப்பமூர்த்தி அப்பணியைச்சிரமேற் கொண்டு ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதி, தடாகத்திலேமுழுகி திருவையாற்றிலிருக்கின்ற ஓர்வாவியின்மேலே தோன்றிக் கரையிலேறி வழியிலே அந்தத்திருப்பதியிலுள்ள சராசரங்கள் தங்கள் தங்கள் துணையோடும் பொலிதலைக்கண்டு, அவைகளைச்சிவமும் சத்தியுமாகப்

பார்த்து, வணங்கிக்கொண்டு ஆலயத்துக்கு முன்னேசென்றார் அவ்வாலயம் திருக்கைலாசகிரியாக அதனிடத்தே, வேதங்களும் சிவாகமங்களும் இருபக்கத்திலும்வாழவும், தும்புரு நாரதரென்னும் இருவரும் யாழ்வாசிக்கவும், பிரமவிஷ்ணுக்களிருவரும் வஸ்திரத்தை ஒதுக்கிவாயைக்கையினாலேபொத்திக்கொண்டு ஒதுங்கிநின்று தத்தங்குறைகளைச் சொல்லவும், பூதகணங்கள் கடைதோறுங் காக்கவும், தேவர், சித்தர், அசுரர், சாரணர், காந்தருவர், கின்னரர் இயக்கர், விஞ்சையர் முதலாகிய கணத்தவர்கள் துதிக்கவும், திருநந்திதேவர் கையிலே பிரம்பைத்தரித்துக்கொண்டு பணிசெய்யவும், காருண்ணியஸ்வரூபமாகிய சிவபெருமான ஒருதிவ்வியாசனத்தின்மேலே அநந்தகோடி சூரியப்பிரகாசத்தோடும் பார்வதிசமேதராய் வீற்றிருந்தருளினார். அப்படியிருத்தலை அப்பமூர்த்தி கண்டமாத்திரத்திலே விழுந்து நமஸ்கரித்து, உரைதடுமாற, உரோமஞ்சிலிர்ப்ப ஆனந்தவருவி சொரிய, கரைகடந்த அருட்பெருங்கடலிலே அன்புநதி ஈர்த்துச்செல்ல, மிதந்துபோய், தெவிட்டுதலில்லாத அளவிறந்தசிவானந்தமிர்தத்தைப் பருகி, சந்நிதானத்திலே ஆனந்தக்கூத்தாடித் திருத்தாண்டகங்கள்பாடினார், திருக்கைலாயபதியாகிய கடவுள் தம்முடைய திருக்கோலத்தை இப்படி அப்பமூர்த்திக்குத் தெரிசிப்பித்து, பின்மறைந்தருள, அவ்வப்பமூர்த்திமனம்வருந்தி பின்ஒருவாறு தெளிந்து, திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு, அந்ததிருப்பதியில் இருந்தார்.

சிலநாட்சென்றபின், திருவையாற்றினின்றும் நீங்கி, திருநெய்த்தானம் திருமழபாடி முதலியபஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருப்பூந்துருத்தியை அடைந்து, சுவாமிதரிசனஞ்செய்து, திருப்பதிகங்கள்பாடி, அங்கே ஒரு திருமடங்கட்டுவித்து, பல்வகைத் தாண்டகம் அடைவுதிருத்தாண்டகம் திருவங்கமாலை முதலிய திருப்பதிகங்களைப் பாடிக்கொண்டிருந்தார்.

இருக்கும்பொழுது, சீர்காழி என்னுஞ்சிவஸ்தலத்திலிருந்த சிவபாதவிருதயருக்குப் புத்திரராக அவதாரஞ்செய்தவரும், உமாதேவியார் திருமுலைப்பாலுண்டவருமான திருஞானசம்பந்தமூர்த்திகள் அப்பமூர்த்தி திருப்பூந்துருத்தியிலிருத்தலைக்கேள்வியுள்று, அதற்குச்சமீபத்திலேவந்தருளினார் அதை அப்பமூர்த்தி அறிந்து மனமகிழ்ந்து, அவரை எதிர்கொண்டு வணங்கும்படி சென்று அவர்வரும் எல்லையயடைந்து, திருச்சின்னத்தின் ஓசையைக்கேட்டு அவரைத்தரிசிக்கும்படி சூழ்ந்

ர அடியார்களுடைய நெருக்கத்தினாலே தம்மை ஒருவரும் இன்னாரென்று அறியாதபடி உட்புகுந்து அவர்ஏறிவரும் முத்துச்சிவிகையைத் தாங்குகின்றவர்களோடு தாமும் ஒருவராய்த் தாங்கிக்கொண்டு வந்தார். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பூந்துருத்திக்குமிகச் சமீபித்தவுடனே அப்பர் எங்குற்றார்' என்று வினவ அதைக்கேட்ட அப்பமூர்த்தி அடியேன் தேவரீரைத்தாங்கிவரும்பெருவாழ்வைப்பெற்றுஇங்குற்றேன். என்றார். உடனே திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அதிசீக்கிரஞ்சிவிகையினின்றும்இறங்கிமனப்பதைப்போடு அப்பமூர்த்தியைவணங்க, இவருந்தம்மை அவர்வணங்குதற்குமுன் தாம் அவரைவணங்க அதுகண்ட அடியார்களெல்லோரும் வணங்கி, ஆனந்தகோஷஞ் செய்தார்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்வாகீசரோடும்திருப்பூந்துருத்திசென்றுசுவாமிதரிசனஞ்செய்து கொண்டிருந்தார். அப்பர்சுவாமிகள் யான்செய்யுஞ்சிவபணிவிடைக்குஇடையூறுசெய்துகொண்டனேகம்பாஷண்டர்கள் இருக்கின்றார்களென்று சொல்லத், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பரமசிவத்தியானத்துடன் தாளத்தைக்கையிலெடுத்துத் தேவாரத்தாற்றுதிசெய்ய அந்தக்கொடுமையான கானத்தைப்பரமசிவன் கேட்டுப்பாதாளகெங்கையைவிட்டுச் சிவநிந்தகர்களாகியபாஷண்டர்களைக்கொன்றனர். அவ்வெள்ளத்திலகப்பட்ட ஐந்து சிவனடியார்களைத்திருஞானசம்பந்தசுவாமிகள்கண்டு அவ்வெள்ளத்தை அவர்களுக்கரையளவாக்கிப், பிழைக்கச்செய்தனர்.

அதன்பின், காவிரிநதி வடகரையில் திருநெய்தானத்திற்கும் ஐப்பியேசுரத்துக்கும் மத்தியிலிருந்த சிவக்ஷேத்திரத்தில் பாஷண்டர்கள்பிரவேசித்துவிஷ்ணுவாலயமாக்கியதை திருஞானசம்பந்தசுவாமிகள் கேள்வியுற்று அப்பர் சுவாமிகளுடன் அவ்விடம்வந்துப் பாஷண்டர்களைப்போக்கி பரமசிவனைப்பாடிப்பழமைபோற் சிவாலயமாக்கித் திருவையாற்றிற்கு வந்து, சிவதெரிசனஞ் செய்துகொண்டு திருப்பூந்துருத்தியை அடைந்தார்கள்.

7-வது அத்தியாயம் முற்றிற்று.

## 8-வது சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் காவேரி வழிவிட்ட அத்தியாயம்.

திருக்கைலாய மலையினின்று பரமசிவனனுப்பதிருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே ஆதிசைவ பிராமணகுலத்திலே சடையனார்க்கும் இசைஞானியார்க்குப்புத்திராராக அவதாரஞ்செய்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவக்ஷேத்திரங்கள் தோறுஞ் சென்று தெரிசித்துத் தேவாரப்பதிகம்பாடி சேரமான் பெருமாணாயனாரோடு திருவாரூரிலெழுந்தருளியிருந்தார்

பலநாட்சென்றபின், சேரமான்பெருமாணாயனார் சுந்திரமூர்த்திநாயனாரை வணங்கித், தம்முடைய ஊருக்கு எழுந்தருளி வரும்படி பிரார்த்திக்கச் சுந்திரமூர்த்தி நாயனார் அதற்கிசைந்து சேரமான் பெருமாணாயனாரோடும் எழுந்து போய், வன்மீகநாதரை வணங்கிக்கொண்டு, திருவாரூரை நீங்கி, மேற்றிசையை நோக்கிக் காவேரிநதியின் தென்கரை வழியேசென்று, திருக்கண்டியூரை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு புறப்பட்டார். அப்பொழுது வடகரையிலிக்கின்ற திருவையாறு எதிரேதோன்ற, சேரமான்பெருமாணாயனார் கண்டு வணங்கி, சுந்தரமூர்த்திநாயனாரைப்பார்த்து, சுவாமி! அடியேன் மனம் திருவையாற்றைவணங்கவிரும்புகின்றது. நாங்கள் இந்நதியைக்கடந்து போய்வணங்குவோம், என்றார். அதைக்கேட்ட சுந்திரமூர்த்திநாயனார், அக்காவேரிநதி இருகரையுமழித்து ஓடங்கள் செல்லாதபடி பெருகுதலைக்கண்டு, பரவும்பரிசொன்றறியேனான் என்னுந் திருப்பதிகந் தொடங்கி திருப்பாட்டினிறுதிதோறும் ஐயாறுடையவடிகளோ, என்றுசொல்லி அழைத்துப் பாடினார். அப்பொழுது கடவுள், கன்றுஅழைத்தலைக்கேட்டுக் கதறிக்கனைக்கின்ற பசுபோல, சராசரங்களெல்லாம் கேட்கும்படி ஓலம், என்று சொல்லியருளினார். உடனேகாவேரிநதி பிரிந்து வழிகாட்டியது. மேற்றிசையினீர் பளிங்குமலைபோல் நிற்க. கீழ்த்திசையினீர் வடிந்து நடுவழி மணற்பரப்பாயிருந்தது, அதனைக்கண்ட அடியார்களெல்லாரும், உரோமாஞ்சங்கொள்ள, ஆனந்தபாஷ்பஞ் சொரிய, அஞ்சலிசெய்தார்கள். சேரமான்பெருமாணாயனார் சுந்திரமூர்த்திநாயனாருடைய திருவடிகளை நமஸ்கரிக்க, சுந்தரமூர்த்திநாயனாரும் அவரை வணங்கி

கடவுள்உமக்கருளியதன்றோ, என்றுசொல்லிக் கடவுளைத்துதி த்துக்கொண்டு, அவரோடும் பரிஜனங்களோடும்நதியின் மத்தியி லிருக்கின்றவழியே போகையில், பின் திரும்பிப்பார்க்கக்கூடா தென்று சிவனடியார்களுக்குக் கட்டளையிட்டருளினார். அர்ச்ச னென்ற அடியார் சுந்திரமூர்த்திசுவாமிகள் சொல்லியதை மற ந்து திடும்பிப்பார்த்துக்காவேரி வெள்ளத்திலகப்பட்டு, உயிரிழ ந்து ஆக்கினாபுரமென்னுந் திட்டிலொதிங்கினார்.

சுந்திரமூர்த்தி ஸ்வாமிகள் காவேரி வடகரையில்வந்து, அடியவர்களை ப்பார்த்தார். அப்பெருழுது அர்ச்சனென்றவ ரில்லாதிருக்க வொர் பதிகம்பாடி அர்ச்சனெனயழைத் துக்கொண்டுதிருக்கோயிலின்ம தில்கள்வணங்கிக்கொடுக்க உள் ளேசென்று பஞ்சநதீசுவரரைத் தெரிசித்துக் கொண்டு திரும் பிப்பார்க்ககாவேரியின் முன்சென்றபடியே நடுவழியே வந்து தென்கரையிலேறினார். உடனேபிரிந்து மலைபோல் நின்றநீர் தொடர்ந்துபாய்ந்தது அதைக்கண்டு சுந்தரமூர்த்திநாயனாரும் சேரமான்பெருமாணாயனாரும் அதிசயித்துத் திருவருளைத் துதி செய்துகொண்டு, மேற்றிசையை நோக்கி வழிக்கொண்டு, கொங்கநாட்டை அடைந்தார்கள்

8-வது அத்தியாயம் முற்றிற்று.

## 9-வது மகரிஷிகள் முத்தியடைந்த அத்தியாயம்.

இலாதர், விபாதர், சனாதர், சனந்தர், சௌபரி, மாதேவர், சுங்க மர், சடாரர், ஆருணி, விருத்தர், கருணர், பக்கர், பாரகர், பதுமநாபர் விசாலாக்கர், கலலாதர், முதலிய மகரிஷிகள் ஒன்றுகூடி முக்திபடை வதற்கேதுவை யோசிக்கும்போது சிலர் காயத்திரி ஜபம் செய்வது உத்தமமென்றார்கள். சிலர் பஞ்சாக்ஷர மந்திரஞ்ஜெபிப்பது யோக்கிய மென்றார்கள். சிலர் பஞ்சாக்கினி மத்தியிற்றவஞ்செய்வது சிலாக்கிய மென்றார்கள். சிலர் ஆத்மஞானமடைவது நன்றென்றார்கள். சில தீர்த்தயாத்திரை செய்வது நன்மையென்றார்கள்.

அப்பொழுது நந்திகேச்சுவரர் அவர்களிடம் வந்தனர் மகரிஷிகளுபசரித்து முகமன்கூறி ஆதனத்திருத்தி நாங்கள் மோக்ஷமடைவதற்கேதுவைப் போதிக்கவேண்டுமென்று கேட்க, "நந்திதேவர், கைலாச ஸ்தானமாகிய ஜப்பியேசுவரத்தில் தக்ஷப்பிரஜாபதி யாகத்திற் பல்லுடைந்த சூரியனால் உண்டுபண்ணப்பட்ட சூரியபுஷ்கரணி தீர்த்தத்திலிருந்து, தினமொன்றுக்குப் பன்னீராயிரம் பஞ்சாக்ஷர மதிரஞ் ஜெபித்துத் தவஞ்செய்தால் முத்தியடையலாமென்று சொன்னார். மகரிஷிகள் அவ்வாறே ஜப்பியேசுரமடைந்து சூரியபுஷ்கரணி தீரத்திலிருந்து தவஞ்செய்து முத்தியடைந்தார்கள்.

இந்தப் பஞ்சநதமான்மியத்தையும் ஜப்பியேச
மான்மியத்தையும் எழுதினவர்கள் படித்த
வர்கள், பிறருக்குப் போதித்தவர்கள்,
கேட்டவர்கள் இகத்தில் புத்திரன்
முதலான சம்பத்தை யடைந்து
பரத்தில் சிவலோகத்தையும்
இஷ்டகாம்மியத்தையு
மடைவது உண்மை.

8074
91:38
உ. கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்

ஜப்பியேசுவர மான்மியம்
முற்றிற்று.